
தமிழரசு
16-8-78
50 காசு.

சென்னை, அண்ணா மேம்பாலம்

# அரசு சிமெண்ட்

உபயோகித்துக் கட்டப்பட்டது!




- கண்கவர் வண்ணம்
- துல்லியமான பூச்சு
- அதிகப்படி மணல் கலந்து உபயோகிக்கக் கூடியது.
- காங்க்ரீட் சுண்ணாம்புக் கலவை வேலைக்குகந்தது.
- அதிக உழைப்பு உறுதி
- கந்தக நீர் மற்றும் அமில மண்ணால் பாதிப்பு ஏற்படாது.

IS தர நிர்ணயங்களின் படி தரமேன்மையுடன் தயாரிக்கப்பட்டது.

ARASU CEMENT
TIDCO

**தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பொரேஷன் லிமிடெட்**
ஆலங்குளம் தொழிற்சாலை,
இராமநாதபுரம் மாவட்டம்

*மேற்கண்ட சார்பு நிறுவனத்தின் முழு உரிமையாளர்கள்:*

TIDCO

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்,**
150-A அண்ணாசாலை, சென்னை — 600 002.

## இந்த இதழில்...

நலிந்த பிரிவினர்க்கு நல்வாழ்வு
அளிப்பதே திட்டமிடுதலின் முக்கிய
குறிக்கோளாக இருக்க வேண்டும்
என்ற மையக் கருத்தை வலி
யுறுத்தி, வானொலியில் மாநிலத்
திட்டக் குழுத துணைத் தலைவர்
திரு கோவை செழியன் அவர்கள்
ஆற்றிய உரையினை இவ்விதழில்
வெளியிட்டுள்ளோம். தமிழகத்தில்
மின் வளர்ச்சிக்கு மேலும் ஒரு
மைல் கல் எனச் சொல்லக்கூடிய
சுருளியாறு மின்நிலையம் இத்
திங்கள் செயல்படத்
தொடங்குகிறது. அத்திட்டம்
குறித்து தமிழ்நாடு மின்வாரியத்
தலைவரின் கட்டுரையும் இவ்விதழில்
இடம் பெறுகிறது. 'வளர்ச்சிப்
பாதையில் தமிழகம்' என்னும்
கட்டுரைத் தொடரில் 'தமிழரசு'
கூட்டாசிரியர் திரு பி.சி. கணேசன்
அவர்களின் இரண்டாவது கட்டுரை
யை இவ்விதழில் காணலாம்.
வழக்கமான அம்சங்களும் உண்டு.

16-7-78 அன்று தமிழகத்தின்
தலைநகராம் சென்னையில் தென்
மாநில முதலமைச்சர்கள் மாநாடு
நடைபெற்றது. வரலாற்றுச் சிறப்பு
மிக்க அம்மாநாட்டில் கலந்து
கொண்ட முதலமைச்சர்களின்
திருஉருவப் படங்கள் இவ்விதழின்
மேலட்டையை அலங்கரிக்கின்றன.
நான்காவது அட்டை மற்றுமொரு
வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சி
யைத் தாங்கி வெளிவருகிறது.
நான்மாடக் கூடலாம் மதுரையம்பதி
மாநகராட்சியின் மேயராகத் தேர்ந்
தெடுக்கப்பட்டுள்ள திரு எஸ். முத்து
அவர்களிடம் மாண்புமிகு தமிழக
முதல்வர் திரு எம்.ஜி.ஆர் அவர்கள்
வெள்ளியிலான செங்கோலை அளிக்
கும் சிறப்புமிக்க நிகழ்ச்சியினை
இவ்வட்டையில் காணலாம்.

## விடுதலை நாள் விழா வாழ்த்து!

இந்தியத் திருநாட்டின்
32-வது விடுதலை நாள்
விழாவின் போது நாட்டு
மக்கள் அனைவருக்கும்
நல்வாழ்த்தினை 'தமிழரசு'
தெரிவித்துக் கொள்கிறது.




தமிழரசு

16-8-78

மலர். 9 இதழ். 4


### அடுத்த இதழில்....

மாண்புமிகு முதல்வர்
அவர்களின் விடுதலை
நாள் விழாப் பேருரை
இடம் பெறும்.

# நலிந்த பிரிவினரின் நல்வாழ்வுக்கே நமது திட்டங்கள்

**திரு. கோவை செழியன்**

துணைத்தலைவர், மாநிலத் திட்டக்குழு, தமிழ்நாடு அரசு.

திட்டமிட்டுச் செயலாற்றினால் பதினைந்து ஆண்டுகளில் ஜப்பான் நாட்டை விட நாம் சிறப்பான முன்னேற்றம் காண முடியும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்கள். நாட்டின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தவும், சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகளை நீக்கிடவும், சமூக மறுமலர்ச்சி ஏற்படவும், திட்டமிட்டுச் செயல்பட்டால்தான் எளிதில் முன்னேற்றம் காண முடியும் என்றுணர்ந்து ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தத் துவங்கினோம்.

இருபத்தைந்து ஆண்டுகள் திட்டமிட்ட வளர்ச்சிக்குப்பின் இப்போது திட்டமிடலில் ஒரு புதிய அத்தியாயத்திற்கு வந்துள்ளோம். மக்கட் தொகையில் 70 சதவீதத்தினர் வாழும் கிராமப்புற முன்னேற்றத்திற்கும், நமது நாட்டின் முக்கிய தொழிலான விவசாயத்திற்கும் இப்போது வளர்ச்சித் திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக ஆரம்ப காலத்தில் திட்டமிட்டவர்கள் பெரும்பாலும் மேலைநாடுகளின் திட்ட அணுகு முறையைப் பின்பற்றி முதலில் பெரிய தொழில்கள் பெருக வேண்டுமென்று விரும்பினார்கள்.

நமது நாட்டில் அன்றிருந்த பொருளாதார நிலை, கிடைக்கக் கூடிய தொழில்நுட்ப அறிவுத் திறன், எதிர்நோக்கியிருந்த முக்கிய சமூகப் பிரச்சினைகள், அவைகளுக்கு விரைவில் தீர்வு காணவேண்டிய அவசியம், ஆகியவற்றை முக்கியமாகக் கருதி திட்டம் தீட்டியிருப்பார்களேயானால் இன்று நம்மிடையே நிலவிவரும் பிரச்சினைகள் இவ்வளவு இருக்காது என்பது ஒரு கருத்து.

ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திலும் நாம் முக்கிய குறிக்கோள்களாகக் கொண்டிருந்தவை:—(1) தனிநபர் வருமானம் உயர வேண்டும்; (2) வேலைவாய்ப்பு வசதிகளை விரிவாக்க வேண்டும்; (3) மக்களின் வாழ்க்கைத் தர வசதி பெருக வேண்டும் மற்றும் (4) ஏற்றத் தாழ்வுகளை நீக்கி சமதர்ம சமுதாயம் ஏற்பட வேண்டும் என்பனவாகும். எனினும் இருபத்தைந்து ஆண்டுகள் திட்டமிட்ட வளர்ச்சிக்குப் பின்னும், வறுமையில் உழல்வோரின் எண்ணிக்கையும், வேலையின்றி இருப்போரின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கின்ற நிலையினைக் காணும்போது, இதுகாறும் நாம் செயல்படுத்திய திட்டங்களில் ஏதோ ஒரு குறை இருக்கிறது என்ற கேள்விக்குறி எழுகிறது. திட்டமிடலில் அடிப்படை மாறுதல்கள் தேவை என்பதை உணர்ந்து, இப்போது செயல்படத் துவங்கியிருக்கிறோம்.

தமிழ்நாட்டில் பெருமதிப்பிற்குரிய நமது முதல்வர் புரட்சித் தலைவர் உயர்திரு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு தீட்டிய முதல் ஆண்டுத் திட்டத்திலேயே (1978-79-ஆம் ஆண்டுக்கான திட்டம்) கிராமப் பகுதிகளுக்கும், நலிந்த பிரிவினருக்கும் முன்னுரிமை கொடுத்துள்ளது. அதற்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

எனது உரையில் புள்ளிவிவரங்களை அடுக்கி விவரிக்க விரும்பவில்லை. அது பட்ஜெட் உரை போல் ஆகிவிடும்; கேட்பதற்கும் சுவையாக இருக்காது. திட்டமிடும்போது ஒரு துறையின் வளர்ச்சி, மற்றதை பாதிக்காத வகையிலும், எல்லாத் துறைகளும் அதனதன் தகுதிக்கேற்றவாறு வளர நிதி ஒதுக்கிட வேண்டும்.

உதாரணத்திற்கு எடுத்துச் சொல்லவேண்டுமானால், விவசாய உற்பத்திப் பெருக்கத்திற்குக் கவனம் செலுத்தும் அதே நேரத்தில் கிராமப்புறங்களில் உற்பத்தியாகும் அதிகப்படியான விவசாயப் பொருட்கள் நகர்ப்புறங்களுக்கும் அருகிலுள்ள மார்க்கெட்டுகளுக்கும் வரவேண்டியிருப்பதால் கிராமங்களை இணைக்கும் சாலை வசதிகளையும், போக்குவரத்தையும் பெருக்க வேண்டியது அவசியம் என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதே வகையில் தொழில்துறை வளர்ச்சிக்கும், விவசாயத் துறைக்கும் நிலத்தடி நீரை பெருமளவு உபயோகிப்பதற்குத் திட்டம் வகுக்கும்போது அதற்கேற்ப மின்சக்தி உற்பத்தி இருக்கிறதா என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். மின் உற்பத்தி போதிய அளவில் அதிகரிக்கப்படாவிட்டால் மற்ற துறைகளின் வளர்ச்சியும் பாதிக்கப்படக்கூடிய நிலை ஏற்படும்.



இந்த நாட்டில் எந்த உற்பத்தி பெருகினாலும் பெருகாவிட்டாலும், ஜன உற்பத்தி பெருகிப் பொங்குகிறது. குடும்பக் கட்டுப்பாடு திட்டம் ஓரளவேதான் பயன் தந்திருக்கிறது. தமிழ்நாட்டில் 1951-ல் மூன்று கோடியாக இருந்த மக்கட்தொகை இப்பொழுது 4½ கோடியாக இருக்கிறது. பின்னால் வரக்கூடிய ஆண்டுகளில் இன்னும் அதிகமாகலாம். அவர்கள் தேவைகளையும் கருத்தில் கொண்டு திட்டமிடுதல் அவசியமாகும். பல்வேறு பிரச்சினைகளையும் ஆராய்ந்து, தமிழ் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக 1978 முதல் 1983 வரையிலான ஐந்தாண்டுகளுக்கான திட்டத்தை உருவாக்கும் பணியில் இன்று மாநிலத் திட்டக் குழு முழு முயற்சியுடன் ஈடுபட்டுள்ளது. திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாவன:

*(1)* அடுத்து பத்து ஆண்டுக் காலத்திற்குள் வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வுகண்டு, உழைக்க முன்வரும் அனைவருக்கும் வேலை வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்துவது,

*(2)* வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் வாழ்க்கைத் தரம் உயருவதற்கு உதவிகரமான திட்டப் பணிகளைச் செயல்படுத்தி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது.

மாதம் 65 ரூபாய்கூட உணவுத் தேவைகளுக்காகச் செலவு செய்ய இயலாத நிலையில் தமிழ்நாட்டில் மொத்த மக்கட்தொகையில் 52 சதவிகிதத்தினர் இருக்கின்றனர்.

வேலையில்லாப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் படித்தவர்கள் வேலை வாய்ப்பு நிறுவனங்களில் பதிவு செய்து வேலைக்காகக் காத்திருப்பவர்களின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் 4½ இலட்சத்திற்கு மேல் உள்ளார்கள்.



கிராமப் புறங்களில் விவசாயத்தையே நம்பி வாழும் பெரும் பகுதியினருக்கு வேலை வாய்ப்பு விவசாயப் பருவகாலத்தில் மட்டுமே உள்ளது.

இந்த இரண்டு பிரச்சினைகளுக்கும் தீர்வு காணுவதுதான் அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாகும்.

தமிழ்நாட்டிற்கான அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவு ரூ. 2020 கோடியாக இருக்கலாம் என்று மத்திய திட்டக்குழு யோசனை கூறியுள்ளது. விவசாயம், நீர்ப்பாசனம், மின்சக்தி, தொழில் வளம் ஆகிய பல்வேறு துறைகளின் முன்னேற்றத்திற்காகத் திட்ட காலத்தில் என்னென்ன வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளலாம் என்று தொகுத்து அளிப்பதற்காக 23 செயற்குழுக்களை அமைத்துள்ளோம். இக்குழுக்கள் கூறும் பரிந்துரைகளைப் பரிசீலனை செய்து ஐந்தாண்டுத் திட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுத்துச் செயல்படுத்தப்படும்.

நமது முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களே மாநிலத் திட்டக்குழுவின் தலைவராகவும் இருக்கின்றார். அவர்களின் மேலான ஆலோசனையின் பேரில் கிராமப்புற வளர்ச்சிக்கும், விவசாய முன்னேற்றத்திற்கும் முன்னுரிமை அளித்து, கணிசமான நிதி ஒதுக்கீடு செய்ய இந்த ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. இத்தகைய ஏற்பாடுகளினால் திட்டத்தின் பயன் இனி வரும் ஆண்டுகளில் நலிந்த நிலையில் வாழ்வோருக்குச் சென்றடையவும், அவர்களது வாழ்க்கைத் தரம் வறுமைக் கோட்டினின்றும் சற்று மேம்படவும் நிச்சயமாக உதவும் என்று இந்த அரசு நம்புகிறது.

ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட எல்லாத் திட்டங்களிலும் திட்ட முதலீட்டில் மூன்றில் ஒரு பங்குக்கு மேல் மின் சக்தி உற்பத்திக்காகச் செலவிடப்பட்டது. இந்தத் திட்டத்திலும் மின் உற்பத்திக்காக 35 சதவீதத்திற்கு மேலாக நிதி ஒதுக்கீடு செய்ய எண்ணியுள்ளோம். விவசாய வளர்ச்சியில் உயர்ரக விளைச்சல் தரக்கூடிய விதைகளை அதிக அளவில் விநியோகிக்கவும், பணப் பயிர்கள் சாகுபடியை அதிகப்படுத்தவும் கவனம் செலுத்தி வருகிறோம். விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலை கிடைத்தால்தான் விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்குவதற்கு உற்சாகமாக ஈடுபடுவார்கள். இதற்காக முதலமைச்சர் எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சிகள் 'வெற்றி பெற்று இத்திட்டகாலத்தில் விவசாயிகள் கணிசமான இலாபம் தரக்கூடிய அளவில் உற்பத்திப் 'பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்படும் என்று நம்புகிறேன்.

மக்களுடைய மேம்பாட்டிற்காகத்தான் திட்டமிடுகிறோம். திட்டப் பணிகள் அவர்களுடைய தேவையை நிறைவேற்றுவதாக அமைய வேண்டும். அப்போதுதான் திட்டங்களைச் செயல்படுத்துவதில் மக்களுடைய முழு ஒத்துழைப்பையும் பெறமுடியும். இதனை மனத்தில் கொண்டுதான் மக்களின் பல்வேறு பிரிவினர்களான விவசாயப் பெருங்குடி மக்களையும், சிறு, நடுத்தர, பெரிய தொழில் அதிபர்களையும் ஏனையோரையும் நேரில் சந்தித்து அவர்கள் தொழில் முன்னேற்றத்தில் உள்ள தடங்கல்களைக் கேட்டறிந்தேன். கோயமுத்தூர் திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் தருமபுரி மாவட்டங்களுக்குச் சென்று அங்குள்ளவர்களைச் சந்தித்து உரையாடினேன். இதர மாவட்டங்களுக்கும் வெகு விரைவில் செல்ல எண்ணியுள்ளேன். இந்தச் சந்தர்ப்பங்களில், முன்னேற்றத்திற்குத் தடங்கல்களாக இருப்பதை அகற்ற கூறப்பட்ட யோசனைகளைப் பரிசீலித்து, திட்ட காலத்தில் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தமிழ்நாட்டின் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு இனி

## அரசுப் பணிவிதிகள் ஆணைக்குழு நியமனம்

**தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கான அடிப்படை-பணிவிதிகளைத் தற்போதைய தேவைகளுக்கு ஏற்பச் சீரமைக்க ஆணைக் குழு ஒன்று அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.**

சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார குழுமத் துணைத் தலைவர் திரு எம். ஜி. பாலசுப்பிரமணியம், ஒழுக்கக் கண்காணிப்பு ஆணையாளர் சி. வி ஆர். பணிக்கர், நிதித்துறைச் செயலாளர் கே. வெங்கடேசன் அல்லது அவரது பிரதிநிதி, பொதுப்பணிததுறைத் தலைமைப் பொறியாளர் (பொது), அரசு துணைச் செயலாளர் தரத்தில் உள்ள ஓர் அதிகாரி அல்லது தலைமைச் செயலகப் பணி அதிகாரி ஆகியோர் இந்த ஆணைக் குழுவில் இடம்பெறுவார்கள். 6 மாதத்துக்குள் இந்த ஆணைக் குழு ஓர் அறிக்கை தயாரித்து அரசுக்குக் கொடுக்கும்.

வாய்ப்பில்லை. ஆனால், மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளை கேரள மாநில ஒப்புதலுடனும், ஒத்துழைப்புடனும் திருப்பி விடுவதன் மூலம், கோயமுத்தூர், இராமநாதபுரம், மதுரை ஆகிய மாவட்டங்களில் 8 இலட்சம் ஏக்கருக்கு மேல் பாசன வசதி கொடுத்து வறண்ட பூமிகளை வளம் கொழிக்கச் செய்யலாம். உபயோகப் படுத்தப்படாமல் உபரியாக அரபிக் கடலில் போய்ச் சேரும் தண்ணீரில் 82 TMC அளவே நாம் கேட்கிறோம். இது கேரள மாநிலத்தில் கிடைக்கக்கூடிய மொத்த நீர்வளமான 2200 TMC-ல் ஒரு சிறு பகுதியே ஆகும்.

## வடகிழக்குப் பகுதியில் நீர் மின்திட்டங்கள்



இந்தியாவில் வடகிழக்குப் பகுதியில் நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு நிறைய வாய்ப்பு உள்ளது. 1978 முதல் 83 வரையில் வடகிழக்குப் பகுதியில் நீர் மின்சார உற்பத்திக்கான திட்டங்களை மத்திய அரசு தயாரித்திருக்கிறது.

இந்தத் தகவலை மத்திய எரிபொருள் அமைச்சர் திரு பா. இராமச்சந்திரன் அவர்கள் தெரிவித்தார். மேகாலயா, மணிப்பூர், மற்றும் வடகிழக்குப் பகுதியில் மூன்று நீர் மின்சாரத் திட்டங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும், மேலும் பல நீர் மின்சாரத் திட்டங்களை மேற்கொள்வதற்கான ஆயத்த வேலைகள் மும்முரமாக நடத்தப்பட்டு வருகின்றன என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளிலிருந்து தண்ணீரைத் தமிழகத்துக்குத் திருப்பிவிடும் சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்கென்று மத்திய அளவில் நிபுணர் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அண்டை மாநிலமான கேரளாவுடன் இப்பொழுது நிலவிவரும் சுமுகமான நட்புணர்வும், நமது முதலமைச்சர் காட்டும் தனி ஆர்வமும், இத்திட்டத்திற்கான கேரள மாநிலத்தின் ஒப்புதல் விரைவில் கிடைக்குமென்ற நம்பிக்கை தெரிகிறது. தென் மாநில முதல்வர்கள் மாநாடு இதற்கு வழி வகுக்கும் என நம்புகிறேன். இத்திட்ட காலத்தில் பாசனத் துறைகளையும், கால்வாய்களையும் நவீனப் படுத்துதல் முழு முயற்சியுடன் செயல்படுத்தப்படும்.

கீழ்பவானி ஆற்றுக் கால்வாய்களுக்குக் கரைகளில் காரை பூசுதல் (லைனிங்), கல்லணை கால்வாய்களுக்குக் காரை பூசுதல் ஆகியவற்றிற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. ஏரிகள் பாசனத்தை நவீனப்படுத்த 111 கோடி ரூபாய் அளவிலான ஒரு திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்பு வசதியைப் பெருமளவு அதிகரிக்க சிறு தொழில்கள், கைத் தொழில்கள், குடிசைத் தொழில்கள் வளர்ச்சிக்கெனக் தனி கவனம் செலுத்தப் படுகிறது. மாவட்டங்களில் துவங்கப்படவிருக்கும் தொழில் மையங்கள் சிறு தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்தும். இப்பொழுது தொழில் தொடங்குவதற்கு முன்வருபவர்களுக்கு நிறைய சிரமங்கள் இருக்கின்றன. அரசாங்கம் நிதி உதவி செய்தும், அனுமதி கொடுத்தும், நிலம் கொடுத்ததற்குப் பின்பும், ரூ. 20 இலட்சம், 30 இலட்சம் மூலதனம் செய்து கட்டடங்களைக் கட்டி, இயந்திரங்களை நிறுவியதற்குப் பின்பும், ஹெல்த் கிளியரன்ஸ் சர்டிபிகேட், பஞ்சாயத்து சர்டிபிகேட் கிடைக்காத காரணத்தால் பல இடங்களில் உற்பத்தி தொடங்காமலே சிரமப்படுகின்றனர். இவைகளை மனத்தில் வைத்துத்தான் மாவட்ட தொழில் கேந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதிலுள்ள சிரமங்களை அது தவிர்க்கும்.

1948-ம் ஆண்டு இயற்றிய பேக்டரி ஆக்ட் சட்டத்தை மாற்ற பரிசீலனை செய்ய அரசாங்கம் விரும்புகிறது. மத்திய அரசு அண்மையில் 504 உற்பத்திப் பொருட்களைச் சிறு தொழில் கிராமத் தொழில், குடிசைத்தொழில் துறைக்கு ஒதுக்கவேண்டும் என்ற கொள்கையை அறிவித்திருக்கிறது. தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் தொழில் பேட்டையை அமைத்தல், சீர் செய்த மனைகள், சாலைப் போக்குவரத்து வசதிகள்செய்து கொடுத்தல், மின் சக்தி வழங்கல், நீர் வசதி செய்து கொடுத்தல், விற்பனை வசதிகளைப்பெருக்குதல், கடன் வழங்குதல் ஆகியவற்றில் திட்டம் அதிக அக்கறை காட்டும்.



ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சிக்கு (Integrated Rural Development) ஆக்கம் கொடுத்தல் இத்திட்டத்தின் மற்றொரு குறிக்கோளாகும். கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பை அதிகரிக்க, ஆங்காங்கு இருக்கக்கூடிய நீர்வளம், நிலவளம், மனித சக்தி இவைகளைச் சிறப்பாகப் பயன்படுத்துவதற்குப் பஞ்சாயத்து ஒன்றிய அளவிலான திட்டங்களைத் (Block-level Plans) தீட்ட வேண்டுமென்று மத்திய திட்டக் குழு வலியுறுத்திக் கூறியிருக்கிறது. திட்டமிடுதலில் இந்தப் புதிய அணுகுமுறை வேலையில்லாப் பிரச்சினையைப் பெருமளவில் தீர்க்க வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வறட்சியால் அடிக்கடி பாதிக்கப்படும் இராமநாதபுரம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் மாடு வளர்ப்பு, குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள், மானாவாரி பயிர் சாகுபடி இவைகளுக்கென பல அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் இம்மாவட்டத்திலுள்ள பொது மக்களின், குறிப்பாக ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், வறட்சியால் இவர்களுக்கு ஏற்படும் நலிவைக் குறைப்பதற்குமான வழி ஏற்படும்.

வேலை இல்லாதவர்களுக்கு வேலைவாய்ப்புத்தரவும், நாட்டின் மொத்த வருமானத்தை உயர்த்தவும், புரட்சித் தலைவரின் தலைமையிலான இந்த அரசு திட்டம் தீட்டி, ஒளிமயமான எதிர்காலத்திற்குப் பாதை வகுக்கிறது.

[6-8-78 அன்று மாலை 6.15 மணிக்குச் சென்னை வானொலியில் ஒலிபரப்பப்பட்டது.]

# சுருளியாறு நீர் மின் திட்டம்

கே. சொக்கலிங்கம், ஐ. ஏ. எஸ்.
தலைவர்,
தமிழ்நாடு மின்சார வாரியம்.

**1978** ஆகஸ்ட் திங்கள் 20-ஆம் நாள் மின் உற்பத்தியினைத் துவங்கும் சுருளியாறு நீர் மின் நிலையம் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஆளுகையின்கீழ் உள்ள நீர்மின் நிலையங்களில் பதினெட்டாவது நீர் மின் உற்பத்தி நிலையமாகும்.

சுருளியாறு வைகை ஆற்றின் ஒரு கிளை ஆறுகும். சுருளியாறும் அதன் முக்கிய கிளை ஆறுகளான மணலாறு, வென்னியாறு, எரவங்கலாறு ஆகிய ஆறுகளின் நீரைப் பயன்படுத்தி, ஒரு மின் உற்பத்தி நிலையம் அமைய இச் சுருளியாறு நீர் மின்திட்டம் வகை செய்துள்ளது. மதுரை மாவட்டத்தில் கம்பம் பள்ளத் தாக்குப் பகுதியைப் பெரியாறு நீர்ப்பிடிப்புப் பகுதியிலிருந்து பிரிக்கும் பச்சைக்குமாச்சி என்றழைக்கப்படும் மலைத் தொடரிலிருந்து சுருளியாறு பிறக்கிறது.

மொத்தம் 38.85 சதுர கிலோ மீட்டர் நீர்ப்பிடிப்புப் பகுதியை உள்ளடக்கிய பல்வேறு வடிநிலங்களிலிருந்து வந்து விழும் நீரானது நீர்க்கால்களுக்குக் குறுக்கே கட்டப்பட்டுள்ள நீர்ச்சேமிப்பு அணைகள்-சிறு அணைகளில் (Weirs) தேக்கி வைக்கப்பட்டு, அதன் பிறகு விரிகுடா முன் அமைந்துள்ள அணைக்குள் வெற்றிகரமாகத் திருப்பிவிடப்படுகிறது. விரிகுடா முன் அமைந்துள்ள அணையிலிருந்து, நீரானது சுரங்கப்பாதைவழியாகக் கொண்டு செல்லப்பட்டு பென்ஸ்டாக்கைச் சென்று அடைகிறது. இப்படி கொண்டு செல்லப்படும் நீரானது ஆண்டொன்றுக்கு 114 மில்லியன் யூனிட்டுகள் மின்சக்தியினை உற்பத்தி செய்யும்.

சுருளியாறு நீர் மின் திட்டத்திற்கு 1973 மே திங்களில் திட்டக்குழு ஒப்புதல் அளித்தது. இத்திட்டத்திற்காகும் செலவு, இறுதியாகச் செய்யப்பட்ட மதிப்பீட்டின்படி, 25.06 கோடி ரூபாயாகும். ஹேவேவிஸ் அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதியிலிருந்து நேரடியாக வந்து விழும் நீரும், ஹேவேவிஸ் திருப்பு அணையிலிருந்து குழாய் மூலம் கொண்டு செல்லப்படும் நீரும், 1406 மீட்டர் நீளமுள்ள ஒன்றோடொன்று தொடர்புபடுத்தும் சுரங்கவழி மூலமாக, மணலாறு அணையில் அமைக்கப்பட்டுள்ள நீர்த்தேக்கத்தினுள் செலுத்தப்படும்.

மணலாறு அணையில் தேக்கப்படும் நீரானது 2928 மீட்டர் நீளமுள்ள மற்றொரு சுரங்க வழி மூலமாக வென்னியாறு அணையில் உள்ள நீர்த்தேக்கத்துக்குக் கொண்டு செல்லப்படுகிறது. வென்னியாறு மதகில் தேக்கி வைக்கப்பட்டுள்ள சிறிதளவு நீரும் ஒரு சிறு சுரங்க வழியாக வென்னியாறு அணைக்குக் கொண்டுச் செல்லப்படுகிறது. மேற்சொன்ன எல்லா நீர்ப் போக்குகளும் வென்னியாறு

சுருளியாறு நீர் மின் நிலையம்



அணையில் தேக்கப்பட்டு 2015 மீட்டர் நீளமுள்ள மற்றொரு தொடர்புபடுத்தும் சுரங்க வழி மூலமாக எரவங்கலாறு விரிகுடா முன் அமைந்துள்ள அணைக்குக் ( Forebay dam ) கொண்டு செல்லப்படுகிறது.

எரவங்கலாறு விரிகுடா முன் அமைந்துள்ள அணையிலிருந்து, 803 மீட்டர் நீளமுள்ள குழாய் மூலமாக, நீரானது, 30 மீட்டர் ஆழமுள்ள சர்ஜ்-ஷாப்டுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து பட்டர்ஃபிளை வால்வு அவுசுக்குக் கொண்டு செல்லப்படுகிறது. அந்த வால்வு அவுசிலிருந்து 2904 மீட்டர் நீளமுள்ள பென்ஸ்டாக்கானது மின்நிலையத்துக்கு நீரைக் கொண்டு செல்கிறது. இந்தப் பென்ஸ்டாக் குழாய் உருக்குத் தகடுகளால் ஆனது.

இந்த பென்ஸ்டாக்தான் தமிழ்நாடு மின்வாரியம் கட்டியுள்ள பென்ஸ்டாக்குகளிலே மிகவும் நீளமானதாகும். அதுமட்டுமல்ல, இந்த நீர் மின்நிலையத்தில் மின் உற்பத்தி செய்ய நீர்வந்து விழும் உயரமானது 1,028 மீட்டர்களாகும். தென் கிழக்கு ஆசியாவிலேயே இதுதான் மிகவும் உயரமானது எனக் கருதப்படுகிறது.

இந்த மின் திட்டத்திற்கான கட்டட வேலைகளும் அதிகமானவையேயாகும். மூன்று அணைகளும் இரண்டு மதகுகளும் (சிறு அணைகளும்) ( Weirs ) இறுதியில் மின் உற்பத்திக்கு நீரைத் திருப்பி விடுவதற்காகக் கட்டப்பட்டுள்ளன. இந்த நீர் மின் உற்பத்தி நிலையத்தில் மிக உயரத்தில் உள்ள ஹேவேவிஸ் அணையானது இயற்கை அன்னையின் எழில் கொஞ்சும் இடத்தில் அமைந்துள்ளது. அவ்வணையைச் சுற்றிலும் கண்ணைக் கவரும் காடுகள்—ஓங்கி வளர்ந்த மரங்கள்-தேயிலைத் தோட்டங்கள் தான். சுற்றி எங்கு நோக்கினும் மரகதப்படுதா விரித்தாற்போல் கண்ணுக்கு விருந்தான அழகுக் குவியல்! அணையின் ஒரு பகுதி கற்களால் கட்டப்பட்டது....மற்றொரு பகுதி மண்ணாலானது.

ஹைவேவிஸ் நீர் திருப்பி விடும் சிறு அணையின் கீழ் நோக்கிப் பிரியும் பகுதியில் நீரைக் குழாய்' மூலம் மேலே ஏற்றும் பிரிவு ( pump house ) நிறுவப்பட்டுள்ளது. இங்கிருந்து உபரியான நீரானது குழாய் மூலம் ஹைவேவிஸ் அணைக்கே மறுபடியும் திருப்பிச் செலுத்தப்பட்டு மேலும் மின் சக்தி உற்பத்தி செய்ய பயன்படுத்தப்படுகிறது.

ஆக, இந்த மின் திட்டத்தில், மின் திட்டப் பகுதியில் அமையப் பெற்றுள்ள ஒவ்வொரு பகுதியுமே மின் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படுகிறது. மணலாறு அணை, வென்னியாறு அணை, எரவங்கலாறு அணை ஆகிய மூன்றுமே முழுக்க முழுக்க கல்லால் கட்டப்பட்ட அணைகளே யாகும். நீர்த்தேக்கங்களை ஒன்றோடொன்று தொடர்புபடுத்துவதற்காக வேண்டி, மொத்தம் 7454 மீட்டர் நீளமுள்ள பாறைப் பகுதியானது குடையப்பட்டு சுரங்கப்பாதை உருவாக்கப்பட்டுள்ளது. அச்சுரங்க வழிகளுக்கு எங்கெங்கு கான்க்ரீட் தேவையோ அங்கெல்லாம் கான்க்ரீட் பூசப்பட்டு அவை உறுதிப்படுத்தப் பட்டுள்ளன. 440 மீட்டர் உயரத்தில் வண்ணாத்திப்பாறை என்னும் இடத்திற்கு அருகில் இந்த மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. 35 மெகாவாட் மின் சக்தி உற்பத்தி செய்யும் திறன் கொண்ட யூனிட் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. உட்புற சுவிட்ச் கியர் உட்பட மின்உற்பத்தி சாதனங்கள் முழுமையும் ( Austrian Suppliers credit ) - கீழ் மெசர்ஸ் எலின்-யூனியன் ஆஸ்திரியா நிறுவனத்தால் சப்ளை செய்யப்பட்டவையாகும். இம் மின்நிலையத்திற்கான டர்பைன் செட்டானது மெசர்ஸ் வாய்த்—ஆஸ்திரியா நிறுவனத்தால் சப்ளை செய்யப்பட்டது. டர்பைன் 50,000 குதிரைத் திறன் கொண்டது. 979 மீட்டர் மொத்த உயரத்திற்குப் பயனுள்ள வகையில் வடிவமைப்புச் செய்யப்பட்டது.

டர்பைனின் மேல்மட்டப் பகுதியில் 700 மீட்டர் விட்ட அளவுள்ள ஒரு வால்வு இந்த மின் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. ''வால்வு ஹவுசி''ல் அமைக்கப்பட்டுள்ள பட்டர்ஃபிளை வால்வினைச் சேர்க்காமல் இது மற்றொரு வால்வாகும்! இரண்டு வால்வுகளும் அவற்றை இயக்கும் கருவிகளும் மெசர்ஸ் வாய்த் ஆஸ்திரியா நிறுவனம் சப்ளை செய்ததாகும்.

டர்பைனுடன் சேர்க்கப்பட்டு உள்ள மின் உற்பத்தி இயந்திரமானது 38.9 எம். வி. ஏ. திறனுடையது. வோல்டேஜ் 11. கே.வி ஆகும். மின் உற்பத்தி இயந்திரத்துக்குக் கார்பன்-டை-ஆக்சைட் நெருப்பணைக்கும் பாதுகாக்கும் முறை அமைக்கப்பட்டுள்ளது. எல்லா மின் உற்பத்திச்சாதனங்களையும் மெசர்ஸ்-எலின்-யூனியன் ஆஸ்திரியா நிறுவனம் சப்ளை செய்துள்ளது. ரிலே மற்றும் கண்ட்ரோல் போர்டுகள் உள்ள உட்புற சுவிட்ச் கியரும் இந்த நிறுவனமே சப்ளை செய்ததாகும். இந்த மின் உற்பத்தி இயந்திரத்தை டர்பைன் ஆகவும் இயக்கலாம்; அல்லது 'சின்கரனஸ்-கண்டென்சராகவோ' (Synchronous Condensor) இயக்கலாம். இதற்கென தானே இயங்கும் கண்ட்ரோல் இயக்கமுறை, முதன் முறையாக, இந்த மின் நிலையத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் அமைக்கப்பட்டுள்ளது. இதனால், மின் இயந்திரத்தை ஒரு சில விநாடிகளில் மின் உற்பத்தி செய்யும் இயந்திரமாகவோ, மின் சமனுக்கும் மோட்டாராகவோ இயக்கலாம். இப்படி இயக்கும் பொழுது, ஏதாவது தவறுகள் நேர்ந்து விட்டால், அவற்றைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். அந்தத் தவறுகள் பிரகாசமான ஒரு பகுதியில் சுட்டிக் காட்டப்படும் வகையில் ஓர் அமைப்பு உள்ளது. உடனடியாகச் சுலபமாகவும் தவறுகளைத் திருத்திக் கொள்ளவும் இதனால் முடிகிறது.

வெளிப்புறத்தில் நிறுவப்பட்டுள்ள மூன்று 13 எம்விஏ ஒற்றைக் கட்ட மின்மாற்றிகள் (Single Phase Transformers) மூலமாக உற்பத்தியாகும் வோல்டேஜ் அளவு 11 கே. வி. யிலிருந்து 110 கே. வி. யாக உயருகிறது.

அண்மையில் உள்ள பெரியாறு கயத்தாறு 110 கே. வி. இரட்டைச் சர்க்யூட் மின் கம்பித் தடத்தைப் பயன்படுத்தி, ஒரு 110 கே. வி. கம்பி மூலமாக தமிழ்நாடு மின் இணைப்புடன் இந்த மின்நிலையமானது இணைக்கப்படுகிறது.

சுருளியாறு அனல் மின் நிலையம் செயல்படத் துவங்குவதனால் தமிழ்நாடு மின் இணைப்பின் ( GRID ) நிறுவனத் திறன் ( Installed Capacity ) மேலும் 35 மெகாவாட் அதிகமாகும். அதாவது தமிழ்நாடு மின் இணைப்பின் மொத்த நிறுவனத்திறன் 2,459 மெகாவாட்டுகளாக உயரும். மின்தேவையில் உச்ச நேரக்காலத்தில் ஏற்படுகிற நெருக்கடியைக் குறைக்க இந்த மின்நிலையம் கணிசமான அளவில் உதவுவதுடன், சின்கரனஸ் கன்டென்சராகவும் செயல்படுமாதலால் கோடை காலத்தில் இந்நிலையம் மிகவும் பயனுள்ள வகையில் செயலாற்றும். மதுரையையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் மின் தாழ்வழுத்தத்தை (Voltage) தகுந்த அளவில் சீர் செய்து நல்ல மேம்பாட்டினையும் அடையமுடியும்.

இம்மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின் சக்தி மூலம் சுமார் 40 ஆயிரம் பம்பு செட்டுகள் கூடுதலாகப் பலன் பெறும்.



மதுரை மாநகராட்சி மேயராகவும் துணை மேயராகவும் 8-8-78 அன்று தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள திரு எஸ். முத்து அவர்களும், திரு கே. எஸ். சந்தானம் அவர்களும்



மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் தலைமையில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் சேலத்தில் 6-8-78 அன்று அரசுப் பொருட்காட்சியைத் திறந்து வைத்தார்.






சிறு கதை



# ஒரு கிழவனின் இறுதிப் பயணம்

— சத்தியபாரதி

அம்மாசிக் கிழவனின் உயிர் பிரிந்திருந்தது. மாமரத்தின் அடியில் சாய்ந்தபடி, ஒரு காலை நீட்டி, இன்னொரு காலை மடக்கிய நிலையில், இரண்டு கைகளையும் பரக்கப் போட்டபடி தலை சாய்ந்து, வெட்டிப்போட்ட மரக்கிளை துவண்டு கிடப்பதைப் போல அவன் இறந்து கிடந்தான்.

ஊருக்கு மேற்கே ஒரு பெரிய கடல்போன்ற குளமும், மற்ற மூன்று பக்கமும் பச்சைப் பசேல் என்ற வயற்காடும் சூழ்ந்த அந்த 'முல்லைக்காடு' கிராமத்தின் செல்லப் பிள்ளையாகத் திரிந்தவன் அம்மாசி.

குழந்தைகளும் பெரியவர்களுமாக ஒரு சிறு கும்பல் அந்த இடத்தில் கூடியிருந்தது. எல்லோருடைய பார்வையிலும் இரக்கம் ததும்பியிருந்தது.

அந்தக் கூட்டத்திலிருந்த ஆண்டிக்கோனார் சொன்னார். ''ம்ம்....அம்மாசிக் கிழவனின் கதையும் முடிஞ்சி போச்சு...... பிராயத்தில் எப்படி இருந்தான் தெரியுமா?....ஒரு மலையைப் பொறட்டற மாதிரி உடம்பு.... முகத்தில பெரிய கட்டபொம்மன் மீசை..எப்பவும் தலையில் முண்டாசு..வெட்டிட்டுவான்னா கட்டி இழுத்துட்டு வந்துடுவான்....அப்பேர்ப்பட்டவன் இப்படி அனாதையா, ரோட்டடி மரத்தில சாஞ்சால போயிட்டான்....'''' அவர் குரலில் அனுதாபம் தெரிந்தது.

அந்தப் பக்கமாக வந்த தலையாரி கொம்பையாத் தேவர் ''வே ஆண்டிக் கோனாரே..... என்னவே அங்க கூட்டமாயிருக்கு'' என்று கேட்டுக் கொண்டே அருகில் வந்தார்.

''நம்ம அம்மாசிக் கிழவன் செத்துக் கிடக்கான்.''

''அடப் பாவமே...இனிமேல் அந்தக் கிழவிபாடுதான் சிரமம்'' என்ற கொம்பையாத் தேவர், அந்தக் கூட்டத்தில் உள்ள சிறுவர் கூட்டத்தில், யாராவது சேரிக் குழந்தைகள் இருக்கிறார்களா என்று பார்த்தார்.

ஒரு ஓரத்தில், பரட்டைத்தலையுடன், வலதுகைப் பெருவிரலைச் சூப்பியபடி நின்று கொண்டிருந்த வேலாயுதக் குடும்பனின் மகளை அடையாளம் கண்டு கொண்ட தேவர், ''தா...பிள்ள இங்க வா'' என்றார்.

அவள் வாய்க்குள்ளிருந்த விரலை எடுத்தபடி அவர் அருகே வந்து நின்றவாறு ஏறிட்டுப்பார்த்தாள்.

''ஒம் பேரு என்ன?''

''எச்சிமி''

''லட்சுமியா.? கெட்டிக்காரி... ஒரே ஓட்டமாப் போயி, அந்த வீதி ஓரமா ஒரு குடிசை இருக்கு பாரு..... அங்க.... அம்மாசிக் கிழவன் பெஞ்சாதி சுடலி இருப்பா....அவகிட்ட போயி இதைச் சொல்லிட்டு வர்றியா?''

அவர் கைகாட்டிய திசையில் அந்தச் சிறுமி ஓடினாள்.

அம்மாசி எங்கிருந்தோ வந்து அந்த ஊரில் குடியேறியவனல்ல. தலைமுறை தலைமுறையாக அந்த 'முல்லைக்காடு' கிராமத்து மண்ணில் பிறந்து, அந்த மண்ணிலேயே உருண்டு புரண்டு விளையாடி அதே மண்ணை உழுது பயிரிட்ட விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன்.

அந்த மண்ணின் மீது மாறாத பிரியம் கொண்டவன். ''இந்த மண்ணைவிட எனக்குச் சொந்தமானது வேறெதுவுமில்ல'' என்று ஓயாமல் சொல்லி வந்தவன்.

ஒரு கடும் கோடையில், ஊரெல்லாம் வறட்சி கோலோச்சிய கொடிய நேரத்தில், ஊருக்குத் தெற்கே ஒதுங்கி வாழ்ந்து வந்த சேரி மக்களெல்லாம் பிழைப்பைத் தேடி வேற்றூர்களுக்குச் சென்ற நேரத்திலும் கூட, இந்த அம்மாசிக் கிழவனும் அவனது மனைவி சுடலியும் மட்டும் தனித்து நின்று, 'மழை விழும்; பூமித்தாய் நனைந்து நமக்கெல்லாம் படியளப்பாள்'' என்கிற நம்பிக்கையில், குளத்திலிருந்து வயலுக்கு வரும் வாய்க்கால்களைச் செம்மைப்படுத்தும் பணியில் ஒரு வெறியோடு ஈடுபட்டிருந்ததை அந்த ஊரே கண்டு வியந்தது.

இறந்துபோன பெரிய பண்ணையார், தம் பையனிடம் உழைப்பைப் பற்றிப் பேசும்போதெல்லாம் இந்த அம்மாசிக் குடும்பத்தைத்தான் உதாரணம் காட்டுவார்.

ஒரு மழைக்கால ராத்திரியில் தான் அம்மாசியின் வாழ்க்கையில் இடி விழுந்தது.

பகலில் வரப்பு வெட்டிவிட்டு வந்தான். படுக்கும்போது தோள் பக்கம் லேசாக வலித்தது. காலையில் படுக்கையிலிருந்து அவனால் எழ இயலவில்லை. பக்கவாதம்! நாக்கு இழுத்துக் கொண்டது.

அசையாமல் கிடந்து, பொங்கும் நீருடன் கண்களை மிரள விழித்து, வாய் குளறும் புருஷனைப் பார்த்து முகத்திலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழுதாள், சுடலி.

அந்தக் கிராமத்து நாட்டு வைத்தியர் ஒருமாதம் சிகிச்சையளித்த பிறகு, அம்மாசி எழுந்து தடியூன்றி, காலை இழுத்து, இழுத்து நடக்கையில், அதுவரை அவன் பார்த்து வந்த பண்ணை வீட்டு ''உழவு'' கைமாறியிருந்தது!

நெஞ்சில் வேதனையோடு, அம்மாசி பெரிய பண்ணை வீட்டு வாசலுக்கு நேராகத் தள்ளி நின்றுகொண்டு, துண்டைக் கக்கத்திலே இடுக்கியபடி, ''சாமி...... அடியாள் வந்திருக்கேன் சாமி..' என்றபோது அவனுடைய துயரங்கள் எல்லாம் நீராகக் கண்களில் திரண்டிருந்தது!

ரொம்பவும் சிநேகத்தோடு அம்மாசியிடம் நலம் விசாரித்த பண்ணையார், ''உனக்கு ஏலாதுன்னுதான் உழவை மாத்தினேன்...அதனால் என்ன.... நீ பரம்பரை பரம்பரையா இந்தப் பண்ணைக்கு உழைத்தவன்..... பூவுக்கு அரைக்கோட்டை நெல்லு தரச்சொல்றேன்....நீ போ'' என்றபோது அவரை விசுவாசத்தோடு பார்த்து நெடுஞ்சான் கிடையாக விழுந்து வணங்கினான் அம்மாசி.

பருவகாலங்கள் மாறின. ஒரு இலையுதிர் காலத்தில் பண்ணையார் பரலோகம் போனபோது அம்மாசியின் வயிற்றில் விதி மண்ணை அள்ளிப் போட்டது. பண்ணையாரின் மகன் பொறுப்புக்கு வந்தபோது அம்மாசியின் மானியம் நிறுத்தப்பட்டது.

அடுத்தவேளை அரைவயிற்றுக் கஞ்சிக்கு வழியில்லாமல் போனபோதுதான், முதன் முதலாக அவன் வாழ்க்கையை வெறுத்தான், ஒரு உச்சிப் பொழுதில் வயிற்றிலும் பசித்தீ சுட்டபோது அம்மாசி கையில் சட்டியேந்தி ஒவ்வொரு வீட்டு வாசல் முன்பும் பேசாமல் போய் நிற்கலானான்.

ஒரு கவளம் சோறு பெறுவதற்காக, அந்த மகத்தான மனிதன், தன் கம்பீரங்களையெல்லாம் இழந்து அலைந்தபோது அரசாங்கத்தின், 'மூப்புக்கால உதவித் தொகைத் திட்டம்' பற்றி அவருக்குச் சொல்லப்பட்டது.

எல்லா இரவுகளுக்கும் ஒரு விடியல் உள்ளதுபோல, அந்தத் தள்ளாத கிழவனுக்கும், அவனது மனைவிக்கும் இந்த அரசு ஒரு புதிய ஒளியைக் காட்டியிருந்தது; உதவிப்பணம் என்ற ஊன்றுகோல் அந்த வயோதிகத் தம்பதியைக் கீழே விழுந்து விடாமல் தாங்கிப் பிடித்தது.



காலையில் நீரும் சோறுமாகச் சாப்பிட்ட பின், மெதுவாகக் கிராமத்திற்குள் நடந்து திரும்புகிற பழக்கத்தை மேற்கொண்டிருந்தவன் அம்மாசி. அப்படி நடக்கிற சமயங்களில் நீர் நிரம்பிய வயல்களில் பச்சைப்போர்வை விரித்ததுபோல் இளம் பயிர் அசைந்து ஆடுகிற காட்சியைப் பார்க்கிறபோது ஒரு உன்னதமான சுகத்தை அவனால் பெற முடிந்தது.

அன்றும் அவ்வாறு நடந்து திரும்புகிறபோது திடீரென்று தொண்டை உலர்ந்து, கண்கள் இருளுவதை உணர்ந்தான். மூச்சு விட முடியாதபடி ஒரு திணறல் ஏற்பட்டது. அந்தத் தெரு ஓரத்து மாமரத்தில் சாய்ந்தவன், நிரந்தர நித்திரையில் ஆழ்ந்து போனான்!

* * * *

கறுத்து மெலிந்த வயோதிக மேனி; அழுக்குப் படிந்த கந்தல் சேலை, கையில் கோணல்மானலான ஒரு ஊன்றுகோல், முடிக்கப்படாத, சிக்குப்பிடித்த கட்டைக் கூந்தல்-இவள்தான் சுடலி.

தூரத்தில் வரும்போதே அவளுடைய அழுகையொலி மாமரத்து அடியில் கூடியிருந்த கூட்டத்திற்குக் கேட்டது.

அருகே வந்து அம்மாசியின் அசைவற்ற உடலைப் பார்த்ததும் அவளுக்குள் ஒரு சோகப் பிரவாகம் உருவாகியிருக்க வேண்டும். ''என் அதியாரி...போயிட்டீகளா...'' என்று, கேட்போர் நெஞ்சை உருக்கும் விதமாகக் கேட்டு, கண்களின் நீர் நதியாகப் பெருக்கெடுக்க அழுது அரற்றினாள்.

நாற்பது வருட தாம்பத்தியத்தில் அம்மாசியின் எண்ணங்களையெல்லாம் செயலாக்கிய இனிய துணை இந்தச் சுடலி.!

விழுதில்லா மரத்திற்கு வேர்தான் உயிர்; அந்த வேருக்குக் கேடு வந்தால் மரமென்ன செய்யும்?

பிள்ளையில்லாத சுடலிக்கு ஒரே ஆதரவு அம்மாசிதான். இன்று அம்மாசியும். இறந்துவிட்டார். சுடலி தவித்துத் துடித்தாள்.

வார்த்தையால் விவரிக்க இயலாத சோக உணர்வுகளை எல்லாம் அவள் அழுகை உணர்த்தியது.

சற்று நேரம் கழித்து?, ஆண்டிக் கோனார் சுடலியிடம் ஆறுதலாக, ''சரி..சரி..ரொம்ப அழுவாதெ.. இனிமே என்ன செய்ய முடியும்? ஆகவேண்டிய காரியத்தப் பாரு..'' என்றார்.

அப்போதுதான் சுயஉணர்வு பெற்று, தனக்குள்ள பொறுப்பை உணர்ந்தாள் சுடலி. கிழவனை நல்லடக்கம் செய்ய வேண்டும். அவனைக் கொண்டுபோக 'பாடை' கட்ட வேண்டும். வைக்கோல் மெத்தை, இரண்டு நீண்ட அகத்திக் கம்புகள், பூமாலை, எரியூட்டத் தேவையான விறகு, எருக்கட்டிகள், கிழவனுக்குக் கோடிவேட்டி-துண்டு, இறுதிப் பயணம் என்றால் இவையெல்லாம் அவசியம் வேண்டுமே!

இவற்றை வாங்கப் பணம் வேண்டும். சுடலி எங்கே போவாள்? என்ன செய்வாள்?

தன் திக்கற்ற நிலை கண்டு அவளால் தாளமுடியவில்லை. 'உங்களை அடக்கம் பண்ணக்கூட வக்கில்லாதவளா இருக்கேனே....நீங்க இருந்து நான் போயிருக்கப்படாதா? சுடலி கதறினாள்! என்ன செய்றதுன்னு தெரியாமல் நிலைகுலைந்து போய் நின்றாள் அவள்!

அந்த நேரத்தில் சுந்தரம் அங்கு வந்தான். பட்டப்படிப்புப் படித்துவிட்டு, வேலை தேடி அலையாமல் விவசாயத்தைக் கவனித்து வரும் இளைஞன் அவன். கிராம மக்களுக்கு அரசாங்கத்தின் புதிய திட்டங்களைப் பற்றிச் சொல்வான். அந்தப் பலன்களை உரியவர்கள் பெற, அவனே உதவியும் புரிவான். சுருக்கமாகச் சொன்னால் வள்ளுவர் சொன்ன, 'உடுக்கை இழந்தவன் கை'யாக உதவுகிற நட்பு நெஞ்சுசத்திற்குச் சொந்தக்காரன் அவன்.

விவரங்களை அறிந்து கொண்ட சுந்தரம், முதலில் சுடலியை அமைதிப்படுத்தினான். அம்மாசியின் உடலை அவனது குடிசைக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்தான். பிறகு சுடலியிடம் சொன்னான். ''பாட்டி..இந்த மாதிரி ஏழை அரிசனங்க இறந்துபோனா.....அவங்கள அடக்கம் செய்றதுக்காக, நம்ம தமிழக அரசு ஐம்பது ரூபாய் தருகிறது. இது இப்ப புதுசா வந்திருக்கிற திட்டம். ஆகையினால் நீங்க பணமில்லையேன்னு கவலைப்படாதீங்க''

தனது டைரியிலிருந்து, ஒரு நீண்ட வெள்ளைத்தாளை எடுத்து, சுடலியின் விண்ணப்பத்தை எழுதினான். அவளுடைய இடது கைப் பெருவிரல் ரேகையைப் பதிந்துகொண்டு, சைக்கிளில் கிராம அதிகாரியைப் பார்க்கப் பறந்தான், சுந்தரம்.

அரசின் நேர்மையான நிர்வாகத்தில், சுடலியின் விண்ணப்பம், முறையாகவும், விரைவாகவும் அதிகாரிகளின் கையெழுத்தைப் பெற்றது.

திக்கற்ற அந்த ஏழை அரிசன விவசாயியின் இறுதிச் சடங்கிற்காகத் தமிழக அரசின் உதவிப் பணமான ஐம்பது ரூபாய் மாலையில் சுடலிக்குக் கிடைத்தது.

எதிர்பார்த்ததை விடச் சிறப்பாக, தாரை தப்பட்டைகளுடன் அம்மாசிக் கிழவனின் இறுதிப் பயணம் புறப்பட்டது.

முல்லைக்காடு மண்ணிலேயே பிறந்து முல்லைக்காட்டை விட்டு ஒரு நிமிடம் கூடப் பிரியாமல் வாழ்ந்த-பிறந்த மண் மீது பாசத்தைக் கொட்டி வாழ்ந்த-அந்த ஏழை அரிசன விவசாயியின் உடல் அந்த மண்ணோடு மண்ணாகக் கலந்து விட்டது.

## தமிழில் கையெழுத்து

அரசு ஆவணங்களில் அலுவலர்கள் தமிழில் கையெழுத்துப் போட வேண்டும் என்று தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

* * *

அரசு அலுவலகங்களில் கடைநிலை ''ஊழியர்''கள் அணியும் ''டவாலி'' ஒழிக்கப்பட்டது. இதற்கான உத்தரவைத் தமிழக அரசு பிறப்பித்துள்ளது.

அரசு அலுவலகங்களில் பணிபுரியும் கடைநிலை ஊழியர்கள் தோளில் இருந்து இடுப்பு வரை குறுக்கு வசத்தில் சிவப்புநிறத் துணிப் பட்டையும், கையில் ஒரு பட்டையும் அணிந்து இருப்பார்கள். இந்த ''டவாலி''யைத் தமிழக அரசு ஒழித்து அதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இந்த 'டவாலிக்கு'ப் பதில் அவர்களுக்குப் பெயர் பொறிக்கப் பட்ட வில்லைகள் (''பேட்ஜ்'') வழங்கப்படும். இந்த வில்லைகளை கடைநிலை ஊழியர் சட்டையின் பை அருகே மாட்டிக் கொள்ள வேண்டும்.

# மலேரியா சில உண்மைகள்!

டாக்டர் எஸ். பட்நாயக்,
இயக்குநர் : மலேரியா தேசிய ஒழிப்புத் திட்டம்.

நம் நாடு இன்று பெரியம்மையினின்றும் முற்றும் விடுபட்டுவிட்டது. ஆனால், மலேரியா நோய் மீண்டும் நம்நாட்டில் தலையெடுக்கத் தொடங்கியிருக்கிறது. 1965-ல் மலேரியா ஒழிப்பில் கணிசமான முன்னேற்றம் அடைந்து விட்டதாகக் கருதியிருந்த நிலையில், மீண்டும் அந் நோய் நம் நாட்டில் பரவத் தொடங்கியிருக்கிறது.

தேசிய அளவில் மலேரியா ஒழிப்புத் திட்டம் 1958-ல் தொடங்கப்பட்டது. அப்பொழுதிலிருந்து படிப்படியாகக் குறைந்து 1965-ல் மலேரியாவினால் நோய்வாய்ப்படுவோர் அல்லது இறப்பவர் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்து காணப்பட்டது. 1952-ல் மலேரியாவினால் தாக்கப்பட்டோரின் எண்ணிக்கை 7.50 கோடி பேராக இருந்தது. அது படிப்படியாகக் குறைந்து 1965-ல் ஓர் இலட்சம் பேர்தான் மலேரியா நோய்வாய்ப்பட்டனர். அந்த ஆண்டில் ஒருவர்கூட மலேரியாவினால் இறக்கவில்லை. இதன் விளைவாக, நாட்டின் பல்வேறு துறைகளில் தொழில், வேளாண்மை, நிலச் சீர்திருத்தப் பணிகள் ஆகியவற்றில் நல்ல வளர்ச்சியினைக் கண்டோம்.

1976-ல் மலேரியாவினால் பாதிக்கப்பட்டவரின் எண்ணிக்கை 64.67 இலட்சமாகும். இப்படி மலேரியாவினால் பாதிக்கப்பட்டவரின் எண்ணிக்கை உயர்ந்து வருவதோடு 1974-லிருந்து மலேரியாவினால் இறந்தவர்களும் உண்டு. 1964 லிருந்து மலேரியாவினால் பாதிக்கப்பட்டவரின் எண்ணிக்கை எப்படிப் பெருகி வந்திருக்கிறது என்பதைக் கீழ்க்கண்ட புள்ளிவிவரங்கள் நன்கு புலப்படுத்தும்:

| ஆண்டு | | (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1964 | ... | 1.12 |
| 1965 | ... | 1.00 |
| 1966 | ... | 1.48 |
| 1967 | ... | 2.78 |
| 1968 | ... | 3.74 |
| 1969 | ... | 3.48 |
| 1970 | ... | 6.94 |
| 1971 | ... | 13.22 |
| 1972 | ... | 14.28 |
| 1973 | ... | 19.30 |
| 1974 | ... | 31.67 |
| 1975 | ... | 51.66 |
| 1976 | ... | 64.67 |
| 1977 | (உத்தேசமாக) | 45.66 |

இப்படி மலேரியா அதிகமாகி வருவதற்குக் காரணங்கள் பல உண்டு. நிர்வாகப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை, சிறப்புப் பயிற்சி பெற்ற ஊழியர் பற்றாக்குறை இவற்றைக் காரணமாகச் சொல்லலாம். மற்றொரு காரணம் மலேரியா ஒழிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்களிடையே ஏற்பட்டிருந்த ஒரு தேக்கமான மனப்பான்மை.

மீண்டும் மலேரியா தலையெடுத்திருப்பது எல்லாருக்கும் கவலை அளிக்கின்ற ஒன்றாகும். வேளாண்மையில், தொழில் துறையில் முன்னேற்றத் திட்டப்பணிகளில் ஈடுபட்டிருப்போரின் தேக ஆரோக்கியத்தை மலேரியா வெகுவாகப் பாதிப்பதால் அதன் விளைவாக ஏற்படுகின்ற சமுதாய, பொருளாதார இழப்புகள் மிகப்பெரிய அளவினதாக இருக்கின்றன.

நிதி, நிர்வாக ஊழியர் பற்றாக்குறையை ஈடுபடுத்த 1977-ல் ஏப்ரல் முதல் சிறிது மாற்றப்பட்ட மலேரியா ஒழிப்புத் திட்டம் நமது நாட்டில் மேற்கொள்ளப்பட்டது.

இப்படி மாற்றப்பட்ட மலேரியா ஒழிப்புத் திட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறு:

*மலேரியாவினால் மரணம் என்பதைத் தடுப்பதும், நோயுற்ற காலத்தினைக் குறைப்பதும்.

*தொழில் விவசாயத்துறை முன்னேற்றத்தைப் பாதிக்காமல் பார்த்துக் கொள்வது.

*இதுவரை அடைந்துள்ள வெற்றிகளைப் பேணிப் பாதுகாத்துக் கொள்வது.

மேற்கண்ட இலட்சியங்களை அடைய அரசு மலேரியா ஒழிப்புத் திட்டத்தில் மூன்று அம்சங்களை முனைப்பாகச் செயல்படுத்தத் தீர்மானித்துள்ளது. அவையாவன; அரசுத் திட்டங்கள்; மலேரியா ஒழிப்பில் தீவிர ஆராய்ச்சியும், பயிற்சியும், மக்களை இப்பணியில் நேரடியாக ஈடுபடச் செய்வது.

**அரசுத் திட்டங்கள் :**

இத்திட்டத்துக்காக அரசு அதிக அளவில் பணத்தையும், பொருளையும் செலவழித்திருக்கிறது. சமீப காலம் வரை தனது சுகாதார செலவினத்தில் 75 சதவிகிதத்தை மலேரியாவைக் கட்டுப்படுத்துவதில் மத்திய அரசு ஈடுபடுத்தி வந்தது. தற்சமயம் மலேரியாவினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு மலேரியா ஒழிப்புச் சாதனங்களையும், கொசு ஒழிப்பு மருந்துகளையும் வழங்க இரட்டிப்பு நிதி வழங்கத் தீர்மானித்துள்ளது. தீவிர பணியாற்றத் தேவைப்படும் ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் முடிவு செய்துள்ளது.

**ஆராய்ச்சியும், பயிற்சியும்**

தொடர்ந்து கிருமிநாசினி மருந்துகளையும் மற்ற மருந்துகளையும் உபயோகிப்பதால் பல பிரச்சினைகள் எழுகின்றன. அப்பிரச்சினை

களைத் தீர்க்க தீவிர ஆராய்ச்சி தேவைப்படுகிறது. சில இடங்களில் மலேரியா கொசுக்கள் வீடுகளில் வசிக்கும் மக்களைக் கடித்துவிட்டு டி. டி. டி. யினால் இறப்பதற்கும் தயாராய் அவ்வீட்டுச் சுவர்களில் நிற்பதில்லை. அவை மக்களைக் கடித்துவிட்டு வெளியே பறந்து சென்றுவிடுகின்றன. மற்றொரு பிரச்சினை, மக்கள் உடலில் சென்றுவிடும் மலேரியாக் கிருமிகள் அவற்றைக் கொல்ல மக்கள் ஏற்கும் மருந்துகளை வெற்றி கொண்டுவிடுகின்றன. எனவே, ஆராய்ச்சியாக மேற்கொள்ள வேண்டிய அவசரப் பிரச்சினையாக இது உருவெடுத்துள்ளது. வைசூரியைத் தடுக்க குழந்தைப் பருவத்திலேயே அம்மை குத்தப் படுவது போல மலேரியாவைத் தடுக்க மருந்து ஒன்று கண்டுபிடிக்க இத்துறையில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியில் முதற்கட்டம் ஊக்கமளிப்பதாக இருப்பினும், இன்னும் அது சோதனை கட்டத்தில்தான் இருக்கிறது

இந்தத் திட்டத்திற்கு நன்றாகப் பயிற்சிப் பெற்ற ஆட்கள் பெருவாரியாகத் தேவைப்படுகின்றன. எனவே, இந்தத் தேவையை நிறைவு செய்ய தீவிர பயிற்சி அளிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

**மக்களின் ஒத்துழைப்பு**

மலேரியா மனிதனால் உண்டாக்கப்படும் பிரச்சினை. மலேரியாவினை ஒழிக்க மக்கள் முழு அளவில் தீவிரமாகப் பங்கு கொள்ளவில்லை எனில், அரசு முயற்சிகள் பயன் அளிக்க அளிக்கா. தங்கள் ஆரோக்கியத்தைப் பேண மக்கள் பொறுப்பேற்று கிடைக்கும் வசதிகளை நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தேசிய அளவிலான மலேரியா ஒழிப்புத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற, பின் கண்ட முறையில் மக்கள் ஒத்துழைக்க வேண்டியது அவசியம்.

**மலேரியாவைக் கட்டுப்படுத்த மக்கள் ஆற்ற வேண்டிய பணி**

கிராமப்புறங்களில் பூச்சிக் கொல்லி மருந்துகளைத் தெளிப்பதுதான் இந்தத் திட்டத்தின் முக்கியப் பணி. டி. டி. டி. மருந்து தெளிப்பினால் கொசுக்கள் சாகவில்லையெனில், அதற்கு மாற்றாக பி. எச். ஸி. என்ற மருந்தும், மலேத்தியான் என்று மருந்தும் தெளிக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டிலும் மே முதல் செப்டம்பருக்குள் இருமுறை டி. டி. டி. தெளிக்க வேண்டும்.

**நினைவில் கொள்ள வேண்டிய குறிப்புகள்**

**தெளிப்பு மருந்தைப் பற்றி**

*வீட்டின் எல்லா அறைகளும் மாட்டுக் கொட்டில் உள்பட இம்மருந்து தெளிக்கப்பட வேண்டும்.

*சுவரில் தொங்கவிடப்படும் காலண்டர்கள், போட்டோக்கள், படங்கள் ஆகிய வற்றை நீக்கிவிட்டு சுவர்களில் தெளிக்கப்பட வேண்டும்.

*எல்லாத் தின்பண்டங்களும், சாப்பிடக் கூடிய பொருட்களும், மாட்டுத் தீவனங்களும் மருந்து தெளிக்கும்போது மூடி வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

*கிராமத்திலுள்ள எல்லா வீடுகளிலும் மருந்து தெளிக்கப்பட வேண்டும். இல்லையேல் மருந்து தெளிக்கப்படாத வீட்டிலிருந்து கொசுக்கள் வரக்கூடும். எனவே, மற்ற வீடுகளில் மருந்து தெளித்த பயன் அற்றுப் போகும்.

*மருந்து தெளித்த பின்னர் இரண்டரை மாத காலத்துக்குச் சுவர்களில் சுண்ணாம்பு அடித்தலோ, மண் பூசுவதோ ஆகியவை செய்யக் கூடாது. அப்படிச் செய்தால் மருந்து தெளித்த பயன் கிடைக்காமல் போகும்.

*கிராம இளைஞர்கள் கிராம வீடுகளில் மருந்து தெளிக்கும் பணியில் உதவ முன்வர வேண்டும். மலேரியா மேற்பார்வையாளர்கள் மேற்பார்வையில், இளைஞர்கள் தாங்களாகவே பூச்சி கொல்லி மருந்தைத் தெளிக்கும் வேலையை மேற்கொள்ளலாம்.

தங்கள் இல்லங்களுக்கு வரும் சுகாதார ஊழியர்களின் பணியை மக்கள் உற்சாகமாக வரவேற்க வேண்டும். வீட்டில் யாருக்கு ஜுரம் வந்தாலும் அதைப் பற்றிச் சுகாதார அதிகாரிகளுக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்.

*ஊராட்சிகள் மலேரியா ஒழிப்புப் பகுதி பணியில் ஆற்ற வேண்டிய பணி மிக முக்கியமானதாகும். கொசு ஒழிப்பு மருந்தைத் தெளிக்கும் பருவத்தில் தெளிப்புப் பணிக்கு ஊராட்சிகள் தொண்டர்களை வழங்கி உதவ வேண்டும். இத் தெளிப்புப் பணிக்குத் தேவையான சிறப்புப் பயிற்சியை உள்ளூர் ஆரம்பச் சுகாதார நிலையத்தின் ஊழியர்களோ அல்லது மாவட்ட மலேரியா ஒழிப்பு அலுவலகத்தின் ஊழியர்களோ வழங்குவார்கள். இந்தத் தொண்டர்கள் சாக்கடைகளைத் தேங்கவிடாமல் நன்கு வடிகால் வெட்டியும் ஆங்காங்குள்ள பள்ளங்களைக் கிராம மக்களின் உதவியோடு நிரப்பி நல்ல பணி புரியலாம்.

ஊராட்சிகள் மருந்து விநியோக நிலையங்களையும், ஜுரக் குணப்படுத்தும் டிப்போக்களையும் நிறுவி, ஜுரத்துடன் வரும் நோயாளிகளின் வயதுக்கு ஏற்ப குளோரோக்வின் மாத்திரைகளை வழங்கி உதவலாம். ஊராட்சிகளுக்கு மாத்திரைகளும் மற்ற பொருட்களும் அரசு இலவசமாக வழங்கும்.

குளோரோக்வின்

| வயது | மில்லி கிராம் | மாத்திரை அளவு |
|---|---|---|
| 1 வயது | 75 | ½ |
| 1—4 வயது | 150 | 1 |
| 4—8 வயது | 300 | 2 |
| 8—14 வயது | 450 | 3 |
| 14ம் அதற்கு மேலும் | 600 | 4 |

இந்த மருந்தை வெறும் வயிற்றில் சாப்பிடக்கூடாது என்பதைக் கவனிக்க வேண்டும்.

மலேரியா ஜுரம் உச்சக் கட்டத்தில் இருக்கும் போது சாப்பிடக்கூடாது என்று சிலர் எண்ணுகிறார்கள். இது உண்மையல்ல. மலேரியா குணமாவதற்கு இந்த மருந்தை இருவேளை சாப்பிட்டால் போதும் என்பதனையும் நினைவில் கொள்ள வேண்டும்.

**மலேரியாவைப் பற்றிச் சில உண்மைகள், அதனைத் தடுக்கும் சில முறைகள் :**

*மலேரியா ஜுரம் ஒரு நுட்பமான கிருமியினால் ஏற்படுகிறது. இந்தக் கிருமி மலேரியா கிருமி, மலேரியா ஜுரம் வந்த நோயாளியிடமிருந்து அனபிலிஸ் என்னும் பெண் கொசுவின் மூலம் ஆரோக்கியமுள்ள மனிதனுக்குக் கொண்டு செல்லப்படுகிறது. இந்த வகைக்கொசு வீட்டினுள்ளும், வெளிப்புறத்திலும் தேங்கி நிற்கும் தண்ணீரில் வளருகிறது.

*மலேரியா ஜுரம் உதறலோடும், குளிரோடும் பொதுவாக வரும். அந்த ஜுரம் ஒருநாள் விட்டு ஒருநாள் அல்லது வாரத்திற்கு ஒருமுறை இப்படி ஒரு குறிப்பிட்ட காலம் இடைவெளி விட்டுவிட்டு வரும்.

*எந்த ஜுரமும் மலேரியா ஜுரமாகலாம். இரத்தப் பரிசோதனை செய்தால் ஜுரம் மலேரியா ஜுரமா அல்லவா என்பது தெரிந்து போகும். எனவே, இரத்தத்தைப் பரிசோதனை செய்து மலேரியா ஜுரம் என்று தெரிந்தால் குளோரோக்வின் மாத்திரைகள் சாப்பிடுங்கள்.

*உங்கள் இரத்தத்தில் மலேரியா இருக்கிறது என்று தெரிந்தால் மலேரியா ஊழியரின் மேற்பார்வையில் 5 நாட்களுக்கு ப்ரைமாப்வின் மாத்திரை உட்கொள்ளும் தீவிர சிகிச்சையை மேற்கொள்ளுங்கள்.

*வீட்டிலும் வெளியிலும் தண்ணீரைத் தேங்கவிடாதபடி செய்தால் கொசு வளர்ச்சியைத் தடுக்கலாம்.

*வீட்டிலுள்ள தண்ணீர் நிரப்பும் எல்லாத் தொட்டிகள், பானைகள், பக்கெட்டுகளை வாரத்திற்கு ஒருமுறை காலி செய்தால் கொசு வளர்ச்சியைத் தடுக்கலாம்.

*காலி தகர குவளைகளிலும் மற்ற டப்பாக்களிலும், ரப்பர் டயர்களிலும் தண்ணீர் தேங்கவிடாதீர்கள்.

*நகர்ப்புறங்களில் தண்ணீர் நிரப்பி வைக்கும் மேல்மாடித் தொட்டிகள், அறையைக் குளிர்விப்பதற்காக உபயோகப்படுத்தும் மின்சாரச் சாதனங்களின் தேக்கும் தண்ணீர் ஆகியவற்றை வாரத்துக்கு ஒரு முறை காலி செய்து நிரப்ப வேண்டும்.

மலேரியா ஒழிப்பு என்பது மகத்தான பணி. இப்பணியில் வெற்றி பெற அனைவரும் தங்களால் ஆன வரை ஒத்துழைக்க வேண்டும். அரசு மட்டும் நடவடிக்கை எடுத்தால் போதாது. மக்களின் முழு ஒத்துழைப்பு மிகவும் அவசியம். அப்பொழுதுதான் மலேரியாவை எதிர்த்து நாம் தொடுத்துள்ள போரில் முழுவெற்றியை அடைய முடியும்!

# புதுக்கோட்டையில் கிராமிய நூற்புத் திட்டங்கள்



புதுக்கோட்டை மாவட்டத்தில் திருக்கோகர்ணம், உசிலாங்குளம், திருவரங்குளம் ஆகிய இடங்களில் கிராமிய நூற்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன.

இதில் திருவரங்குளத்தில் செயல்படும் கிராமிய நூற்புக் கூடத்தில், இலங்கை அகதிகளைச் சேர்ந்த 32 பெண்கள் பணி புரிந்து வருகின்றனர்.

புதுக்கோட்டை கிராமிய நூற்பு நிலையம்—இந்த அலகில் 25 ஆறு கதிர் உலோக ராட்டைகள் உள்ளன. அரசுடைமையாக்கப்பட்ட இந்தியன் ஓவர்சீஸ் வங்கியிலிருந்து மூலதனம் மற்றும் கருவிகள் கடனாக மொத்தம் ரூ. 55,652 நிதி உதவி பெறப்பட்டுள்ளது. 32 பேர் பணிபுரியும் இந்த அலகில் ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சம் சிட்டங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஒரு நபர் ரூ. 3 முதல் ரூ. 3.50 வரை சராசரி நாட்கூலியாகப் பெறுகின்றார்.

கருவிகளுக்கு உண்டான தொகை வாராவாரம் வேலை செய்பவர்களிடம் கூலியிலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. நான்கு ஆண்டுகளில் இராட்டையின் தொகை சரிசெய்யப்படும். பிறகு இராட்டைகள் நூற்போர்களுக்குச் சொந்தமாகி விடுகின்றன.



# அரிசன ஆதிவாசிகள் நலம்

வி. சண்முகம்
மாவட்ட அரிசன நல அலுவலர்,
தருமபுரி

**1965** அக்டோபர் மாதம் 2-ஆம் தேதியன்று தர்மபுரி மாவட்டம் தனி மாவட்டமாக ஏற்படுத்தப்பட்டது.

தமிழகத்தில் அரிசன மக்கள் அதிகமாக உள்ள மாவட்டம் தருமபுரி மாவட்டமாகும்.

கடந்த மக்கட் தொகைக் கணக்கெடுப்பின்படி இம்மாவட்டத்தில் அரிசனங்கள் 2,27,825 பேரும், ஆதிவாசிகள் 30,123 பேரும் உள்ளனர். அரிசனங்கள் மற்றும் ஆதிவாசிகளின் கல்வி, சமூக, பொருளாதார மற்றும் வாழ்க்கை மேம்பாட்டிற்கான திட்டங்கள் அரிசன மற்றும் ஆதிவாசிகள் நலத்துறையினரால் செவ்வனே நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

**கல்வி :**

அரிசன மாணவ மாணவிகளுக்காக இம்மாவட்டத்தில் மூன்று ஆரம்பப் பள்ளிகள், இரண்டு, இடைநிலைப் பள்ளிகள், ஐந்து ஓராசிரியர் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 829 மாணவர்களும், 716 மாணவிகளும் கல்வி பயிலுகின்றனர். இவர்களுக்கு மதிய உணவு இலவசமாக வழங்கப்படுகிறது. மாணவ மாணவிகளுக்கு எழுது பலகை மற்றும் பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆண்டு இருமுறை பொங்கல் மற்றும் தீபாவளிப் பண்டிகைகளின்போது இலவசச் சீருடைகள் வழங்கப்படுகின்றன.

**விடுதிகள் :**

கல்வி பயிலும் அரிசன மாணவ மாணவிகளுக்காக இம்மாவட்டத்தில் மொத்தம் 24 விடுதிகள் நடத்தப்படுகின்றன. இவற்றில் மொத்தம் 1,024 மாணவ, மாணவிகள் தங்கிக் கல்வி பயிலுகின்றனர். விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு (கல்லூரி விடுதி நீங்கலாக) ஆண்டு இருமுறை அதாவது பொங்கல், தீபாவளிப் பண்டிகைகளின்போது சீருடைகள் வழங்கப்படுகின்றன. விடுதியிலிருந்த மாணவர்களுக்குத் தனிவகுப்பு ('டியூஷன்') நடத்தப் பகுதி நேர ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் உடல் ஆரோக்கியத்தைக் கவனிக்க அரசு மருத்துவமனை மருத்துவர்கள் அடிக்கடி விடுதிகளுக்கு வந்து பரிசோதிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவர்களுக்கு இலவசமாகப் புத்தகங்களும் வழங்கப்படுகின்றன. கல்லூரி மாணவர்களின் பொது அறிவு வளர்ச்சிக்காகச் செய்தித் தாள்கள் வாங்கித் தரப்படுகின்றன.

**கல்வி உதவித் தொகை :**

பள்ளி இறுதி ஆண்டு மாணவர் வரை நடப்பு ஆண்டு முதல் உதவித் தொகையினை ரொக்கமாகக் கொடுப்பதற்குப் பதிலாகப் பாடப் புத்தகங்கள் வாங்கி இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. உதவித் தொகை ரொக்கமாகக் கொடுத்தால் சிலர் அதனைச் சரிவரக் கல்விக்காகப் பயன்படுத்தாமல் போவதால், இம்முறையினை அரிசன நலத்துறை மூலம் அரசு செயல்படுகிறது. கல்லூரியில் உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கும், தொழிற் கல்வி கற்கும் மாணவர்

களுக்கும், ஆசிரியர் பயிற்சி பெறுவோருக்கும் கல்வி உதவித் தொகை இரு தவணைகளில் வழங்கப்படுகிறது.

இதன் மூலம் எல்லா ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், அரசு உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றில் பயிலும் அரிசன மற்றும் ஆதிவாசிகள் இனத்தைச் சேர்ந்த 8,775 மாணவர்களும், 3,788 மாணவியரும், கல்லூரியில் பயிலும் 250 மாணவர்களும் பயனடைந்து வருகின்றனர்.

**சமூக நிலை :**

தாழ்த்தப்பட்ட சகோதரர்களின் குடியிருப்புகள் மிகவும் சுகாதாரக் கேடான இடங்களில் இருப்பதாலும், இட நெருக்கடியால் பல குடும்பங்கள் ஒரே வீட்டில் இருக்க நேரிட்டுள்ள துயரத்தைப் போக்கவும் அரசு அவர்களுக்காகக் கூடுமானவரை இதர சமூகத்தினரின் குடியிருப்புகளுக்கு அருகிலேயே நிலம் வாங்கி அவர்களுக்கு வீட்டு மனைகளை இலவசமாக வழங்கி வருகிறது. அவ்வாறு இதுவரை தருமபுரி மாவட்டத்தில் 227 கிராமங்களில் வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் வீட்டு மனைக்காகவும், இதர காரியங்களுக்காகவும் 143 கிராமங்களில் நிலம் கையகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**இலவச வீடுகள் :**

1973 வரை அரசினரே இலவசமாக இச்சமூகத்தினருக்கு வீடுகள் கட்டிக் கொடுத்து வந்தனர். இதனை வேகமாகவும் திறம்படவும் செய்து முடிக்க இப்பணியை அரிசன வீட்டு வசதி முன்னேற்ற வாரியத்திடம் அரசு ஒப்படைத்துள்ளது. இதுவரை இம்மாவட்டத்தில் 103 கிராமங்களில் 2,769 இலவச வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

அரிசன காலனிகளின் சுகாதார நலனுக்காகப் பாதை வசதிகள், பொதுக் குளியலறைகள், கழிவு நீர் வடிகால்கள் ஆகியவையும், சிறு பாலங்கள், வெள்ளத் தடுப்புச் சுவர்களும் அரிசன நலத் துறையால் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன. நடப்பு ஆண்டில் பாதைகள் 1, சிறுபாலங்கள் 22, (இவற்றில் 14 முடிவு பெற்றுள்ளன). தடுப்புச் சுவர்கள்-2, கழிவு நீர் வடிகால்கள்-5 (இதில் ஒன்று முடிவு பெற்றுள்ளது., குளியலறைகள்-6 (இதில் 2 முடி. பெற்றுள்ளன) ஆகிய வேலைகள் நடைபெற்று வருகின்றன.

**குடிநீர் :**

தருமபுரி மாவட்டத்தில் குடிநீர்க் கிணறுகள் இல்லாத காலனிகளே இல்லை எனலாம். மேலும், இதனைச் சிறப்பான முறையில் கையாளப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க, வீட்டு வசதி வாரியத்தினர் ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

**விவசாயம் :**

அரிசன மக்களில் இரண்டு ஏக்கருக்குக் குறையாமல் புஞ்சை நிலமுள்ளவர்களுக்குக் கிணறு வெட்ட 2,000 ரூபாய் இலவச மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் நிதி நிலைமைக்குத் தக்கவாறு 20 பேர்கள் பயன்பெறுகின்றனர். இதுவரை இத்திட்டத்தின்கீழ் 167 அரிசனங்கள் பயனடைந்துள்ளனர்.

ஏழை அரிசன விவசாயிகளுக்கு நிதி நிலையை அனுசரித்து ஆண்டுக்கு ஒருமுறை 10 முதல் 15 இணை உழவு மாடுகள் மான்யமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 164 அரிசனங்கள் பயன்பெற்றுள்ளனர்.

தற்சமயம் அரிசன நலத்துறையால் கறவை மாடுகள் வாங்கக் கடன் வழங்கப்படுவதில்லை. அதற்குப் பதிலாகக் கூட்டுறவுத் (பால்வளம்) துறை மூலம் தலா ரூ. 1,500 வழங்கப்படுகின்றது. இக்கடன் தேசிய வங்கிகளின் மூலமாக வழங்கப்படுகின்றன. இத்தொகையில் 500 ரூபாயை அரசு ஏற்றுக் கொள்கிறது. மீதமுள்ள தொகை 1,000 ரூபாயை சுலப மாதாந்திர தவணைகளில் வங்கிக்குத் திருப்பிச் செலுத்த வேண்டும். இக்கடனைப்பொருத்தமட்டில் ஒரு நபர் இரு கடன் பெறத் தகுதியுள்ளவர்.

**தொழில் முன்னேற்றம் :**

அரிசனங்கள் தங்களுக்குத் தெரிந்த தொழில்களை மேம்படுத்தி வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள அரிசன நலத் துறையில் வட்டியில்லாத் தொழிற் கடன்கள் அந்தந்தத் தொழிலுக்குத் தக்கவாறு வழங்கப்படுகின்றன.

உதாரணமாக, மளிகைக் கடை, தானிய வியாபாரம், பழம் மற்றும் காய்கறிக்கடை, சைக்கிள் (வாடகை) கடை, பெட்டிக் கடை, சிறிய உணவு விடுதி ஆகியவற்றிற்காகவும் தொழில் நுணுக்கப் பயிற்சிப் பெற்றவர்களுக்கு 'ஒர்க்ஷாப்', 'லேத் வைண்டிங்' போன்ற தொழில்களுக்கும், அச்சகம், மருந்துக்கடை போன்ற பெரிய தொழில்களுக்கும் வட்டியில்லாக் கடன்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 63 அரிசனங்களுக்குத் தொழில் நடத்த வட்டியில்லாக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

**தொழிற் கருவிகள் :**

உழவு மாடுகள் வழங்குதல் போலவே (1) சலவைத் தொழில் (2) தச்சுத் தொழில் (3) தையல் தொழில், (4) தோல் காலணிகள் (5) சிகை அலங்கரிக்கும் தொழில் ஆகியவைகளுக்குக் கருவிகள் தகுதி பெற்ற ஏழை அரிசனங்களுக்கு வழங்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் இதுவரை 92 அரிசனங்களுக்குச் சலவைத் தொழிற் கருவிகளும், 113 அரிசனங்களுக்குத் தச்சுத் தொழிற் கருவிகளும், 248 அரிசனங்களுக்குத் தையல் இயந்திரங்களும், 68 அரிசனங்களுக்குச் செருப்பு தைக்கும் கருவிகளும், 103 அரிசனங்களுக்கு முடிதிருத்தும் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

**ஆதிவாசிகள் :**

கல்வி, சமூக, பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள ஆதிவாசிகளுக்கும், அரிசனங்களைப் போன்றே சகல உதவிகளும், அரிசன நலத்துறையால் அளிக்கப்படுகின்றன. தருமபுரி மாவட்டத்தில் இவர்களுடைய மேம்பாட்டிற்காகக் கீழ்க்கண்ட திட்டங்கள் அரிசன நலத்துறையினால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

**கல்வி :**

ஆதிவாசிகள் அதிகமாக உள்ள வாச்சாத்தி, நரிப்பள்ளி, எஸ். எஸ். தாதம்பட்டி ஆகிய ஊர்களில் அரசினர் மலைச்சாதி உறைவிடப்பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கைகள்: வாச்சாத்தி மாணவர்-73, மாணவியர்-34, நரிப்பள்ளி-மாணவர் 36, மாணவியர்-14, எஸ். தாதம்பட்டி-மாணவர் 33, மாணவியர்-17 பேர்களாகும்.

மேற்காணும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு உணவும், உறைவிடமும் இலவசம். ஆண்டு இருமுறை பொங்கல், தீபாவளிப் பண்டிகைகளின் போது சீருடைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் மற்றும் அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்குப் பள்ளி இறுதியாண்டு வரை இலவசப் பாடப் புத்தகங்

களும், கல்லூரியில் பயிலுவோருக்கு உதவித் தொகையும் வழங்கப்படுகின்றன.

**விவசாயம் :**

வசதியில்லா சிறு விவசாயிகளுக்குக் கிணறு வெட்ட கிணறு ஒன்றுக்கு ரூ. 2,000 வீதம் மானயம் வழங்கப்படுகிறது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் 143 ஆதிவாசிகள் பயனடைந்துள்ளனர்.

ஆதிவாசிகளுக்கு ஆண்டு ஒரு முறை நிதி நிலையை அனுசரித்து 8 முதல் 10 இணை ஏர்மாடுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.



ஆதிவாசிகளுக்குத் தையற் கருவிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை 72 தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

**தீண்டாமை ஒழிப்பு :**

நமது நாட்டில் தொன்று தொட்டு இருந்து வரும் சமூக நோயான தீண்டாமையை ஒழிக்க அரசு தன்னாலியன்ற எல்லா முயற்சிகளையும் செய்து வருகிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் சமூகத்தில் தலை நிமிர்ந்து நிற்க கல்வி, பொருளாதார மேம்பாட்டிற்கான எல்லா உதவிகளையும் செய்து வருகிறது. இருந்தும் இக்கொடுமை பூரணமாக ஒழிக்கப்படவில்லை. இதற்காக அரிசனங்களும் நமது சகோதரரே எனக் காட்டும் வகையில் மாதந்தோறும் ஒவ்வொரு வட்டத்திலும் ஏதாகிலும் ஒரு கிராமத்தில் அரசு ஆதரவின் கீழ் தீண்டாமை ஒழிப்பு விழா நடத்தப்படுகிறது. ஆண்டுதோறும் மாவட்ட அளவில் அண்ணல் காந்தியடிகள் மறைந்த நாளான ஜனவரி 30-ஆம் தேதி விரிவான முறையில் அரசு சார்பில் தீண்டாமை ஒழிப்பு விழா நடைபெறுகிறது. இதில் அரிசனங்களுடன் இதர சமூகத்தினரும் சகோதரன்போல் ஒன்று கலந்து அரிசனங்களின் மேம்பாட்டிற்கான வழிகளையும், தீண்டாமையை அறவே ஒழிப்பதற்கான திட்டங்களையும் ஆராயகின்றனர்.

**கலப்புத் திருமணம் :**

சாதிக் கொடுமைகளைக் களைய இன்னுமொரு முக்கிய வழி கலப்புத் திருமணந்தான். கலப்புத் திருமணங்களால் நாளடைவில் சாதிகளே இல்லாமற்போய் எல்லாரும் ஓர் குலம் என்றாகும் நிலை வரப்போகிறது. எனவே, இத்தகைய திருமணங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து, இத்திருமணங்களை ஊக்குவிக்கும் பொருட்டு, அரசினர் கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதியினருக்குத் தங்கப்பதக்கமும், ரொக்கப் பரிசும் வழங்குகின்றனர். இந்த ஆண்டில் ஐந்து கலப்புத்திருமண ஜோடிகள் பரிசும், பதக்கமும் பெற்றுள்ளனர்.

தீண்டாமையை ஒழிக்க குடி உரிமைப் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இதன்கீழ் தீண்டாமையை அனுசரிப்பவர்கள் மீதும், அரிசனங்கள் தங்களுடைய சமுதாய உரிமைகளை அடைவதில் அவர்களுக்கு அநீதி இழைப்பவர்கள் மீதும் கடுமையான கிரிமினல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், தாழ்வு மனப்பான்மை அகற்றவும், அரிசன மக்கள் சுகாதாரமாய் நல்வாழ்வு வாழவும் அவர்களுடைய சுற்றுப்புறச் சூழ்நிலைகள் துப்புரவாய் இருப்பது மிகவும் அவசியம். எனவே, அரிசன மக்களை இவ்விஷயத்தில் விழிப்புறச் செய்யவும், ஊக்கமளிக்கவும் ஆண்டுக்கு ஒருமுறை துப்புரவாயும், சுகாதாரமாயும் பராமரிக்கப்பட்டு வரும் ஆறு அரிசனக் காலனிகள் சிறந்தவை எனத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றிற்கு அரசினரால் வானொலிப் பெட்டி பரிசாக வழங்கப்படுகிறது.

# சமுதாயக் கொடுமைகள் அகல...

**ஆர். ஆர். திவாகர்**
**தலைவர், காந்தி அமைதிக் குழு.**

**ம**துவிலக்கு என்பது இந்தியாவில் புதிய விஷயமல்ல. என்னுடைய பள்ளி நாட்களிலேயே இதைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். 1906-வது ஆண்டில் ஒரு சிறிய குழுவுடன் சேர்ந்து மதுக்கடைகள் முன்னால் மறியல் செய்தேன். அது இன்னும் நினைவில் இருக்கிறது.

லோகமான்ய திலகர் பூனாவில் கள்ளுக்கடை மறியல் போராட்டத்தை ஆரம்பித்தார் என்று அவரது 'கேஸரி' பத்திரிகையில் படித்த உடன் நாங்கள் பெல்காமில் மறியலைத் தொடங்கினோம்.

அடுத்து, மதுவிலக்கு அவசியம் தான் என்பதை அண்மையில் எனக்கு நினைவூட்டிய ஒரு சம்பவம் மார்ச் 24-ஆம் தேதி கர்னாடகத்திலுள்ள தவளகிரியில் நடந்தது. நாங்கள் சென்ற கார் ஒரு கோயிலின் அருகே நிறுத்தப்பட்டிருந்தது. ஒரு இளைஞன் குடி போதையில் கையினால் குத்துவதும் காலால் உதைப்பதுமாக இருந்தான். அவனைப் பிடித்து எங்களுடைய டிரைவர் கீழே படுக்கவைக்கவேண்டியதாயிற்று. ஏனெனில், வேறு எதைச் செய்தாலும் அவனைக் கட்டுப்படுத்த இயலாது. இச்சம்பவம் நூற்றுக் கணக்கான பேர் கண்ணெதிரிலேயே நடந்தது.

மதுவிலக்கு நிச்சயம் அமல் செய்யப்பட வேண்டும் என்பது வரட்டுப் பிடிவாதமோ அல்லது அர்த்தமற்ற ஆசையோ அல்ல. நாட்டின் பல இட்சக்கணக்கான மக்கள் குடிப்பழக்கத்தால் பாதிக்கப்பட்டிருப்பதைக் காணும் எவருமே இந்தக் கருத்தினை ஒத்துக்கொள்வார்கள்.

சட்டபூர்வமாக மதுவிலக்கை அமல்படுத்துவதற்கு ஆதரவாகவும் எதிராகவும் விவாதிக்கப்படுவது பழங்காலத்திலிருந்தே நடைபெற்று வருகின்ற ஒன்றுதான். கௌடில்யரின் அர்த்த சாஸ்திர காலத்திலேயே (கி.மு. 41-வது நூற்றாண்டு) மது குடிப்பதற்குக் கட்டுப்பாடு இருந்ததை நாம் அறிகிறோம். 1874-84 கால கட்டத்தில், ஏன் அதற்குப் பின்னும் அமெரிக்காவில் சட்டபூர்வ மதுவிலக்கு அமலில் இருந்தது அனைவருக்கும் தெரிந்ததுதான். மதுவிலக்கை ஆதரித்துத் தீவிரப் பிரச்சாரம் செய்த பெண்மணி குமாரி வில்லார்டு என்பவர் சொன்னார்: ''மது வியாபாரத்தால் ஆண்டுதோறும் பணம் தங்கமாகக் கொட்டுகிறது. அந்தத் தங்கத்தில் நமது அன்பிற்குரிய மக்களின் இரத்தம் தோய்ந்திருக்கிறது. இந்தத் தங்கம் மாசு பட்டது. இது நமது கருவூலத்தை மாசுபடுத்த அனுமதிக்கக் கூடாது''

இந்த வரிகள் இந்தியாவில் மதுவிலக்குப் பிரச்சாரம் செய்யும் எவருடைய வார்த்தைகளையும்விட கடுமையானது.

''பசுமைப்புரட்சிப் பின்னணியில் மது'' என்ற புத்தகம் 1977-இல் வெளியிடப்பட்டது. இதை எழுதியவர் பி. சி. டப் என்பவர். பஞ்சாப் மாநிலத்தில் உள்ள கிராமப்புறங்களைத் தீவிரமாக ஆராய்ந்து மிக சுவையான தகவல்களை அவர் இந்தப் புத்தகத்தில் கூறியுள்ளார்.

குடிகாரர்களை மூன்று வகையாக அவர் கணக்கிட்டுக்காட்டுகிறார். எப்போதாவது குடிப்பவர்கள்; அவ்வப்போது குடிப்பவர்கள்; எப்போதும் குடிப்பவர்கள் என்று மூன்று வகையாகப் பிரித்துக் காட்டியுள்ளார்.

குடும்பத்தில் நடக்கும் திருமணம் போன்ற நல்ல நிகழ்ச்சிகளின்போது தவிர பிற நேரங்களில் அதிகமாகக் குடிப்பவர்கள் 18 முதல் 35 வயதுக்குட்பட்டவர்கள். இந்த வயதில்தான் மிகவும் துடிப்பாகச் செயல்பட வேண்டும் என்று கூறுவார்கள். மேற்கண்ட மூன்று வகைக் குடிகாரர்களும் மாதந்தோறும் முறையே 29.93 ரூபாய், 65.62 ரூபாய், 74.40 ரூபாய் செலவிடுகிறார்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

எல்லா மது வகைகளும், போதைப் பொருள்களும் மற்ற கொடுமைகளைப் பொறுத்தவரை ஓர் அம்சத்தைப் பெற்றுள்ளன. அது தன்னையே இழந்து விடுவதும் அடிமைப்படுவதும் ஆகும்.

ஒரு குடிகாரன் தன்னைக் கட்டுப்படுத்தும் சக்தியை இழந்துவிடுகிறான். மது அல்லது போதைப் பொருள்களின் தயவை நாடுகிறான். இதனால் பலவிதமான நோய்க்குக் கட்டுப்பாடற்ற நடவடிக்கைகள், மனக்கோளாறுகள், அதிகம் குடிப்பதால் விஷம் அருந்தியதைப்போல் மரணத்தின் பிடியில் சிக்கும் கொடூரம், கொலைகள், வெறிச் சேர்க்கைகள் ஆகியவற்றில் ஈடுபடுகின்றான். இதை தவிர மின்னல் வேகத்தில் கார் ஓட்டுவது, கடமை தவறுவது, தெருச் சண்டைகள் முதலிய சமுதாயக் கொடுமைகளுக்கும் குடியே காரணமாகும்.

வீட்டை எடுத்துக் கொண்டால் குடும்பத்தில் பட்டினி, மனமுறிவு, சண்டைகள், மனைவியைக் கொடுமைப்படுத்துவது, குடும்பத்தினையே புறக்கணிக்கும் கொடூரம் ஆகியவை மிகச் சாதாரணமாகக் காணப்படும் விஷயங்களாகும்.

மதம், தத்துவம், ஆன்மீகம், தார்மீக நெறிமுறைகள் ஆகியவற்றைக் காட்டி குடிப் பழக்கத்தைத் தடுப்பதற்கு இனிமேல் அவசியமுமில்லை.

மதுவினால் அரசுக்கு மொத்தம் 500 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. மது அருந்துவோர் செலவிடும் தொகையோ 2,000 கோடி ரூபாய். துரதிருஷ்டவசமாக ஏழைகள்தான் பணத்தை இழந்து குடும்பத்திலும் சமுதாயத்திலும் அவதிப்படுகிறார்கள். இதை ஒழிப்பதற்குச் சட்டத்தைத் தவிர வேறுஎன்ன வழியிருக்கிறது? அதே நேரத்தில் ஏழைகளையும், பாமரர்களையும் குடிப்பழக்கத்தில் சிக்கியவர்களையும் மேலும் அழிவிலிருந்து காப்பாற்றுவதற்காகத் தீவிரப் பிரச்சாரம் செய்யப்பட வேண்டும்.

கள்ளத்தனமாக மது வகைகள் உற்பத்தி செய்யப்படும் என்ற வாதம் தவறானது என்பதை நீதிபதி தேக்ஷந்த் தலைமையில் அமைக்கப்பட்ட மதுவிலக்கு விசாரணைக்குழு தனது அறிக்கையில் கூறியுள்ளது. ஒழுக்கமற்ற அணுகுமுறைகள் மனிதனின் பலவீனத்தை ஒட்டிய சதி சுயநல வர்த்தகம் ஆகியவற்றைத் தவிர வேறு எதைக் கூறி மதுவிலக்கை அமல் செய்யக் கூடாது என வாதிட முடியும்.

வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல. தார்மீக இதயபூர்வ வளர்ச்சியாகவும் அது இருக்க வேண்டும். இந்திய மக்களின் வாழ்க்கைத் தரமும் நெறிமுறைகளும் இதன் மூலம் உயர்ந்தோங்க வேண்டும்.

(நன்றி: அகில இந்திய வானொலி)




கோ-ஆப்டெக்ஸ் அளிக்கும்
காஞ்சிபுரம் பட்டுச் சேலை
தங்கத்துக்கு நிகரானது!
ஆம்! காஞ்சிபுரம் பட்டுச் சேலைக்கு தங்க நிகர் மென்மை எழிலூட்டுவது கோ-ஆப்டெக்ஸ். பற்பல டிசைன்கள். அசல் சரிகை. அணிபவருக்கு எழில் கூட்டும் கண்கவர் வண்ண வகைகள்.
மற்றும் ஆரணி, கும்பகோணம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம் கைத்தறி நூல் சேலைகள், சுங்கடி பிரிண்டுகள், சின்னாளப்பட்டி சேலைகள்.
கைத்தறியே
வண்ணத்துப்பூச்சி
கோ-ஆப்டெக்ஸ்
ஆடை அணிபவர்
அதன் தனிச்சிறப்பை
அறிவர்.
பண்டைச் சிறப்பும் நவீன
நயமும் இணைந்து திகழ்வது
வண்ணத்துப்பூச்சி



# இதோ நிதி உதவி!

**டாக்டர் எஸ். ஜோதிராஜ்**

அண்மைக் காலமாக விவசாயத் தொழில் வளர்ச்சியின் முக்கியத்துவத்தை உணர்ந்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், பெருமளவில் நிதி உதவி வழங்கும் பணியில் ஈடுபட்டு உள்ளன. இதனால், விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு மற்றும் விவசாயத் தொடர்புடைய அனைத்துத் தொழில்களிலும் ஒரு மறுமலர்ச்சி தோன்றியுள்ளது எனலாம். இன்று உப தொழிலாகக் கருதப்பட்ட கால்நடை வளர்ப்பு பெரும் தொழில்முறை அடிப்படையில் செயல்படும் ஒரு தொழிலாகி விட்டது.

மற்ற தொழில்களை விட கால்நடை வளர்ப்பில் பராமரிப்புச் சிக்கல்களும் மூலதனத் தேவையும் அதிகம். ஆனால், சொந்த உழைப்பை வருமானமாக்க இது ஒரு சிறந்த தொழிலாகும். விஞ்ஞான முறைகளைக் கையாளுவதன் மூலம் வருமானம் பெருக வாய்ப்புண்டு. ஏனெனில் வருமானத்தின் நிலைமை, கால்நடைகளின் உற்பத்தித் திறன், சிறந்த பராமரிப்பு, உற்பத்தியாகும் பொருட்களின் உடனடி விற்பனை வசதி இவைகளையே பொறுத்தது. பால், முட்டை, இறைச்சி முதலிய கால்நடை உற்பத்திப் பொருள்களுக்கு நமது நாட்டில் பற்றாக்குறை இருப்பதனால் முறையான விற்பனை வசதிகள் ஏற்படுத்தப்படின், சிறந்த இலாபகரமான தொழிலாக இது விளங்க முடியும்.

தற்போது அரசு வங்கிகளில் பாரத ஸ்டேட் வங்கியும், அதன் இணை வங்கிகளும் தவிர 14 தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளும் விவசாயப் பொருளாதார உதவியில் ஈடுபட்டுள்ளன. இவைகள் தவிர, விவசாயக் கடனுதவி தனியார் துறை வங்கிகள் மூலமும், பல்வேறு கூட்டுறவுக் கடனுதவிச் சங்கங்கள் மூலமும் வழங்கப்படுகிறது.

எனவே, கால்நடைப்பண்ணைத் திட்டம் அமைக்க விரும்புவோர் அருகிலுள்ள ஏதாவது ஒரு நிதி நிறுவனத்தின் கிளைகளுடன் தொடர்பு கொண்டு, தங்களுக்குத் தேவையான பொருளாதார உதவியினைப் பெற்றுக் கொள்ளலாம். எத்தகைய உதவியாயினும் ஒரே நிதி நிறுவனத்துடன் இணைந்து செயல்படுவது முன்னேற்றத்திற்குச் சிறந்ததும் இன்றியமையாததும் ஆகும். கால்நடைப் பண்ணைத் திட்டங்களில் இலாபநோக்கத்துடன் வங்கிகள் நிதி உதவி அளித்தாலும், நாட்டின் உற்பத்தித் தேவையின் அடிப்படையில்தான் கடனுதவி அளிக்கப்படுகிறது. வங்கிகள் அளிக்கும் கடனுதவியை இரு வகையாகப் பிரிக்கலாம். 1 நேரடிக் கடனுதவி, 2. மறைமுகக் கடனுதவி.

## நேரடிக் கடனுதவித் திட்டம் :

இத்திட்டத்தின் மூலம் சிறு பண்ணையாளர்களுக்கும், தனிப்பட்ட பண்ணையாளர்களுக்கும் கால்நடை வளர்ப்பிற்குக் கடன் உதவி வழங்கப்படுகிறது. இக்கடனுதவி உற்பத்தியையும், தர உயர்த்துதலையும் அடிப்படையாகக் கொண்டது. உதாரணமாக, விவசாயிகளுக்குக் கறவை மாடுகள் வாங்கக் கடனுதவி அளிப்பதன் மூலம் பால் உற்பத்தி பெருகுகின்றது. சிறு கோழிப் பண்ணைகள் அமைக்க உதவுவதன் மூலம் முட்டைகளும் கோழி இறைச்சியும் அதிகமாக உற்பத்தியாக வழி வகுக்கிறது.

## மறைமுகக் கடனுதவித் திட்டம் :

இதன் மூலம் பெரிய அளவில் கடனுதவி அளிக்கப்படுகிறது. பல்வேறு இடங்களில் சிறு உற்பத்தியாகும் பொருட்களைத் தகுந்த முறையில் உபயோகப்படுத்தவும், வியாபார வசதியைப் பெருக்கவும் பல்வேறு நிறுவனங்கள் ஏற்படவும் உதவுகிறது. உதாரணமாக, பால் பவுடர் தொழிற்சாலை ஒன்று நிறுவ உதவி செய்யப்பட்டால் அது மறைமுகமாக இந்த இடங்களில் பால் உற்பத்தி பெருக வழி வகுக்கிறது.

வங்கிகள் தற்போது பெருமளவில் பால் பண்ணைத் திட்டங்களுக்கும், ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு முதலியவற்றிற்கும் கடனுதவிகள் வழங்குகின்றன.

## சிறு கடன்கள் :

சிறு பால் பண்ணைகள், ஆட்டுப் பண்ணை முதலியவற்றிற்குப் பெரும்பாலும் இதற்கான தனிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடனுதவிகள் அளிக்கப்படுகின்றன. இத்தகைய கடன்கள் பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் பெரும்பாலும் 3 அல்லது 5 நபர்கள் இணைந்து கூட்டு நபர்கள் பொறுப்பின் பேரில் வழங்கப்படுகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத இடங்களில் கூட்டு நபர் பொறுப்பின் பேரிலும், நில அடமான அடிப்படையில் கடனுதவி வழங்கப்படும்.

**சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர் திட்டப் பேரவை வெளியிட்டுள்ள "புதிய உலகம் காணீர்" மலரிலிருந்து....**



**பெரிய கடனுதவிகள் :**

இவைகள் தனிப்பட்ட் நபர் களுக்குத் தகுந்த உத்தரவாதத் தின் பேரில் வழங்கப்படுகின்றன. சம்பந்தப்பட்ட நபரோ அல்லது மூன்ருவது நபரோ, கடனுதவிக் கேற்ப நிலம் அல்லது நிலையான சொத்துக்களை வங்கிக்குக் கடன் காலத்திற்கு ஈடு கொடுக்க வேண்டும்.

எந்த விதக் கடனுதவி பெற்ருலும் வங்கிக்குக் கடனுதவியின் கீழ் வாங்கப்பட்ட கால்நடைகளை யும், உபகரணங்களையும் ஈடு கொடுக்க வேண்டும். வங்கியின் முன் அனுமதியின்றி எதையும் விற்பனை செய்யக் கூடாது. பண்ணையாளர்களின் நலன் கருதி, கடனுதவித் திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட கால்நடைகள், உபகரணங்கள், கொட்டகைகள், ஆகியவைகளை வங்கிச் சார்பில் பண்ணையாளர்கள் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கொண்டு வர வேண்டும்.

விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும்போது முக்கியமாகக் கீழ்க் கண்ட கருத்துக்களில் வங்கியைத் திருப்திப்படுத்த வேண்டும்.

1. திட்டத்தின் தொழில் நுட்பச் சாத்தியக் கூறுகள்.

2. திட்டத்தின் பொருளாதார சாத்தியக் கூறுகள்.

3. திட்டத்தின் நோக்கமும் வாய்ப்புகளும்.

4. கால்நடைகளின் நவீன பராமரிப்பு வசதிகள்.

5. நோய்த் தடுப்புச் சிகிச்சை வசதிகள்.

6. விற்பனை வசதிகள்.

7. விண்ணப்பதாரரின் பொருளாதார நிலை.

''முயற்சியுடையார் இகழ்ச்சியுடையார்'' என்பது பழமொழி. நமது பொருளாதாரம் விவசாயத்தை முதுகெலும்பாகக்கொண்டுள்ளது. விவசாய வளர்ச்சியில் ஒரு முக்கிய அங்கமான கால் நடை வளர்ப்புத் தொழில் சிறிது பின் தங்கியுள்ளது. இதனைத் தவிர்த்து முன்னேற்றம் ஏற்படுத்தும் முயற்சியில் வங்கிகள் பொருளாதார உதவிகள் செய்கின்றன. வேலையில்லாத் திண்டாட்டமும், உணவுப் பொருள்கள் பற்ருக் குறையும், ஏழ்மையும் நிரம்பியுள்ள நமது நாட்டில் நமது கவனம் கால்நடை வளர்ப்புத் தொழிலை அபிவிருத்தியடையச் செய்வதில் செலுத்தப்படவேண்டும். வங்கிகளின் நன்முயற்சியில் உழவர்குடி மக்கள் முழு அளவில் பங்கு கொண்டால் நாமும் நாடும் வளம்படும் என்பது திண்ணம்.

# கிழக்கு தஞ்சை மாவட்ட விவசாயிகள் கூலி நிர்ணயம் - ஒரு நபர் கமிஷன் நியமனம்

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்த மன்னர்குடி, திருத்துறைப்பூண்டி, மாயூரம், சீர்காழி, நாகப்பட்டினம், நன்னிலம், திருவாரூர் ஆகிய வட்டங்களுக்குப் பொருந்துகின்ற தமிழ்நாடு வேளாண்மைத் தொழிலாளர் கூலி நிர்ணயச் சட்டம் 1969-ல் (தமிழ்நாடு சட்டம் 19/69) கண்ட கூலி நிர்ணயத்தை மாற்றி அமைப்பது சம்பந்தமாக நிலவருவாய், நிலச் சீர் திருத்தம், மற்றும் உணவு உற்பத்தி ஆணையாளர் திரு இராமசநதர், ஐ.எ.எஸ். அவர்களைக் கொண்ட ஒரு நபர் கமிஷனைத் தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது. இக் கமிஷன் மாநில அரசுக்குத் தனது அறிக்கையை அளிக்கும்.

இது சம்பந்தமாக சங்கங்களும், நிறுவனங்களும், மற்றையோரும் தங்களது கருத்துக்களையும் கோரிக்கைகளையும் இக்கமிஷனிடம் நேரிலோ எழுத்து மூலமாகவோ தெரிவிக்கலாம்.

எழுத்து மூலம் அனுப்பப்படும் கோரிக்கைகளை, ஒரு நபர் கமிஷன் தமிழ்நாடு வேளாண்மைத் தொழிலாளர் கூலி நிர்ணயச் சட்டம் 1969 மே/பா தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் என்ற முகவரிக்கு 20-8-1978-க்குள் அனுப்ப வேண்டும்.

# உங்களுக்குத் தெரியுமா?

நமது நாட்டில் சுமார் 150 இலட்சம் மாட்டு வண்டிகள் உள்ளன. இவற்றிற்கான மொத்த முதலீடு சுமார் 3,000 கோடி. இந்த மாட்டு வண்டிகளை நம்பி 200 இலட்சம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிருர்கள். இந்திய ரயில் வேக்கான முதலீடு ரூ. 4,000 கோடி. சாலைப்போக்குவரத்து வாகன வகைகளுக்கான முதலீடு ரூ. 2,500 கோடி.



# பார்த்தீனியம் களைத் தடுப்பு

**வெ**ளிநாடுகளிலிருந்து நம் நாட்டிற்கு விதை மற்றும் உணவு தானியங்கள் மூலம் கொண்டு வரப்பட்ட இக் களைச்செடி நம் நாட்டின் பல பாகங்களிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டிலும் அதிகப் பரப்பில் பரவி தொல்லை தந்து வருகின்றது. இது அதிக நச்சுத் தன்மை வாய்ந்தது.

**களையைக் கட்டுப்படுத்தும் முறைகள்:**

*கைக்களை மூலமாகவோ, களைக் கொத்தினைக் கொண்டோ குறைந்த அளவு இடங்களில் பரவியிருந்தால் அழிக்கலாம். ஆனால், இம்முறையைக் கையாள்வதின் மூலம் உடலில் பலவித நோய் உண்டாக ஏதுவாகிறது. மேலும், அதிகமான இடங்களில் இக்களை ஒழிப்பை மேற்கொள்ளும்போது இது இலாபகரமாகவும் இராது. வீட்டுத் தோட்டங்களிலோ, கால்நடைத் தொழுவங்கள் அருகிலோ ஓரிரண்டு களைகளைக் காணும்போது இம்முறையைப் பின்பற்றுவதில் தவறில்லை. இம்முறையைப் பின்பற்றும்போது பாதுகாப்புடன் களையை எடுக்க வேண்டும்.

*பகைமை உயிரினங்களைக் கொண்டும் இக்களைகளைக் கட்டுப்படுத்தலாம். உதாரணமாக, ஏபிஸ் பேபே, குடேகாக்கஸ் ஒருவகை மைட்ஸ் ஆகியவற்றின் மூலம் இக்களையின் வளர்ச்சி ஓரளவு கட்டுப்படுத்த முடிகிறது. ஆனால், இப்பூச்சிகள் மற்ற பயிர்களையும் தாக்குவதால் முழுமையாகப் பயன்படுத்தவில்லை.

*எல்லாமுறைகளையும்விட களைக் கொல்லிகளின் மூலம் இக்களையை எளிதாகக் கட்டுப்படுத்த முடியும். நம்நாட்டில் பல இடங்களில் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின் மூலம் கீழ்க்கண்ட களைக் கொல்லிகள் இக் களையைக் கட்டுப்படுத்த பெரிதும் பயனுள்ளதாகத் தெரிகிறது.

(அ) இக்களைகள் சிறு நாற்றுப் பருவத்திலிருக்கும்போது எக்டருக்கு 2.0 கிலோ அளவில் 2,4-டி (2.4-) என்னும் களைக் கொல்லியை 600 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்த முடிகிறது.

(ஆ) எம். சி. பி. ஏ. என்னும் களைக்கொல்லியை எக்டருக்கு 2.0 லிட்டர் விளவில் தெளிக்கலாம்.

(இ) அன்சார்-529 என்னும் களைக் கொல்லியை எக்டருக்கு 4. லிட்டர் அளவில் தெளிப்பதன் மூலம் இக்களையை நன்கு கட்டுப்படுத்த முடியும் எனத் தெரிகிறது.

(ஈ) ரவுண்டப் களைக்கொல்லியை எக்டருக்கு 2.0 லிட்டர் வீதம் தெளிக்கலாம்.

(உ) பாராகுவாட், டைகுவாட் ஆகிய களைக் கொல்லிகளும் இக்களையைக் கட்டுப்படுத்த பெரிதும் பயன்படுகின்றன.

(ஊ) லாஸோ, அட்ரசின், டையூரான் ஆகிய களைக்கொல்லிகளின் மூலமும் இக்களையைக் கட்டுப்படுத்த இயலும் என பலவித ஆராய்ச்சிகளின் மூலம் தெரியவருகிறது. இவ்வாறு பல கலைக்கொல்லிகளின் மூலம் இக்களையைக் கட்டுப்படுத்த முடிந்தாலும், எளிதில் நமக்குக் கிடைக்கக் கூடியதாயும், குறைந்த விலையுள்ளதாகவும் உள்ள இரு களைக்கொல்லிகளைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் சிபாரிசு செய்கிறது.

(1) 2. 4-டி களைக் கொல்லியை எக்டருக்கு 2.0 கிலோ வீதம் 600 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.

(2) அன்சார்-529 களைக் கொல்லியை எக்டருக்கு 4.0 லிட்டர் என்ற அளவில் 600 லிட்டர் நீரில் கலந்து தெளித்தால் நல்ல முறையில் கட்டுப்படுத்த முடியும்.

**களைக் கொல்லியைப் பயன்படுத்தும்போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள்:**

சிபாரிசு செய்யப்படும் அளவிற்குமேலாகக் களைக்கொல்லியை உபயோகப்படுத்தாதீர்கள்.

2, 4-டி களைக்கொல்லியைப் பருத்தி போன்ற இருவிதையிலைத் தாவரங்கள் பயிரிடப்படும் இடங்களில் பயன்படுத்தக்கூடாது. மக்காச்சோளம், கம்பு போன்ற பயிருள்ள இடங்களில் உபயோகப் படுத்தலாம்.

*முடிந்த அளவு களைக் கொல்லிகளுக்கென்று தனி ஸ்ப்ரேயர்களை வைத்திருக்கவும். இல்லாவிட்டால் களைக்கொல்லி பயன்படுத்திய பிறகு நன்கு கழுவிய பிறகே வேறு பூச்சி மருந்துகள் தெளிக்க பயன்படுத்துதல் வேண்டும்.

*காற்று எந்தத் திசையில் அடிக்கிறதோ, அதே திசையில் தெளித்தல் நன்று.

*களைக்கொல்லி தெளித்த பிறகு சுமார் 24 மணி நேரத்திற்காவது அந்த இடங்களின்மீது நடமாடாதீர்கள்.

*ஸ்ப்பேரயரைக் கொண்டு தெளிக்கும்போது அதை ஒரே உயரத்தில் பிடித்திருக்க வேண்டும். அப்போதுதான் ஒரே சீராக எல்லா இடங்களிலும் தெளிக்க முடியும்.

,களை பூ விடுவதற்கு முன்பு களைக்கொல்லியைத் தெளிப்பது அவசியம். இதன்மூலம் விதை உற்பத்தியைத் தவிர்க்கலாம்.

**தகவல் :**
**டாக்டர் எஸ். சங்கரன்,**
**ராஜன்,**
**உழவியல் துறை,**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,**
**கோவை—3.**

# உடனடி மதிப்பீட்டுத் திட்டம்
# சுலபமாக விரைவாக
# வருமானவரி மதிப்பிட உதவுகிறது

- வருமானவரி அலுவலகத்திற்கு வரச்சொல்லி நோட்டீஸ் இல்லை.
- கணக்குப் புத்தகங்களை வருமானவரி அதிகாரியிடம் காட்டச் சொல்லி உத்தரவு இல்லை.
- உங்கள் ரிட்டர்னில் அறிவிக்கப்பட்ட வருமானத்தில் கணக்குப் பிழைகள் இருந்தால் திருத்த வேண்டிய அவசியம் அல்லது நிலையான திருத்தங்களைச் செய்ய வேண்டிய அவசியம் தவிர, கூடுதல் இல்லை.

**உங்கள் மதிப்பீடு இந்த வகையில் இருக்க வேண்டும் என்று விரும்புவீர்கள். நீங்கள் செய்ய வேண்டியது இதுதான் :**

- சரியான பாரத்தில் ரிட்டர்னை சமர்ப்பியுங்கள்.
- உங்கள் வருமானம் பற்றிய சரியான, முழுமையான விவரங்களையும் ரிட்டர்னில் இணைத்து மற்ற விவரங்களையும் கொடுங்கள்.
- உங்கள் ரிட்டர்னோடு வியாபாரம் / தயாரிப்புக் கணக்கு, லாப நஷ்டக் கணக்கு பாலன்ஸ் ஷீட் போன்ற பொருத்தமான அறிக்கைகளைக் கொடுங்கள்.
- உங்கள் ரிட்டர்னோடு வரி விதிக்கப்பட்ட சான்றிதழ் அட்வான்ஸ் வரி மற்றும் சுயமதிப்பீட்டு வரி, சலானின் பிரதி, கட்டாயச் சேமிப்பிற்கான ரசீது, லைஃப் இன்ஷ்சூரன்ஸ் பிரிமியம் போன்றவற்றை இணையுங்கள்.

**வரிக்கவலை வேண்டாம்; சரியான முழுமையான ரிட்டர்னைச் சமர்ப்பியுங்கள்.**

*வெளியிடுவோர் :*
டைரக்டரேட் ஆஃப் இன்ஸ்பெக்ஷன்,
(ஆராய்ச்சி மற்றும் புள்ளிவிவர வெளியீடுகள் பிரிவு)
வருமான வரித்துறை,
புதுதில்லி - 110 001.

davp 78/157



# பூவன் வாழை கட்டுக்கோப்புச் சாகுபடி

பூவன் சாகுபடிக்கேற்ற சில குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

**முன்செய் நேர்த்தி:** கன்றுகளை 2.0 × 2.0 மீ (7 × 7 அடி) இடைவெளியில் நடவும்.

**கன்றுத் தேர்வு:** ஒரே அளவுள்ள ஈட்டிக் கன்றுகளைத் தேர்ந்தெடுக்கவும். எக்டேருக்கு 2,200 கன்றுகள் தேவைப்படும்(ஏக்கருக்கு 890 கன்றுகள்).

**நடவுப் பருவம்:** மார்ச்-ஏப்ரல்

**நடும் முறை:** கிழங்கை மூடக்கூடிய அளவிற்குச் சிறிய குழிகள் வெட்டவும். கன்றுகளை நட்ட பின்னர் கிழங்கைச் சுற்றி நன்றாக மண் அணைக்கவும்.

**பின்செய் நேர்த்தி:** இரண்டு வரிசைகளுக்கு இடையில் கிடங்கு வெட்டவும். ஆறு வரிசைக்கு ஒன்றாகக் குறுக்கே கிடங்கு வெட்டவும். ஆண்டிற்கு மூன்று முறை குறுக்கில் உள்ள கிடங்குகளை ஆழப்படுத்தவும். தாய்மரம் குலை ஈனும் வரை பக்க வாட்டில் வளரும் கன்றுகளை அகற்றிவிடவும். குலை ஈன்ற பிறகு நல்ல திடமான ஈட்டிக் கன்றுகளில் ஒன்றை மட்டும் வளரவிடவும். ஆண்டிற்கு நான்கு அல்லது ஐந்து முறை நிலத்தை நன்றாக ஆழமாகக் கொத்தவும்.

**உரமிடுதல்:**

முதல் உரம்: நட்ட 12ஆம் வாரம்.

இரண்டாவது உரம்: நட்ட 20 ஆம் வாரம்.

வாழைத் தண்டிலிருந்து 60 செ. மீ. (2 அடி சுற்றி 10 செ. மீ. ஆழத்திற்குக் கிண்ணம் பறிக்கவும். உரமிட்டவுடன் உரத்தை மூடி நீர் பாய்ச்சவும். ஒரு மரத்திற்குத் தேவையான உரம்.

**110N 35P 330K (தழை, மணி, சாம்பல் சத்துக்கள்) கிராம் சத்துக்கள்.**

| உரம் | கன்று நட்ட 3-வது மாதம் | கன்று நட்ட 5-வது மாதம் |
|---|---|---|
| தொழு உரம் ... | 12 கிலோ | 12 கிலோ |
| அம்மோனியம் சல்பேட் ... | 300கிராம் | 150கிராம் |
| சூப்பர் பாஸ்பேட் ... | 200 ,, | ... |
| மூரியேட் ஆப்பொட்டாஷ் (அல்லது) ... | 250 ,, | 250 ,, |
| பொட்டாசியம் ஷியோலைட் | 625 ,, | 625 ,, |
| புண்ணாக்கு ... | 100 ,, | 100 ,, |

தனிப்பட்ட உரங்கள் கிடைக்கவில்லையானால் எட்டாம் நெம்பர் கலப்பு உரம் (66—18) ஒரு எக்டருக்கு 1,500 கிலோ (ஒரு ஏக்கருக்கு 600 கிலோ) வீதம் கன்று நட்ட மூன்றாவது மாதத்திலும், ஒன்பதாம் நெம்பர் கலப்பு உரம் (10-0-30) ஒரு எக்டருக்கு 1,850 கிலோ (ஒரு ஏக்கருக்கு 750 கிலோ) வீதம் கன்று நட்ட ஐந்தாவது மாதத்திலும் இடவும்.

நீர்ப்பாசனம்: ஆண்டிற்கு 30—40 முறைகள்.

**குலை தள்ளிய பிறகு கவனிக்க வேண்டியவை:**

**விதை உண்டாவதைக் கட்டுப்படுத்தும் முறை:** குலை தள்ளிய கொட்டை வாழை 15-20 நாட்கள் கழித்து, 2.4-டி என்னும் வளர்ச்சி ஊக்கியை ஒரு லிட்டர் தண்ணீரில் 25 மி.லி. வீதம் கரைத்துக் குலையின்மேல் தெளிக்கவும். சாதாரணமாகத் தார்போட்ட மடல் பிரிந்தவுடன் காய்கள்மேல் நோக்கி வளரும். ஆனால், கொட்டை வாழையில் காய்கள் மேல் வளர்ச்சி குன்றி மேல்நோக்கி வளையாமல் விரிந்து காணப்படும். 2.4-டி தெளிப்பதால் காய்கள் சுரக்கும். குலை தள்ளிய 20 நாட்கள் கழித்து ஆண் பூவை ஒடித்துவிடவும். குலை தள்ளிய பிறகு மரத்திற்கு மூங்கில்களைக் கொண்டு ஒட்டு கொடுக்கவும்.

**பயிர்ப் பாதுகாப்பு:**

**சிகடோகா இலைப்புள்ளி நோய்:** அக்டோபர் முதல் டிசம்பர் வரை ஆறு முறை டைத்தேன் எம். 45 என்ற மருந்தை (ஏக்கருக்கு 400 லிட்டர் நீரில் ஒரு கிலோ மருந்தைக் கரைத்து) சாண்டோவிட் அல்லது ட்ரைதியான் போன்ற நனைப்பானை லிட்டருக்கு இரண்டு மி.லி. வீதம் மருந்துடன் கலந்து உபயோகிக்கவும், அதிகமாகப் பாதிக்கப்பட்ட வாழையினது இலைகளை நீக்கிய பிறகே மருந்தைத் தெளிக்க வேண்டும். வாழைத் தோட்டத்திலிருந்து காய்ந்த இலைகளை அகற்றுவது மிகவும் அவசியம். காய்ந்த சருகு இலைப்புள்ளி நோயின் தீவிரத்தை மிகைப்படுத்தும்.

தகவல்:

**சி. மு. பக்தவத்சலு,**
**இரா. செ. அழகிய மணவாளன்,**
**மு. பஜலு ரஹ்மான் மாலிக்**
**தோட்டக்கலைத் துறை,**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,**
**கோவை-3.**

# குடி கெடுக்கும் குடி!

கலைமாமணி உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்

குடிகெடுக்கும் குடிக்கு ஒரு அடிகொடுக்க—ஏழைக்
குடும்பங்கள் வாழ்வதற்கு வழிவகுப்போம்
(குடிகெடுக்கும்)

அழுதழுது ஓய்ந்துவிட்ட பெண்ணினத்தின்—கொடும்
அடிமைநிலை தீர்வதற்கு முடிவெடுப்போம்
(குடிகெடுக்கும்)

தடிகொண்டு தாக்கிடுவான் குதிகுதிப்பான்—எட்டித்
தரையினிலே வீழ்த்திஒரு மிதிமிதிப்பான்
எதுசெய்வோம் என்பதையே அறியாதான்—கெட்ட
இழிநிலைக்குத் தன்னையே பலிகொடுப்பான்
(குடிகெடுக்கும்)

மாலைவரை மனிதனென உலவிடுவான்—அந்தி
வேளையிலே மிருகமென நிலைகெடுவான்
சாலையிலே குளத்தருகே மரத்தடியில்—சந்தி
சாக்கடையில் வீழ்ந்திடுவான் காப்பதுயார்?
(குடிகெடுக்கும்)

தெருத்தெருவாய்ப் பிள்ளைகளைத் திரியவிட்டே—நட்ட
நடுத்தெருவில் ஒருநாளில் உயிர்விடுவான்
அடுத்தடுத்தே இவன்கதையைத் தொடர்ந்திடுவார்—நாளும்
கணக்கின்றிப் பெருகுவதைத் தடுத்திடுவோம்!
(குடிகெடுக்கும்)





# குடிசை நோக்கி வீசும் குளிர் தென்றல்

கட்டடம் கட்டும் கொத்தனார், சாலை போடும் தொழிலாளி, துப்புரவு வேலை செய்வோர், முதுகெலும்பு ஒடிய மூட்டை தூக்கி வண்டி இழுத்து வயிற்றை நிரப்பும் ஏழை எளியோர், இவர்களெல்லாம் வாழும் பகுதி அது!

நாட்டின் நரம்புகளாய், நகரினை வனப்புடையதாய், பிறர் வாழ்வை ஒளிமயமானதாய் மாற்றிடும் இந்தத் தொழிலாளர்கள் வாழும் அந்த இடம் எவ்வாறு உள்ளது?

கல்லும் முள்ளும் நிறைந்த அந்த இடத்தின் நடுவிலே துர்நாற்றம் வீசும் சாக்கடை; நீர்க் குட்டைகள்; அதன் மத்தியில் அங்குமிங்கும் நடக்க முடியாத இடங்களில் குடிசைகள். மழைக் காலம் வந்து விட்டால் இவர்களின் அவதி சொல்லி முடியாது. சேறும் சகதியும் கீழே கால் ஊன முடியாத அளவு கோரமாயிருக்கும்.

இதுதான் திருச்சி நகர்ப் பகுதிகளிலுள்ள வாமடம், கமலா நேரு நகர், அண்ணாநகர் போன்ற குடிசைப் பகுதிகளில் நேற்று வரை இருந்து வந்த நிலை!

ஆனால், இன்று நடப்பது என்ன?

திருச்சி நகராட்சியின் பார்வை இவர்கள் பக்கம் திரும்பியது! குடிசைகளை நோக்கிக் குளிர் தென்றல் வீசத் தொடங்கி விட்டது! குடிசைப் பகுதிகளைச் சீரமைப்பு செய்ய நகராட்சி திட்டம் தீட்டியது.

முதலில் பாதைக்கான வழி வகுக்கப்பட்டது. வழியை மறைத்துக் கொண்டு ஆக்கிரமித்துக் கொண்டிருந்த புதர்கள், மரங்கள் முதலானவை வெகு சிரமத்திற்கிடையே அப்புறப் படுத்தப்பட்டன. இடங்களுக்கேற்ப, 10 அடி அல்லது 15 அடி இன்னும் சில இடங்களில் 25 அடிகளுக்கும் மேலாகப் பாதை அமைக்கப்பட்டு வருகிறது.

வீதியின் நடுவேஓடும் சாக்கடைக்காகச் சாலையின் அல்லது பாதையின் இரு மருங்கிலும் சிமெண்டினால் வடிகால் ஏற்படுத்தப்படுகிறது. இந்த வடிகால் அகலத்தில் சிறியதாக ஓர் அடி அல்லது 2 அடி ஆழத்தில் பாதை நெடுக அமைக்கப்படுகிறது. அதன் பின்னர் பாதைமீது செம்மண் சரள் போட்டு, சுமார் 2 அடி உயரம் உயர்த்தப்படுகிறது. பாதை பள்ளம் மேடின்றி ஒரே மட்டமாக்கப்படுகிறது. அதன் பின்னர் அதன்மீது 4 சதுர அடி அளவுள்ள கற்கள் அல்லது சிமெண்ட் ‘ஸ்லாப்புகள்’ பதிக்கப்பட்டு இடைவெளிகளில் சிமெண்ட் பூசப்படுகிறது. இவ்வாறு குடிசைப் பகுதிகளுக்குள் செல்லும் முக்கிய பாதை மட்டுமின்றி குறுக்குச் சந்துகள் போன்ற எல்லாப் பாதைகளும் சீரமைக்கப்பட்டு விடுகின்றன.

இப்போது சுத்தமான நேர்த்தியான பாதை தயார்! முன்பு இதே இடத்தைப் பார்த்தவர்கள் தங்கள் கண்களையே நம்ப முடியாத அளவுக்குப் பிரமிக்கத் தக்க தோற்றம்!

இத்துடன் விட்டு விடவில்லை. நகராட்சியினர், தெரு விளக்குகள், குடிநீர்த் தொட்டிகள், கழிப்பிடங்கள் ஆகியவற்றையும் ஒவ்வொரு குடியிருப்பிலும் போதுமான அளவு வசதியாக அமைத்துத் தருகின்றனர்.

இதில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது, கழிப்பிடங்கள் ஆகும். பொதுவாக, பொதுக் கழிப்பிடங்கள் மிகவும் சாதாரணமான முறையில் அமைக்கப்படுவது வழக்கம். ஆனால், இங்கு இந்தக் குடிசைப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளவை ‘மொசைக்’ தரையுடன் எளிதில்

குடிசைப்பகுதியில் நவீன வசதிகளுடன் கழி விடம்.



சுத்தம் செய்யக் கூடிய வகையில்) கட்டப்பட்டுள்ளன. எப்போதும் தண்ணீர் வசதி உள்ளது. அத்துடன் நல்ல உயரத்தில், தரையிலிருந்து சுமார் 4 அடி உயரத்தில் படி வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, மழைக் காலத்தில் நீர் தேங்கி நிற்காது. சுத்தப்படுத்துவதும் மிக எளிது.

திருச்சி நகரத்தில் மொத்தம் 51 குடிசைப் பகுதிகள் உள்ளன. அவை அனைத்திலும் இம்மாதிரி வசதிகள் செய்து தருவதற்காகத் திருச்சி நகராட்சி ஒரு திட்டம் தீட்டி, 1976 நவம்பரில் அரசுக்கு அனுப்பியது.

அத்திட்டத்தின் அடிப்படையில் சூரன் சேரி, பெரிய மிளகுப் பாறை, வடவூர், ஆட்டுமந்தை, கல்நாயக்கன் தெரு முதலிய 5 குடிசைப் பகுதிகளின் சீரமைப்பிற்காக 1976, 77-ஆம் ஆண்டிற்கு அரசு 3.6 இலட்சம் ரூபாய் அனுமதி வழங்கியது. மாநகராட்சி தனது நிதியில் ரூ. 2 இலட்சம் செலவிட்டது. இத்திட்டத்தின் மூலம் 10 ஆயிரம் மக்கள் (சுமார் 2 ஆயிரம் குடும்பங்கள்) பயன் பெற்றனர்.

மீதமுள்ள குடிசைப் பகுதிகள் சீரமைப்பிற்காக 1977-78 ஆம் ஆண்டில் (30-11-'77-ல்) தமிழ் நாடு அரசு 30 இலட்ச ரூபாய் மானியமாக அனுமதி வழங்கியது.

இந்த நிதியினைக் கொண்டு திருச்சி நகராட்சி துரிதமாகக் குடிசைப் பகுதிகள் சீரமைப்புப் பணியை மேற்கொண்டுள்ளது. அதில் நவீன கழிப்பிடங்களுக்காக 11.23 இலட்சம் ரூபாயும், சாலைகள் மேம்பாட்டிற்காக 12.64 இலட்சம் ரூபாயும், குடிநீர்த்திட்டங்களுக்காக 9.54 இலட்ச ரூபாயும், தெரு விளக்கிற்காக 93 ஆயிரம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

குடிசைப் பகுதிகளில் சுமார் 200 புதிய மின் விளக்குகள் அமைப்பதுடன் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள 250 விளக்குகளை மாற்றிவிட்டு அதற்குப் பதிலாக 4 அடி நீளமுள்ள குழல் விளக்குகள் போடப்படவிருக்கின்றன.

அண்மையில் வாமடம், கமலா நேரு நகர் ஆகிய குடிசைப் பகுதிகளில் சீரமைப்புப் பணிகள் முடிவடைந்து திறப்பு விழா நடைபெற்றது.

இதுபோன்று, பிற பகுதிகளிலும் முனைப்பாகப் பணிகள் நடைபெறுகின்றன. அடுத்த மூன்று மாதங்களில் எல்லாக் குடிசைப் பகுதிகளிலும் குளிர் தென்றல் காற்று வீசும்; புதுப் பொலிவும், வலிவும் ஏற்படும்.

# அரிசனங்களுக்கு அரசு செய்யும் நன்மைகள்

அரிசன மாணவர்களுக்காக ஜூலை 1977-ல் 10 உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் விடுதியும் 5 மாணவியர் விடுதியும் திறக்க ஆணையிடப்பட்டது. 113 இளநிலை ஆசிரியர் பதவிகள் இடைநிலை ஆசிரியர் பதவிகளாக மாற்றப்பட்டன.

* * *

புகுமுக வகுப்புக்கு மேல் படிக்கும் அரிசன, ஆதிவாசி மாணவர்களுக்கு வழங்கப்படும் கடன் உபகாரச் சம்பளம் ரூ. 500 முதல் 1,750 வரை நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், 1976-77 ஆண்டு முடிய, குறைந்த நிதி ஒதுக்கீட்டினைக் கருத்தில் கொண்டு ரூ. 300 முதல் ரூ. 600 வரை தான் வழங்கப்பட்டு வந்தது. அவ்வாறு 1976-77 ஆம் ஆண்டில் ரூ. 11.24 இலட்சம் மட்டுமே செலவிடப்பட்டது. ஆனால் 1977-78ஆம் ஆண்டு முதல் ரூ. 500 முதல் 1,750 வரை என நிர்ணயிக்கப்பட்ட முழுத் தொகையும் கடன் உபகாரச் சம்பளமாக வழங்கப்பட்டு, இதற்கென ரூ. 22.76 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

* * *

1977-78ஆம் ஆண்டு வரை அரிசன நலத்துறையின் மூலம் குழந்தைகள் காப்பகம் நடத்தப்படவில்லை.

1977-78ல் ஐம்பது குழந்தைகள் காப்பகங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1978-79ல் ஐம்பது குழந்தைகள் காப்பகங்கள் திறக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அரிசன மக்களுக்கு குடிதண்ணீர் வசதிக்காகக் கிணறு தோண்டுவதற்கு உச்சவரம்புத் தொகை ரூ. 5,000/-லிருந்து ரூ. 6,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. முன்பெல்லாம் அரசு அங்கீகாரத்தின் பேரில் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகள் கட்டப்பட்டு வந்தன. தற்போது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு எங்கெங்கே நீர்த் தொட்டிகள் அவசியமோ அங்கங்கே கட்ட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் குடிதண்ணீர் வசதியில்லாத காலனிகளிலும் தண்ணீர் இருந்தும் குடிக்க லாயக்கில்லாத வசதியற்ற காலனிகளிலும் 1978-79-ல் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க தீவிர திட்டம் வகுத்துச் செயல்பட்டு வருகிறது.

* * *

அரிசன மக்களுக்குக் கறவை மாடுகளுக்கு மான்யம் ரூ. 125/-ம் கடன் ரூ. 375/-ம் இருந்ததை 77–78ஆம் ஆண்டிலிருந்து முறையே ரூ. 500/-ம், ரூ.1,000 மாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. 1977-78ஆம் ஆண்டு ரூபாய் 6.12 இலட்சமும், 1978-79ஆம் ஆண்டு ரூபாய் 10.12 இலட்சமும் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

* * *

1977-78ஆம் ஆண்டில் அரிசன நல உயர்நிலைப் பள்ளிகளுக்கு நூலக வசதி செய்து கொடுக்கும் திட்டத்தின் கீழ், ஒரு பள்ளிக்கு ரூ. 1,000 வீதம் 24 உயர்நிலைப் பள்ளிகளுக்கு ரூ. 24,000 அளிக்கப்பட்டது.

* * *

ஐ.ஏ.எஸ். பள்ளியில் படித்து தேர்ச்சி பெற்று ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000 மான்யமாக வழங்கப்படுகின்றது.

முன்னேடிப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று வெற்றியுடன் வெளியேறும் தமிழ்நாட்டைச் சேர்ந்த அறிவாற்றலுள்ள அரிசன ஆதிவாசி மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டும், அம் மாணவர்களைப் பாராட்டும் வண்ணமாகவும், வெற்றிபெற்ற ஒவ்வொரு மாணவருக்கும் ரூ. 1,000 வீதம் உதவித் தொகையாக 1976 முதல் வழங்க இவ்வரசு ஆணையிட்டுள்ளது. அகில இந்தியப் பணிகளுக்கான தேர்வில் வெற்றி பெற்ற பின்னர் மேற்படி பணிகளுக்காக பல்வேறு இடங்களில் நடத்தப்படும் பயிற்சியில் சேருவதற்கான செலவுக்காகவும் மேற்படி உதவித்தொகை பயன்படுத்தப்படுவதற்காக வழங்கப்படுகிறது.



# பிளானோபிக்ஸ் ஊக்கிகள்

கி. இராமச்சந்திரன்,
தாவர வினை இயல் துறை,
வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்.

பிளானோபிக்ஸ் ஊக்கி என்பது திரவ ரூபத்தில் உள்ள ஆல்பா நாப்தலின் அசிடிக் அமிலத்தின் சோடியம் உப்பு ஆகும். பல வருடங்களாக பல்வேறு பயிர்களில், பூக்கள், பிஞ்சுகள், பழங்கள் உதிர்வதைத் தடுப்பதற்காக உபயோகப்படுத்தப்பட்டு அதிக விளைச்சலைத் தந்துள்ளது. இவ்வாறு உபயோகப்படுத்தப்பட்டு வரும் பயிர்களில் பருத்தி, மிளகாய், நிலக்கடலை, மா, திராட்சை, அன்னாசிப் பழவகைகள், பயறு வகைகள், முக்கியமானவைகள்,

பிளானோபிக்ஸ் தண்ணீரில் ஊற்றி கலக்கப்பட்டு தெளிக்கப்படுவதாகும். எண்ணெய் போன்ற திரவங்களில் கலக்கலாகாது. ஏறக்குறைய பெருந்தொகையான பூச்சி கொல்லி மருந்துகளுடன் இணைந்து கொள்ளக் கூடியதொன்றாகும். ஊக்கியின் அளவும், தெளிக்கும் காலமும், ஒன்றாய் இருந்தால் பூச்சி மருந்துகளுடன் கலந்து தெளிக்கலாம். பிளானோபிக்ஸ் ரொம்பவும், பாதுகாப்பானது. அதிலுள்ள நாப்தலின் அசிடிக் அமிலத்தின் உயிரைக் கொல்லும் வீரியம் சுமார் 1 கிலோ கிராம் உடம்பின் எடைக்கு ஒரு கிராம். பல வருடங்களாக உபயோகத்தில் இருந்த போதிலும் இதுவரையில் இதன் விஷத் தன்மையினால் தீங்கு ஏற்பட்டதாக ஒரு நிகழ்ச்சியும் இல்லை. ஒரு மில்லி லிட்டர் பிளானோபிக்ஸை 4 லிட்டர் தண்ணீரில் கலந்தால் 10 லட்சத்தில் 10 பகுதி வீரிய மருந்தான ஆல்பா, நாப்தலின் அசிடிக் அமிலக் கரைசல் கிடைக்கும். பிளானோபிக்ஸ் தாவர ஊக்கியாக பல்வேறு தினுசுப் பயிர்களில் தெளிக்கப்பட்டு அடைந்துள்ள பயன்களும் அடிக்கப்பட வேண்டிய அளவு முறைகளும் பின்வருமாறு:—

**பருத்தி:** இந்தியாவில் 1952 முதல் பிற தாவர ஊக்கிகளுடன் பிளானோபிக்சும், தெளிக்கப்பட்டு அதனால் கிடைக்கும் மகசூல் அதிகரிப்பு ஆராயப்பட்டு வருகிறது. பிளானோபிக்ஸ் ஊக்கியின் பயன் ஏற்கெனவே பூத்து முடிந்த பூக்களில் விட புதியதாய் உண்டான பூ மொட்டுகளில் அதிகமாய்க் காணப்படுகிறது. அதனால்தான் முதல் பூ விரிந்தவுடன் பத்து லட்சத்தில் நாற்பது பகுதிக் கரைசல் தெளிப்பது (40 PPM) 32 சதம் அதிக விளைச்சலைத் தந்துள்ளது. உதாரணமாய் எம். சி. யு. 1., எம். சி. யு. 4, பி. ஆர். எஸ். 30/2. சுஜாதா பருத்தியில் 10 இலட்சத்தில் பத்துப் பகுதி, கரைசல் நாப்தா அசிடிக் அமிலம் (பிளானோபிக்ஸாக) ஒரு எக்டருக்கு 1000 லிட்டர் கரைசல் வீதம் இலைத் தெளிப்பாக, முதல் பூ, பூக்கும் தருணத்திலும், மூன்று வாரங்கள் கழித்து மற்றொரு முறையும் தெளித்ததில் ஊக்கி தெளிக்கப்படாததைவிட சுமார் 8 சதம் முதல் 16.2 சதம் வரையில் அதிக மகசூல் கொடுத்துள்ளது. எம். சி. யு. 5ல்—1974-ஆம் வருடத்தில் பத்து இலட்சத்தில் பத்துப் பகுதி கரைசல் (10 PMM) நாப்தலின் அசிடிக் அமிலம், பிளானோபிக்ஸாக முதல் பூ பூத்தவுடன் ஒருமுறையும், 3 வாரங்களுக்குப் பின்னர் ஒரு முறையும் தெளித்ததில் எக்டருக்கு சுமார் 234 கிலோ விதைப் பருத்தி அதிக மகசூல் கிடைத்துள்ளது. இது, பூ பிஞ்சு உதிர்வதைக் கட்டுப்படுத்தி மகசூல் கொடுக்கக்கூடிய காய்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துகிறது.

இதுவரையில் கண்டறியப்பட்ட ஆராய்ச்சிகளின் முடிவு

களிலிருந்து அறிவது என்னவென்றால் பத்து இலட்சத்தில் பத்து பகுதி நாப்தலின் அசிட்டிக் அமிலம் (10PPM NAA) பிளாஞேபிக்ஸ்-ஆகத் தெளிப்பதுதான் மிகுந்த லாபத்தை தரக்கூடியதாய் உள்ளது. (ஒரு மில்லி லிட்டர் பிளாஞேபிக்ஸ் 4.5 லிட்டர் தண்ணீரில் கலக்குதல்) இதன் பகுதிக் கரைசலைக் கூட்டுவதினால் அதிகப் பயன் ஒன்றும் கிடைப்பதில்லை. தவிர பிளாஞேபிக்ஸ் ஊக்கி தனியாகவும், மற்ற பூச்சி மருந்துக் கலவைகள், உரக் கலவைகள் ஆகியவற்றுடன் கலந்து தெளிப்பதும் ஒரே மாதிரியான கூடுதலான பயனைத்தான் கொடுக்கிறது.

**பருத்திக்கு சிபாரிசு செய்யப்படும் அளவு :-**

125 மில்லி லிட்டர் பிளாஞேபிக்ஸை 550 லிட்டர் தண்ணீரில் கலந்து, எக்டருக்கு 550 லிட்டர் முதல் 1100 லிட்டர் கலவை வரையில் பயிர்களின் வளர்ச்சிக்கு தகுந்தபடி தெளிக்கலாம். இரண்டு முறைகள், அதாவது முதல் பூ மலர்ந்தவுடன் ஒரு முறையும், 3 அல்லது 4 வாரங் கழித்து பின்னர் ஒரு முறையும் அடிக்க வேண்டும்.

**நிலக்கடலை :** நிலக்கடலையில் பிளோனேபிக்ஸ் பத்து இலட்சத்தில் 40 பகுதிக் கரைசல் வீரிய மருந்து (40PPM) முப்பது முதல் நாற்பது நாட்களில் ஒன்றும், முதல் தெளிப்புக்குப் பின்னர் 30 முதல் நாற்பது நாட்களில் மற்றொன்றும் ஆக இரண்டு தெளிப்புகள் கொடுக்க வேண்டும். இதற்கு நான்கு மில்லி லிட்டர் பிளாஞேபிக்ஸ்-ஐ 4.5 லிட்டர் தண்ணீரில் கலக்க வேண்டும்.

**பயறு வகைகள் :** துவரையில் பிளாஞேபிக்ஸ் 10 லட்சத்தில் 20 பகுதி கரைசல் (20 ) முதல் பூ பூக்கும் பருவத்திலும், அதிக பட்சப் பூக்கள் பூக்கும் பருவத்திலும் ஆக 2 முறை தெளிப்பதால் சுமார் 42 சதம் அதிக மகசூல் கிடைப்பதாய் அறியப்பட்டது. இந்த ஊக்கியினால் ஒரு செடியில் காய்களின் எண்ணிக்கையும், தனிப்பட்ட விதைகளின் எடை



யும் கூடுகின்றன. இரண்டு மில்லி லிட்டர் பிளாஞேபிக்ஸை 4.5 லிட்டர் தண்ணீரில் கலந்தால் மேற்கூறிய 10 லட்சத்தில் 20 பகுதி கரைசல் கிடைக்கும். உளுந்திற்கு, பத்து இலட்சத்தில் 25 பகுதி கரைசல் நாப்தலின் அசிடிக் அமிலம் வீரிய மருந்தாக (25 PPM) பிளாஞேபிக்ஸ் ஓரிரண்டு பூக்கள் பூத்த பருவத்தில் ஒரு தெளிப்பும், நிறையப்பூக்கள் பூத்திருக்கும் பருவத்தில் ஒரு தெளிப்பும், தெளிப்பதினால் சுமார் 35 சதம் அதிக மகசூல் கிடைக்கிறது. இந்த அதிக விளைச்சல் செடிகளில் அதிகமாய் காய்ப்பதாலும், காய்களில் அதிக விதைகளிருப்பதாலும் கிடைக்கப் பெறுகின்றன. 2.5 மில்லி லிட்டர் பிளாஞேபிக்ஸ் ஊக்கியை 4.5 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

பச்சைப் பயிரில் 2 மில்லி லிட்டர் பிளாஞேபிக்ஸை 4.5 லிட்டர் தண்ணீரில் கலந்து உளுந்துக்கு அடிப்பதைப் போல சில பூக்கள் பூத்துள்ளபோது ஒரு முறையும், 50 சதம் பூக்கள் பூத்திருக்கும்போது ஒருமுறையும் தெளிப்பதால் அதிகப் பயன் கிடைப்பதாகத் தெரிகிறது.

சோயா மொச்சையில் பத்து இலட்சத்தில் இருபது பகுதிக் கரைசல் வீரிய மருந்தை பிளாஞேபிக்ஸாக 50 சதம் பூக்கள் பூத்திருக்கும் பருவத்தில் ஒரு முறை தெளித்தால் 24 சதம் அதிக மகசூல் கிடைப்பதாய் ஆராய்ச்சிகளின் மூலம் அறியப்பட்டுள்ளது. இது காய்களின் எடையையும், விதைகளின் எண்ணிக்கையையும், விதைகளின் எடையையும், கூடுதலாக்குகிறது. 2 மில்லி லிட்டர் பிளாஞேபிக்ஸை 4.5 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.



பச்சைப் பட்டாணியில் பிளாஞேபிக்ஸ் வீரிய மருந்தை பத்து இலட்சத்தில் 10 பகுதி கரைசல், முதல் சில பூக்கள் பூத்திருக்கும் சமயத்தில் ஒரு தெளிப்பும், பின்னர் 3 வாரங்கள் இடைவெளியில் இரண்டு தெளிப்பும் ஆக மொத்தம் மூன்று தெளிப்புகள் அதிக விளைச்சலைத் தந்துள்ளது. ஒரு மில்லி லிட்டர் பிளாஞேபிக்ஸை 4.5 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும்.

நெல் பயிரில் பிளாஞேபிக்ஸ் பத்து இலட்சத்தில் பத்து பகுதி வீரிய மருந்து (1 மில்லி லிட்டர் பிளாஞேபிக்ஸ் 4.5 லிட்டர் தண்ணீரில் கலந்து) பூப்பதற்கு முன்னர் ஒரு தெளிப்பும், 10 இலட்சத்தில் 15 பகுதி வீரிய மருந்து (1.5 மில்லி லிட்டர் பிளாஞேபிக்ஸை 4.5 லிட்டர் தண்ணீரில் கலந்து) மொட்டுகள் விடும் பருவத்தில் ஒரு தெளிப்பும், பத்து இலட்சத்தில் 20 பகுதி வீரிய மருந்து (2 மில்லி லிட்டர் பிளாஞேபிக்ஸ் 4.5 லிட்டர் தண்ணீரில் கலந்து) நெல் மணிகளில் பால் பிடிக்கும் பருவத்தில் ஒரு தெளிப்புமாக 3 தெளிப்புகள் எக்டருக்குச் சுமார் 500 கிலோ கிராம் அதிக விளைச்சல் கொடுப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கோதுமையில் பத்து இலட்சத்தில் 20 பகுதி வீரிய மருந்தை (2 மில்லி லிட்டர் பிளாஞேபிக்ஸ் 4.5 மில்லி லிட்டர் தண்ணீரில் கலந்து) கதிர்கள் வெளிவருவதற்கு முன்னர் ஒரு தெளிப்பும், கதிர்கள் வெளிவந்த பின்னர் ஒரு தெளிப்பும் கொடுத்தால் சராசரி 16.5 சதம் அதிக விளைச்சல் கொடுக்கிறது. இந்த ஊக்கியை யூரியா உரத்துடன் கலந்து தெளிக்கலாம்.

இதுவரையில் பருத்தி, பயறு வகைகள், நெல், கோதுமை, பயிர்களில் பிளாஞேபிக்ஸ் ஊக்கியின் பயன்பற்றி அறிந்தோம். இனி, பழவகைகளில் இதன் பலனைப் பற்றி அறிவோம்:—

**பழவகைகள் :**

**மா :**—பிளாஞேபிக்ஸ் ஊக்கியின் ஆராய்ச்சிகள் மா-வில் 1951 முதல் நடத்தப்பட்டு வருகின்றன. பல ரகங்களில் வித்தியாசமான பலன் கிடைத்தபோதிலும் கீழ்க் கண்ட இரண்டு விதமான தெளிப்புகள் மிகுந்த பயன் தருவதாய் கண்டறியப்பட்டுள்ளது.

பத்து இலட்சத்தில் 20 பகுதி கரைசல் நாப்தலின் அசிடிக் அமிலம் (20PPM) அதாவது இரண்டு மில்லி லிட்டர் பிளாஞேபிக்ஸை 4.5 லிட்டர் தண்ணீரில் கரைத்து பிஞ்சு பிடிக்கும்

காலத்தில் ஒரு தெளிப்பும் (Pea Stage) பின்னர் காய்முற்றும் காலத்தில் (Marble Stage) ஒரு தெளிப்பும் கொடுக்கலாம்.

(அல்லது)

பத்து இலட்சத்தில் நாற்பது பகுதி கரைசல் வீரிய மருந்தை அதாவது 4 மில்லி லிட்டர் பிளானோபிக்ஸ் 4.5 லிட்டர் தண்ணீரில் கலந்து பிஞ்சு பிடிக்கும் காலத்தில் ஒரு முறை மட்டும் தெளிக்கலாம்.

மேற்கூறிய தெளிப்புகளினால் பழம் விளைச்சல் சுமார் 45 சதம் அதிகமாகவும், அதிக அஸ்கார்பிக் அமிலத்துடன் கூடின கனமான பழங்களும் கிடைக்கப் பெறுகின்றன. தவிர, மா மரத்தில் பூக்கொத்துக்களில் பத்து இலட்சத்தில் 200 பகுதி கரைசல் (20 மில்லி லிட்டர் பிளானோபிக்ஸை 4.5 லிட்டர் தண்ணீரில் கலந்து) வீரிய மருந்து பிளானோபிக்ஸாக பூ பிடிக்கும் காலத்தில் ஒரு முறை அடித்தால் அதில் உண்டாகும் கோளாறுகள் தவிர்க்கப்படுகின்றன. இதே மாதிரி பிஞ்சு பிடித்த பின்னர் ஒரு முறை அடித்தால் காய்களில் ஏற்படும் கோளாறுகள் சுமார் 75 சதம் குறைவதாயும் அறியப்பட்டுள்ளது.

**அன்னாசிப் பழம்:**

ஒரு மில்லி லிட்டர் பிளானோபிக்ஸை 4.5 லிட்டர் தண்ணீரில் கரைத்து அதில் 30 முதல் 50 மில்லி லிட்டர் கரைசலை செடியின் இருதய பாகத்தில் பூக்கள் விடுவது எதிர்பார்க்கும் காலத்திற்கு சற்று முன்னர் ஊற்றினால் செடி விரைவில் பூப்பதற்கு உந்தப்படுகின்றது.

பழத்தின் பருமன் அதிகமாவதற்கு பத்து மில்லி லிட்டர் பிளானோபிக்ஸ் ஊக்கியை 4.5 லிட்டர் தண்ணீரில் கலந்து இளம் பழங்களின் மேல், பழம் பூராவும் படும்படி அறுவடையாவதற்கு 8 வாரங்களுக்கு முன்னர் தெளித்தால் நல்ல பயன் கிடைக்கின்றது.

அறுவடை ஆவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னால் பழங்களை நன்கு நனையும்படி மேற்கூறிய பிளானோபிக்ஸ் கரைசலை தெளித்தால், பழங்கள் முற்றுவது தாமதமாகிறது.

**திராட்சைப் பழம்:**

பிளானோபிக்ஸ் 10 மில்லி லிட்டர் 4.5 லிட்டர் நீரில் கலந்து (100 PPM) அறுவடைக்கு பத்து அல்லது பதினைந்து நாட்களுக்கு முன்னர் தெளித்தால் பழங்கள் உதிர்வது கட்டுப்படுத்தப்படுகின்றன. மேலும் ஒரு மில்லி லிட்டர் பிளானோபிக்ஸை 4.5 லிட்டர் தண்ணீரில் கலந்து (10 PPM) கொடிகள் கவாத்து செய்யும்போது ஒருமுறையும், கொடியில் பூங்கொத்து விடும் சமயத்தில் இரண்டாவது முறையும் அடித்தால் பழங்களின் அளவும் கனமும் அதிகரிக்கின்றன.

**ஆரஞ்சு, சாத்துக்குடி** பழ வகைகளின் மரங்களின் முன் அறுவடை பழ உதிர்தல் பிளானோபிக்ஸ் பத்து இலட்சத்தில் பத்து பகுதி கரைசல் (1 மில்லி லிட்டர் + 4.5 லிட்டர் தண்ணீர்) அடிப்பதால் தவிர்க்கப்படுகின்றன. கமலா ஆரஞ்சு பழ மரங்களில் 62 சதமும், சாத்துக்குடி பழ மரங்களில் 67 சதமும்

**பப்பாளி, கொய்யா, பலா,** மரங்களில் கூட பிஞ்சு பழுத்து உதிர்தல் பிளானோபிக்ஸ் 1 மில்லி லிட்டர் 1 லிட்டர் தண்ணீரில் கலந்து (45 PPM) தெளிப்பதால் குறைக்கப்படுகின்றது.

**ஆப்பிள், பேரிக்காய்** முதலிய மலைப் பிரதேச பழங்களில் பிளானோபிக்ஸ் பத்து இலட்சத்தில் பத்துப் பகுதி கரைசல் (1 மில்லி லிட்டர் + 4.5 லிட்டர் தண்ணீர்) அதிகப் பழ உதிர்தல் எதிர்பார்க்கப்படும் காலத்திற்கு ஒன்று அல்லது இரண்டு வாரங்களுக்கு முன்னால் ஒருமுறை தெளிப்பதால் பழம் உதிர்தல் குறைந்து விடும். அதே சமயத்தில் பழ முதிர்வது தாமதமாவதில்லை. சுமார் பதினைந்து முதல் இருபத்தைந்து லிட்டர் கரைசல் ஒவ்வொரு மரத்திற்கும் தெளிக்கப்படவேண்டும்.

**காய்கறிகள்:**

**மிளகாய்:** மிளகாய் செடியின் பத்து லட்சத்தில் ஐந்தல்லது பத்து பகுதி நாப்தலின் அசிடிக் அமிலம் (5 அல்லது 10 PPM) வீரிய



மருந்தை பிளானோபிக்ஸ் ஆக (0.5 அல்லது 1.0 மில்லி லிட்டர் பிளானோபிக்ஸ் + 4.5 லிட்டர் தண்ணீர்) இரண்டு முறைகள் அதாவது பூக்கள் விடும் சமயத்தில் முதலாவதாயும், இருபது அல்லது முப்பது நாட்களுக்குப் பின்னர் இரண்டாவதாயும், தெளித்தால் நல்ல பயனைத் தருகின்றன. இது பூக்கள் உதிர்வதை குறைத்து சுமார் 39 சதவிகித அதிக மகசூல் (வறமிளகாய்) கிடைக்கச் செய்கின்றது.

**கத்தரி, தக்காளி:** செடிகளிலும் பத்து லட்சத்தில் நாற்பத்தைந்து பகுதி (பிளானோபிக்ஸ் ஒரு மில்லி லிட்டர் + 4.5 லிட்டர் தண்ணீர்) வீரிய மருந்தான நாப்தலின் அசிடிக் அமிலக் கரைசல் பூ, பிஞ்சு, உதிர்தலைக் கட்டுப்படுத்தி, பழங்களின் பருமனை அதிகப்படுத்துவதன் காரணமாய் அதிக விளைச்சலைக் கொடுக்கின்றது.

மேற்கூறிய பலவகையான பயன்களை கூர்ந்து நோக்கினால், பிளானோபிக்ஸ் தாவர ஊக்கி



யானது குறைந்த அளவுகளில் அதாவது பத்து இலட்சத்தில் பத்து பகுதி முதல் ஐம்பது பகுதி நாப்தலின் அசிடிக் அமிலக்கரைசலாக தெளிப்பதால் அநேக வகையான பயிர்களில் பூ, பிஞ்சு உதிர்வதைக்கட்டுப்படுத்தி, நல்ல மகசூலை கிடைக்கச் செய்கிறது என்பது தெளிவாகிறது. பழவர்க்கங்களில், பழங்களின் பருமனை அதிகரிக்கச் செய்வதுடன் அவற்றின் வடிவங்களில் ஏற்படும் கோளாறுகள் தவிர்க்கப்படுகின்றன.

# எக்ரோமின் கண்கூடான பயனைத் தருகிறது...
# லாபம் 20 சதவீதத்திற்கு மேல் உயர்கிறது



## தாவர உணவுச் சத்துக்கள் சிலேடேட் வடிவில் அடங்கியிருப்பதனுல் எக்ரோமின் பயிர் விளைச்சலைச் சிக்கனமான முறையில் 20% அல்லது அதற்கு மேலும் உயர்த்துகிறது.

- எக்ரோமின் இந்தியாவின் முதல் தாவர உணவு இலைத் தெளிப்பாகும். ஈரப்படுத்தவும், பரப்பவும் உதவும் ஊக்கி, கிரகிப்புத் தன்மையை மேலும் அதிகரிக்கிறது.
- எக்ரோமின் தண்ணீரில் கரைகிறது. மற்ற எக்ரோ கெமிக்கல்களுடன் இதை உபயோகிக்கலாம்.
- எக்ரோமின் முக்கியமான ரசாயன உரங்களின் உபயோகிப்புத் தன்மையை உயர்த்துகிறது.
- எக்ரோமின் பயிர்களின் மகசூலையும், தரத்தையும் செம்மையாக்குகிறது.




**நிச்சயமான பயனைத் தருவதற்கென எக்ரோமின் சிலேட் செய்யப்பட்டுள்ளது**

நியூட்ரியன்டுகள் (சத்துக்கள்) படிப்படியாக முழுவதும் கிரகிக்கப்படுவதை சிலேஷன் உறுதி செய்கிறது...



**நிரூபணம் இதோ:**

''நெல்... எக்ரோமின் மூலம் விளைச்சல் 20% அதிகரித்தது''

ஆண்டிப்பாளையம்
தமிழ்நாடு

அதிகப்படி விவரங்களுக்கு இந்த முகவரிக்கு எழுதவும்
ஏரிஸ் எக்ரோ-வெட் இண்டஸ்ட்ரீஸ் பிரை. லிட்.
தபால் பெட்டி எண் 9417, பம்பாய் 400 093

Granc.83 TM

# எண்ணெய்வித்துப் பயிர்கள்

தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் எண்ணெய்வித்துப் பயிர்கள் முக்கியமானவை நிலக்கடலை, எள், சூரியகாந்தி முதலியவை.

நிலக்கடலை தமிழ்நாட்டில் 1.14 மில்லியன் ஹெக்டர் நிலப் பரப்பில் பயிர் செய்யப்பட்டு, ஆண்டுதோறும் 1.21 மில்லியன் டன் நிலக்கடலையைக் கொடுக்கிறது. எல்லா மாவட்டங்களிலும் இது பயிரிடப்பட்டபோதிலும், முக்கியமாக வடார்க்காடு, தென் ஆர்க்காடுமாவட்டங்களின்பெரும் பகுதிகளிலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் பொள்ளாச்சி, மற்றும் கீழ்பவானி பாசனத் திட்டப் பகுதிகளிலும், மதுரை மாவட்டத்தில் தேனி, கம்பம், உத்தமபாளையம் பகுதிகளிலும் அதிக அளவு சாகுபடி செய்யப்படுகிறது.

நிலக்கடலை பயிரிடுவதற்கு மணற்பாங்கான செம்மண் அல்லது வண்டல்மண் நிலம் ஏற்றது. நல்ல வடிகால் வசதி அவசியம். நிலத்தை 6 அங்குல ஆழத்திற்கு மேற்படாமல் உழுது மண்ணை புழுதியாக்க வேண்டும். ஆழமாக உழுவதால் செடியில் விழுதுகள் ஆழமாக இறங்கி, அறுவடை சமயத்தில் காய்கள் பூமியிலேயே தங்கிவிட ஏதுவாகும்.

மானாவாரியாக நிலக்கடலை விதைக்க ஏற்றபருவம் வைகாசி-ஆனி மாதங்களாகும். ஆயினும், பொள்ளாச்சி, கம்பம் முதலிய பகுதிகளில் பங்குனி-சித்திரை மாதங்களில் பெய்யும் பருவ முன் மழையைக் கொண்டு மற்றப் பகுதிகளுக்கு முன்னதாகவே நிலக்கடலை விதைக்கப்படுகிறது. பொதுவாக, பாசனப் பயிராக நிலக்கடலை விதைக்க ஏற்ற பருவம் மார்கழி-தை மாதங்களாகும். பெருவாரியான பரப்பளவில் கொத்து நிலக்கடலை சாகுபடி செய்யப்படுகிறது. இதனுடைய வயது 100-105 நாட்களாகும். பட்டாணி ரகம் என்று சொல்லப்படுகின்ற டி. எம். வி. 2-ஆம் நம்பர் கடலையே அதிகமாகச் சாகுபடி செய்யப்படுகிறது.

டி. வி. எம். 7, டி. வி. எம். 9, பி. ஓ. எல். 2 முதலிய ரகங்களும் கொத்து வகையைச் சேர்ந்தவை. இந்த ரகங்கள் ஏக்கருக்கு மானாவாரியாக 600 கிலோவும் பாசனப் பயிராக 1000 கிலோ கடலையும் கொடுக்கக் கூடியவை. 75 சதம் தொலிப்புத் திறன் கொண்டவை. இவற்றில் 50 சதம் எண்ணெய்ச் சத்து உண்டு. இவைகளில் ஏதாவதொரு ரகத்தைப் பயிரிடுவதன் மூலம் அதிக இலாபத்தைப் பெறலாம்.

அடர்கொத்து ரகமான டி.எம வி. 10 மானாவாரியாகப் பயிரிட ஏற்றது. இதன் வயது 120 நாட்கள். ஏக்கருக்கு 750 கிலோ காய்களைக் கொடுக்கும். 77 சதம் தொலிப்புத் திறனும், 54.4 சதம் எண்ணெய்ச் சத்தும் கொண்ட சிறந்த ரகம் இது.

தேவையான உரத்தைக் கடைசி உழவின்போது அடியுரமாக இட வேண்டும். 5 டன் தொழுவுரம், 20 கிலோ அம்மோனியம் சல்பேட் அல்லது 11 கிலோ யூரியா 50 கிலோ சூப்பர் பாஸ்பேட், 30 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவை ஏக்கர் ஒன்றுக்குத் தேவையான உரங்களாகும். முதல் முறையாக வெண்காரம் எனப்படும் போராக்ஸ் போடுவதாயிருந்தால் ஏக்கருக்கு 8 கிலோ வரை போடலாம். முந்திய ஆண்டுகளில் வெண்காரம் போட்டிருந்தால் 1 ஏக்கருக்கு 2 கிலோ போதுமானது. இது விதைகள் பருமனடைந்து தொலிப்புத் திறன் அதிகரிக்க உதவும்.

ஏக்கருக்கு 45 முதல் 50 கிலோ விதைப் பருப்பு தேவைப்படும். விதைப்பதற்கு முன்தினம் ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் திராம் அல்லது கேப்டான் மருந்தைக் கலக்க வேண்டும். இதனால் விதைகளின் மூலம் பரவும் வேர் அழுகல் நோய், செடி அழுகல் நோய் இவற்றைக் கட்டுப்படுத்தலாம்.

விதைக்கும் நாளன்று 120 கிராம் வெல்லத்தை அரை லிட்டர் தண்ணீரில் கலந்து நன்றாகப் பாகு வரும்படி காய்ச்சி ஆற வைக்க வேண்டும். ஆறிய வெல்லப்பாகில், 2 பாக்கெட் ரைஸோபிய நுண்ணுயிரைக் கலக்கவேண்டும். ஒரு ஏக்கருக்குத் தேவையான விதையை இந்தப் பாகுடன் கலந்து, சிறிதுநேரம் நிழலில் உலர வைக்க வேண்டும். இந்த நுண்ணுயிர், செடிகளின் வேர்களில் வேர் முடிச்சுக்கள் அதிகரித்து, தழைச்சத்து அதிகம் சேமிக்கப்படவும், இதன் காரணமாக மகசூல் பெருகவும் வழி செய்கிறது. இவ்வாறு கலக்கப்பட்ட விதையை நாட்டுக் கலப்பையின் பின்சாலில் விதைக்க வேண்டும். மானாவாரி[illegible]ரானால் 6 அங்குலத்துக்கு 6 அங்குலம் இடைவெளியுடனும், பாசனப் பயிரானால் 9 அங்குலத்துக்கு 6 அங்குலம் இடைவெளியுடனும் விதைக்க வேண்டும்.

விதைத்த 20 நாட்களில் முதல் களை எடுக்க வேண்டும். இப்பருவத்தில் சாதாரணமாக சுருள் பூச்சி தோன்றி இலைகளைச் சேதப்படுத்தும். இப்பூச்சியைக் கட்டுப்படுத்த, ஜோலோன் 300 மில்லி அல்லது நூவான் 200 மில்லி மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத் தெளிப்பானால் தெளிக்க வேண்டும். தண்ணீர் வசதியில்லாத இடங்களில் ஜோலோன் 4 சதம் தூள், அல்லது டீப்டிரக்ஸ் 5 சதம் தூளை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவலாம்.

விதைத்த 40-45 நாட்களுக்குப் பிறகு இரண்டாவது முறையாகக் களை எடுக்க வேண்டும். இச்சமயத்தில் செடிகளைச் சுற்றிலும் மண்ணைக் கிளறிவிட்டு, மண் அணைப்பது சிறந்தது. இதனால் விழுதுகள் அதிகமாக மண்ணில் இறங்கி அதிக அளவு காய் பிடிக்கும். மண் அணைப்பதற்கு முன்பு ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் இடுதல் சிறந்தது. ஜிப்சத்திலுள்ள சத்துக்களை வேர்களின் மூலம் மட்டுமின்றி விழுதுகளின் மூலமாகவும் கடலைச் செடி எடுத்துக் கொள்ளுகிறது. இதன் மூலம் பருப்பு நன்கு முதிர்ச்சி அடையவும், பொக்குக் காய்களின் அளவு குறையவும் உதவுகிறது. சுண்ணாம்புச் சத்து அதிகமாக இருக்கும் பகுதிகளில் ஜிப்சம் போட அவசியமில்லை.

செடி 50-55 நாட்கள் வயதாயிருக்கும்பொழுது டிக்கா இலைப் புள்ளி நோயும், துரு நோயும் அதிகமாகத் தாக்க ஆரம்பிக்கும். இந்நோய்களைக் கட்டுப்படுத்த ''ட்யூடர்'' அல்லது ''டைத்தேன் எம். 45'' மருந்தை ஏக்கருக்கு 400 கிராம் வீதம் கைத் தெளிப்பான் மூலம் 200 லிட்டர் தண்ணீரிலும், விசைத் தெளிப்பான் மூலம் 50 லிட்டர் தண்ணீலும் கலந்து தெளிக்க வேண்டும்.

கடலைச்செடி இளம் பருவத்தில் இருக்கும்பொழுதே சில பகுதிகளில் மானாவாரிப் பருவத்தில் சிவப்புக் கம்பளிப் புழுவின் தாக்குதல் காணப்படுவதுண்டு. மழை பெய்தவுடன் இப்புழுக்கள் ஆயிரக்கணக்காகத் தோன்றி, கூட்டம் கூட்டமாக ஒரு வயலிலிருந்து மற்ற வயல்களுக்கு நகர்ந்து, இலைகளைத் தின்று பெரும் சேதம் விளைவிக்கின்றன. சிவப்புக் கம்பளிப் புழுவைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பாதுகாப்பு முறைகளைக் கையாள வேண்டும்.



மழை பெய்தவுடன், தாய் அந்து பூச்சிகள் வெளிப்படும். வெள்ளை இறக்கைகளில் சிவப்புப் புள்ளிகளுடன் காணப்படும் இந்த அந்துப்பூச்சிகளை உடனே அழித்து விடவேண்டும். ஒரு பூச்சி ஆயிரக் கணக்கான முட்டைகள் இடுகிறதினால் அதிகமான அளவு கம்பளிப் புழுக்கள் வெளிப்படும். ஆகவே, மழை பெய்தவுடன் விளக்குப் பொறி, பெட்ரோமாக்ஸ் விளக்கு, சொக்கப்பனைக் கொளுத்துதல் போன்ற முறைகளை இரவு நேரங்களில் கையாண்டு, அந்துப் பூச்சிகளை அழிக்க வேண்டும். புழுக்கள் வெளிவந்த 7 முதல் 14 நாட்களுக்குள், பி. எச். சி. 10 சதத் தூளை ஏக்கருக்கு 8 கிலோ வீதம் தூவி, இளம் புழுக்களைக் கட்டுப்படுத்தலாம். வளர்ச்சி அடைந்தப் புழுக்களைக் கட்டுப்படுத்த, நூவான் 200 மில்லி அல்லது நூவக்ரான் 250 மில்லி மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

விதைத்த 100-105 நாட்களில் அறுவடை செய்ய வேண்டும். கால தாமதம் செய்தால் கொத்து நிலக்கடலை விதைகள், விதை மந்தம் இல்லாத காரணத்தால், பூமியிலேயே முளைத்து மகசூலை பாதிக்கும். அறுவடை செய்தவுடன் கடலையில் சுமார் 40 முதல் 45 சதம் ஈரத்தன்மை இருக்கும். ஆகவே, அறுவடை செய்யப்பட்ட கடலையை வெய்யிலில் நன்கு உலர்த்தி, ஈர நிலையை 6 முதல் 8 சதம் வரும்படி குறைத்துவிட வேண்டும்.

நிலக்கடலைக்கு அடுத்தாற்போல், எள் ஒரு முக்கியமான எண்ணெய்வித்துப் பயிர். தமிழ்நாட்டில் 1.23 இலட்சம் ஹெக்டர் நிலப்பரப்பில் எள் சாகுபடி செய்யப்படுகிறது. எள்ளைப்பயிரிடுவதற்கு மூன்று முக்கிய பருவங்கள் உள்ளன. மானாவாரிப் பயிராக 110 முதல் 125 நாட்கள் வயதுடைய கே. ஆர். ஆர். 1 அல்லது கே. ஆர். ஆர். 2 முதலிய ரகங்களை ஆடி மாதத்தில் விதைக்கலாம். இதே பருவத்தில் 90 நாட்கள் வயதுடைய டி. எம். வி. 3 ரகமும் ஏற்றது. குளிர் காலப் பயிராக, கார்த்திகை-மார்கழி மாதங்களில், 80-85 நாட்கள் வயதுடைய டி. எம். வி. 2 ரகம் பயிரிட ஏற்றது. கோடைப் பருவத்தில் பாசனப் பயிராக தை, மாசி மாதங்களில் டி.எம்.வி. 3 ரகத்தைச் சாகுபடி செய்யலாம்.

நல்ல வடிகால் வசதியுள்ள மணற்பாங்கான வண்டல் மண் அல்லது செம்மண் எள் சாகுபடிக்கு ஏற்றது. பூமியை நன்கு உழுத பின், அடி உரமாக ஏக்கருக்கு 2.5 டன் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் 45 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 20 கிலோ யூரியா, 56 கிலோ சூப்பர் பாஸ்பேட், 15 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவற்றை மானாவாரிப் பயிருக்கு இடுதல் வேண்டும். பாசனப் பயிரானால், மானாவாரிப் பயிரைப் போல் 1.5 பங்கு உரமிடுதல் அவசியம். இவற்றுடன் ஏக்கருக்கு 2 கிலோ மாங்கனீஸ் சல்பேட் என்ற நுண்சத்தை 2 கிலோ போடுவதால் விளைவைப் பெருக்கலாம். ஏக்கருக்கு 2 கிலோ விதை தேவைப்படும். செடி முளைத்த 10வது நாளில் முதல் முறையாகவும், 20-வது நாளில் 2-வது முறையாகவும் செடிகளைக் கலைத்துவிட வேண்டும். மானாவாரிப் பயிருக்கு 3/4 அடிக்கு 3/4 அடி இடைவெளி விட்டும், பாசனப் பயிருக்கு ஒரு அடிக்கு ஒரு அடி இடைவெளி விட்டும் செடிகளைக் கலைக்க வேண்டும்.

விதைத்த 25-30 நாட்களில் முதல் களையும், அவசியமானால் விதைத்த 40 நாட்களில் 2-வது களையும் எடுக்க வேண்டும். இலை சுருட்டுப்புழு, சாம்பல் நோய் இவற்றைக் கட்டுப்படுத்த விதைத்த 40-வது நாளிலும் 60-வது நாளிலும் 'எண்டோ சல்பான்' 500 மில்லி மருந்துடன், 600 கிராம் டைத்தேன் எம். 45 என்ற பூசண மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து, கைத்தெளிப்பானால் தெளிக்க வேண்டும்.

இலைகளும் செடிகளின் தண்டு பாகமும் மஞ்சள் நிறமாக மாறத் தொடங்கியதும் செடிகளை அறுவடை செய்து குவியல்களாக வைத்து, பிறகு உலர்த்தி, குச்சியால் அடித்து, விதைகளைப் பிரித்து எடுக்க வேண்டும். மானாவாரிப் பயிரின் மூலமாக ஏக்கருக்கு 150 முதல் 200 கிலோ மகசூலும், பாசனப் பயிரின் மூலம் 250 முதல் 300 கிலோ மகசூலும் பெறலாம்.

ஒரு சில ஆண்டுகளுக்கு முன் நம் நாட்டிற்குப் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட சூரியகாந்தி நம் மாநிலத்தின் குறிப்பிட்டச் சில பகுதிகளில் செழித்து வளருகிறது. இதைப் பயிர் செய்ய கரிசல் மண் ஏற்றது. மானாவாரிப் பயிராக ஆடி, புரட்டாசி மாதங்கள் விதைப்பதற்கு ஏற்ற காலமாகும். என்றாலும் ஆண்டின் எல்லாப் பருவங்களிலும் இதைப் பயிர் செய்யலாம்.

பாசனப் பயிராக தை, சித்திரை மாதங்களில் விதைப்பது நல்லது. 90 நாட்கள் வயதுடைய இ. சி. 68413, 68414, 68415 ஆகிய வற்றில் ஏதாவது ஒரு ரகத்தைப் பயிரிடுவது நல்லது. ஏக்கருக்கு 5 கிலோ விதை தேவை. விதைப்பதற்கு முன் 1 கிலோ விதைக்கு 2 கிராம் பிராசிகால் மருந்தைக் கலந்து விதைப்பதன் மூலம் தண்டு அழுகல் நோயைக் கட்டுப்படுத்தலாம். மானாவாரிப் பயிருக்கு 1.5 அடிக்கு 1 அடி இடைவெளியும், பாசனப் பயிருக்கு 1.5 அடிக்கு 3/4 அடி இடைவெளியும், பாசனப் பயிருக்கு 1.5 அடிக்கு 3/4 அடி இடைவெளியும் விட்டு விதைக்க வேண்டும்.

விதைப்பதற்கு முன், அடி உரமாக ஏக்கருக்கு 50 கிலோ அம்மோனியம் சல்பேட் அல்லது 22 கிலோ யூரியா, 150 கிலோ சூப்பர் பாஸ்பேட், 16 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவற்றைப் போட வேண்டும். மேலும், விதைத்த 30வது நாளில் 17 கிலோ யூரியாவாக மேல் உரமாக இடுதல் நல்லது. பூக்கும் தருணத்தில் அதிக வறட்சியோ அல்லது மழையோ இருக்குமானால் விதைப்பிடிப்பு குறைந்து விடும்.

இலைப்புழு, துருநோய் இவற்றைக் கட்டுப்படுத்த பென்தியான் 0.05 சதம், தயோவிட் 0.1 சதம் ஆகிய இரண்டையும் கலந்து விதைத்த 30வது நாளிலும், 45வது நாளிலும் தெளிக்க வேண்டும். கொண்டைத் துளைப்பான் புழுக்களை ஒழிக்க எண்டோ சல்பான் 0.07 சதம் மருந்தை மாலை நேரத்தில் பூக்களில் படுமாறு தெளிக்க வேண்டும். பூக்களின் பின்பகுதி மஞ்சளாக மாறியபின் பூக்களை அறுவடை செய்து, விதை பிரித்து காய வைக்க வேண்டும். பாசனப் பயிரின் மூலம் ஏக்கருக்கு 700 முதல் 800 கிலோ மகசூலும், மானாவாரிப் பயிரின் மூலம் 300 முதல் 400 கிலோ மகசூலும் பெறலாம்.

**மு. ஸ்டீபன் துரைராஜ்,**
**இணைப் பேராசிரியர்,**
**பயிரியல் துறை,**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,**
**கோவை.**

# தமிழ்நாட்டில் நிலக்கடலை சாகுபடி



**கே. பெருமாள்**
**இணை இயக்குநர்**
**(எண்ணெய் வித்துக்கள்)**
**வேளாண்மை இயக்ககம்**

உலக நாடுகளில் உணவு எண்ணெய் உற்பத்தியில் இந்தியா பெரும்பங்கு வகிக்கிறது. ஆண்டுதோறும் சுமார் ரூ. 1,200 கோடி மதிப்புள்ள எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாவதன் மூலம் தேசிய வருமானத்தில் இப்பயிர் மிகவும் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.

தமிழ்நாட்டில் நெற்பயிருக்கு அடுத்து பயிரிடப்படும் முக்கிய பயிர் எண்ணெய் வித்துப்பயிர்களாகும். சுமார் 11.5 இலட்சம் டன் எண்ணெய்வித்துக்கள் 11 இலட்சம் எக்டேரிலிருந்து கிடைக்கிறது. இதன் மதிப்பு ரூ. 200 கோடியாகும். தானிய உற்பத்தியில் தன்னிறைவு கண்ட தமிழ்நாட்டில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் ஒரு தேக்கநிலை காணப்படுகிறது. தற்பொழுது சுமார் 4.31 இலட்சம் டன் உணவு எண்ணெய் கிடைக்கிறது. சுகாதாரத் தேவைக்குத் தனி மனிதனுக்கு நாளொன்றுக்கு ஒரு அவுன்சு எண்ணெய்யாவது தேவைப்படும் என்பது சத்துணவு நிபுணர்களின் கருத்து.

இந்த அடிப்படையில் பெருகி வரும் மக்கள் தொகையைக் கணக்கிட்டு 83-84 ஆம் ஆண்டு இறுதிக்குள், அதாவது ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் 5.12 இலட்சம் டன் எண்ணெய் உற்பத்தி செய்யத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டிருக்கிறது. அதற்கேற்ப எண்ணெய்வித்துப் பயிரிடும் பரப்பையும் 35.40 இலட்சம் ஏக்கரிலிருந்து 41.90 இலட்சம் ஏக்கராக அதிகரித்தும் எண்ணெய் வித்து உற்பத்தியிலுள்ள பற்றாக்குறை நீக்கப்படும் எண்ணெய் வித்துப்பயிர்களில் முக்கியமானது நிலக்கடலை. நிலக்கடலை மற்றும் எள் போன்ற முக்கிய எண்ணெய்வித்துப் பயிர்கள் பெரும்பாலும் மானாவாரிப் பயிராகப் பயிரிடுவதேயாகும். சாகுபடி செய்யும் பரப்பில் 80 சதம் மழையை நம்பியே பயிராகிறது. எனவே, உழவர்கள் இப்பயிரைப் பயிரிடுவதில், முதலீடு செய்வதில் தயக்கம் காட்டுகிறார்கள். புதிய ரக வித்துக்களை உபயோகிப்பதிலும், வேண்டிய அளவில் உரமிடுவதிலும், பயிரைப் பாதுகாப்பதிலும் அதிக ஊக்கம் காட்டுவதில்லை.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு மானாவாரிப் பயிரிலும் அதிக மகசூல் பெற ஆராய்ச்சிகள் பல மேற்கொள்ளப்பட்டுப் பல்வேறு புதிய முறைகளைக் கையாள உழவர் பெருமக்களுக்கு இன்று தமிழ்நாடு வேளாண்மைத் துறை சிபாரிசு செய்கிறது.

பசுமைப் புரட்சிக்கு முக்கிய காரணங்கள் உயர்விளைச்சல் தரும் ரகங்களும், திருந்திய முறை சாகுபடி முறைகளுமாகும். ஏனைய தானிய வகைகளைப் போன்று நிலக்கடலையில் உயர் விளைச்சல் தரும் வித்துக்கள் இன்றும் வெளிவராவிட்டாலும் தற்போதுள்ள ரகங்களைக் காட்டிலும் அதிகப் பலன் தரக்கூடிய வித்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இந்த வரிசையில் தற்போது டி. எம். வி. 9, டி. எம். வி. 10, டி. எம். வி. 12 போன்ற ரகங்கள் அடங்கும். இவைகள் மூன்றும் மானாவாரிக்கு ஏற்றவை. டி. எம். வி. 10 என்ற ரகம் மற்ற இரு ரகங்களையும்விட வயதில் சற்றுக் கூடுதலுள்ளது. மானாவாரிப் பருவத்திற்கே சிபாரிசு செய்யப்படுகிறது. 125 நாட்களில் அறுவடைக்கு வரும். ஏனைய நிலக்கடலை ரகங்களைவிட கூடுதலான எண்ணெய்ச் சத்து உள்ளது. எனவே, வியாபாரிகள்



**புதிய நிலக் கடலை ரகம் — திண்டிவனம் -12**

இதற்குத் தனி விலை கொடுத்து வாங்குகிறார்கள். மற்ற இரு ரகங்களின் வயது 105 நாட்களே, டி. எம். வி. 2. என்றும், விதையைவிட அதிகப் பலன் தரக்கூடியது டி. எம். வி. 9 என்ற ரகம்; டி. எம். வி. 12 என்ற ரகம் இந்த ஆண்டில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ரகம் விதை உற்பத்திப் பெருக்கம் செய்யும் நிலையடைந்துள்ளது.

பொதுவாக நிலக்கடலைப் பயிரில், விதைப்பெருக்கம் ஏனைய பயிர்களைக் காட்டிலும் மிகக் குறைந்த விகிதாச்சாரத்திலிருக்கிறது. ஏக்கருக்கு 80 கிலோ நில்க்கடலை அல்லது 50-55 கிலோ நிலக்கடலை பருப்பு என்ற அள்வில் உபயோகத்தில் இருக்கிறது. உற்பத்தி செய்யப்படும் நிலக்கடலையில் நான்கிலிருந்து ஆறில் ஒரு பங்கே விதைப் பொருளாக உபயோகப்படுத்தப்படுகிறது. இம்மாதிரி நிலையில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட புதிய ரகங்களை வேகமாக அபிவிருத்தி செய்து மக்களுக்கு விரைவில் கிடைக்க, திட்டவட்டமான ஒரு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதன் மூலம் மற்ற பயிர்களில் கிடைப்பது போன்று நிலக்கடலையிலும் போதிய அளவில் பொறுக்கு வித்துக்கள் கிடைக்க வகை செய்யப்படும். இதற்காகப் புதிய பண்ணை ஒன்று திருவள்ளூருக்குச் சமீபத்தில் புட்லூர் என்கிற கிராமத்தில் உதவிப் பயிர் நிபுணரின்கீழ் சென்ற ஆண்டு நிறுத்தப்பட்டிருக்கிறது. இங்கு திண்டிவனம் ஆராய்ச்சிப் பண்ணையில் உருவாக்கப்படும். புதிய ரக நிலக்கடலை, எள், போன்ற எண்ணெய் வித்துக்கள் பெருக்கப்பட்டு மாநிலத்திலுள்ள 4 ஆதாரப் பண்ணைகளுக்குக் கொடுக்கப்படுகின்றன. இங்கும் நிபுணர்களின் நேரடிப் பார்வையில் விதை உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கிருந்து கிடைக்கும் விதையை முற்போக்கு விவசாயிகளின் பண்ணைகளில் உற்பத்தியைப் பெருக்கித் தரமான எண்ணெய்வித்துக்கள் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

பயிர்களின் எண்ணிக்கை விளைச்சலுக்கு அடிப்படையாகும். எந்த அளவு பயிர்கள் இருந்தாலும் மகசூல் அதிகம் கிடைக்கும், என்பதை ஆராய்ச்சியின் மூலம் கண்டறியப்பட்டிருக்கிறது. அதன்படி 30 செ.மீ. X 10 செ.மீ. என்ற இடைவெளியில் ஒரு சதுர மீட்டரில் 33 செடிகள் இருக்க விதைக்க வேண்டும். இதற்கான விதை அளவு 38-லிருந்து 42 கிலோ விதைப்பருப்பு போதுமானது. முன்பு கூறிக் கொண்டிருந்த விதை அளவைவிட சுமார் 12, 13 கிலோ விதை குறைவாக இருக்கும். இதனைச் சீராகப் போடுவதற்கு இவ்வாண்டு புதியதொரு கலப்பையை ஒத்த கருவி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. இதனால் விதையுடன் உரமும் கலந்து விதைப்பதற்கு வசதி ஏற்படுகிறது. விதைப்பதற்குக் கிலோவிற்கு 4 கிராம் தைரம் அல்லது 3 கிராம் காப்டன் மருந்தினைக் கலந்து விதைப்பது மிகவும் அவசியம். இதன் மூலம் விதையில் உள்ள பூஞ்சாளங்கள் அழிக்கப்படுவதோடு அல்லாமல் முளைப்புத் திறனும் நன்றாக இருக்கும்.

மானாவாரி நிலத்தில் நில ஈரத்தைக் காப்பது மிகவும் அவசியம். பயிர் விளைச்சலில் நிச்சயமற்ற தன்மையைப்போக்க, பெய்கின்ற மழை நீரைப் பயிர் அனுபவிக்க வகை செய்ய வேண்டும். மழை நீர் நிலத்திலிருந்து வெளியேறிப் போய்விடாது பாதுகாக்கப் பாத்திகள் அமைக்க வேண்டும். நிலச்சரிவுக்கு எதிராக இப்பாத்திகள் அமையச் சால்கள் எடுத்துவிட வேண்டும். இதன் மூலம் தண்ணீர் தேங்கிப் பயிர்களுக்குக் கிடைக்கிறது. இம்மாதிரியான சால்கள் போட்டுப் பாத்திகள் அமைக்க முன்பு சொன்ன கருவியைச் சிறந்த முறையில் பயன்படுத்தலாம். இதனைக் கொண்டு, உழவு செய்யவும், சால் போடவும், விதைக்கவும், உரமிடவும், பரம்பு அடிக்கவும் போன்ற பல்வேறு காரியங்களைச் செய்ய முடியும். இதற்கு ( Multi purpose Implement ) என்று பெயர். சென்ற ஆண்டில் அம்மாதிரி மண் ஈரங்காக்கும் வழிவகைகளைப் பெருவிளக்கப் பண்ணை மூலம் விளக்கிக் காட்டப் பட்டுள்ளது. அந்த வெற்றியின் அனுபவத்தைக் கொண்டு இவ்வாண்டு அதிகப் பரப்பில் பெரு விளக்கப் பண்ணைகள் அமைக்க வேளாண் துறையினர் முனைந்திருக்கின்றனர். இம்மாதிரியான விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளின் நன்மைகளை மக்களுக்குத் தெளிவுபடுத்த மாபெரும் விளக்கப்பண்ணைகள் அமைக்கப்படும். மானாவாரி நிலங்களில் மாவட்டம் ஒவ்வொன்றிலும் இரண்டு அல்லது மூன்று விளக்கப் பண்ணைகள் அமையும்.

அதிக விளைச்சல் பெற இரசாயன உரங்கள் இடுவது மிகவும் அவசியம். மானாவாரிக் கடலைக்கு உரமிட்டால் பயிர் காய்ந்துவிடும் என்ற ஐயப்பாடு இன்றும் சில விவசாயிகளிடம் இருந்து வருகிறது. இதற்கு ஆதாரமேயில்லை. விதைக்கும்போதே உரமிடுவதன் மூலம் முளைக்கின்ற பயிர் வீரியமாக வளருகிறது. வேர்கள் ஆழமாகப் போகின்றன. எனவே, மழை பெய்வதில் சிறிது கால தாமதம் ஏற்பட்டாலும் வேர்கள் ஆழமாகப் போய்விடுவதன் காரணமாக ஆழத்திலுள்ள நீரைப் பயிருக்குக் கொடுக்கும் சக்தி இவ்வேர்களுக்குக் கிடைக்கின்றன. எனவே, மானாவாரிப் பயிருக்கு உரமிடுவதனால் பயிர் காய்ந்துவிடும் என்ற கருத்து ஆதாரமற்றது. மானாவாரிப் பயிரில் அதிக மகசூல் பெற உரமிடுவது அவசியம். உரமிடுவதற்கு முன்பு மண்ணைப் பரிசோதனை செய்து பயிரின் தேவைக்கு ஏற்ப இடுவது விளைச்சலை அதிகரிப்பதுடன் இது விஞ்ஞான ரீதியான செயலாகும். மண் பரிசோதனை செய்வதற்கு அவகாசம் இல்லாத விவசாயிகள் ஏக்கருக்கு 4 கிலோ தழைச் சத்து, 4 கிலோ தானியச்சத்து, 18 கிலோ சாம்பல் சத்து விதைக்கும்போது உழவு சாலிலேயே இடுவது நல்லது.

## மணிலாவுக்கு ஊட்டமிகு தொழு உரம் :

மானாவாரிப் பயிருக்குத் தொழு உரமிடுவது தொன்று தொட்டு இருந்து வரும் பழக்கம். கிணற்று இறவையில் தீவிர சாகுபடி செய்ய ஆரம்பித்த பின் தொழு உரம் மானாவாரிப் பயிர்களுக்கு அதிகம் இடுவதற்குத் தேவையான அளவு கிடைப்பதில்லை. எனவே, கிடைக்கும் உரத்தை எல்லாப் பயிர்களுக்கும் பகிர்ந்து இடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தொழு உரத்தை இரசாயன உரத்தோடு கலந்து, ஊட்டமிக்கதொரு உரமாக்கி, நிலத்திற்கு உழவு சாலிடலாம். இவ்வாறு செய்வதனால் தொழு உரத்தின் அளவைக் குறைப்பதோடு பயிரின் தேவைக்கேற்ப பயிர் உணவுச் சத்துக் கிடைக்க வழி செய்யலாம். ஏக்கருக்கு 300 கிலோ தொழு உரமே போதுமானது. 300 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன் 25 கிலோ சூப்பர். 30 கிலோ பொட்டாஷ் உரத்தைத் தொழு உரம், இரசாயன உரம் என்று அடுக்கு அடுக்காகப் போட்டபின் சிறிது நீர் தெளித்து நன்றாகக் கலந்து, பின்பு மூடி வைக்கவும். 30 நாட்கள் கழித்து இதனை நிலத்தில் உழவு சாலில் போடுவதன் மூலம் பாஸ்பரஸ் சத்து, கடலைக்கு முழுமையாகக் கிடைக்கும். இவ்வுரத்தினை இடுவதற்கு முன்பு 9 கிலோ யூரியாவை தொழு உ'த்துடன் கலந்து அதனையும் சேர்ந்து இடவேண்டும். இதனால் நல்ல மகசூலும் தொழு உரச் செலவில் சிக்கனமும் பெறுகிறோம்.

> ### இலவச பாடப் புத்தகம்
>
> ரூ. 200/-க்குக் குறைவாக சம்பளம் வாங்கும் அரசு ஊழியர்களின் ("என்.ஜி.ஓ"க்கள்) குழந்தைகளுக்கு இலவசமாகப் பாடப் புத்தகம் வழங்கத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது.
>
> இந்த ஆண்டுக்கான பாடப் புத்தகங்களை ஏற்கெனவே அவர்கள் வாங்கி இருப்பார்கள். என்றாலும் பாடப் புத்தகத்தின் விலையை அந்த ஊழியர்களிடம் அரசு நிதியிலிருந்து திருப்பிக் கொடுக்க அரசு ஆணையிட்டுள்ளது.
>
> ரூ. 200-க்குக் குறைவாக மாதச் சம்பளம் வாங்கும் அரசு ஊழியர்களின் குழந்தைகளில் தேவைப்படுகிறவர்களுக்கு மூக்குக் கண்ணாடி வாங்க அதிகபட்சம் ரூ. 40 கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் அரசு ஏற்றுக் கொண்டது.

தவிரவும், நிலக்கடலைக்குச் சில நுண்ணூட்டச் சத்தும் மிகக் குறைந்த அளவில் தேவைப்படுகிறது. இத்தேவையை நாம் பொதுவாக அறிவதில்லை. துத்தநாகம், இரும்பு, போரான், மாங்கனீஸ், மாலிப்படினம் போன்றவைகள் பயிரின் விளைச்சலை 15 சதம் அதிகப்படுத்துகிறது என்பது ஆராய்ச்சியின் முடிவு. எனவே, நுண்ணூட்டச் சத்துக்கள் கலந்த உரம், ஏக்கருக்கு 5 கிலோ அடி உரமாக இடவேண்டும். மேலே சொன்ன நுண்ணூட்டச் சத்துக்களோடு நிலக்கடலைப் பயிருக்குக் கந்தகமும் சுண்ணாம்புச் சத்தும் தேவைப்படுகிறது. இவையிரண்டும் குறிப்பாக நிலக்கடலைப் பயிரில் கம்பிகள் இறங்கும்போது தேவைப்படுகிறது. எனவே, 80 கிலோ ஜிப்சம் (கால்சியம் சல்பேட்), இரண்டாவது களையெடுத்து மண் அணைக்கும்போது இடும்போது கம்பிகளிலிருந்து உருவாகும் இளங்கடலை இச் சத்துக்களை நேரடியாக எடுத்துக் கொண்டு திரட்சியான கனம் மிகுந்த கடலை கிடைக்க வகை செய்கின்றன. இவ்வாறு பயிரின் வளர்ச்சிக்கும் ஊட்டத்திற்கும் வேண்டிய அளவு உரமிடும் பொழுதுதான் மகசூல் அதிகம் பெற வாய்ப்பிருக்கும்.

## பயிர்ப் பாதுகாப்பு :

எத்தனைதான் உரமிட்டுப் பயிர் செய்தாலும் பயிரை அதன் எதிரிகளிடமிருந்து காப்பது மிகவும் அவசியம். மானாவாரிப் பயிரின் முக்கிய எதிரி கம்பளிப் புழுவாகும். விவசாயப் பெருமக்கள் இதனால் ஏற்படும் சேதத்தை நன்கு உணர்வார்கள். இதனை ஒழித்திட இதன் கூட்டுப் பருவம் முதல், வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் எச்சரிக்கையுடனிருப்பது அவசியம். பூமிக்குள்ளே மோன நிலையிலிருக்கும் கூட்டுப்புழுவைத் தோண்டியெடுத்து அழிப்பது, பயிரான நிலையில் மழை பெய்தவுடன் இக் கூட்டுப் புழுக்களிலிருந்து வெளி வரும் தாய்ப்பூச்சிகளை விளக்கொளியில் ஈர்த்து அழிப்பது, பயிரின் இலையின் அடிப்பாகத்தி விடும் இவைகளின் முட்டைகளை அழித்தல் போன்றவை எளிய முறையில் செலவின்றி விவசாயப் பெருங்குடி மக்களே செய்து கொள்ளக்கூடியவை. இக்கட்டுப்பாடுகளையும் மீறி வரும் புழுக்களை கூட்டு முயற்சியில் மருந்து தெளித்து அழிப்பது அவசியமாகிறது.

இப்பூச்சியினை அழிக்க ஒட்டுமொத்தமாக இவ்வாண்டு தமிழக அரசு மருந்து தெளிக்க கடன் வசதியும் மான்யமும் தருகிறது. அதன்படி 30,000 ஏக்கரில் மருந்து தெளிக்க ஏற்பாடு செய்யப்படும். இதுதவிர நிலக்கடலையில் விழும் சுருள் பூச்சி மற்றும் நோய்களைத் தடுக்க ஏக்கருக்கு ரூ. 3 மானியமாக மருந்து தெளிக்க உதவும். சுமார் 1.50 இலட்சம் ஏக்கராவில் மருந்து தெளிக்க ஆகும் செலவிற்கு மானியம் வழங்கப்படும்.

தவிரவும், இரசாயன உரங்கள் போதிய அளவு கிடைக்க, முன்னதாகவே இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தேவையான நுண்ணூட்டச் சத்து கிடைக்கப் புதிய உரக்கலவை நிலையம் குடுமியான் மலையில் இவ்வாண்டு நிறுவப்பட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு 1,000 டன் இந்நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்டு அடக்க விலைக்கே அரசு டெப்போக்கள் மூலம் விநியோகிக்கப்படும்.

எனவே, நிலக்கடலையைப் பயிரிடுவதில் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளின் புதுமைகளைக் கடைப்பிடித்தும் தமிழக அரசின் பல்வேறு சலுகைகளைப் பயன்படுத்தியும் வருகின்ற மானாவாரிப் பருவத்தில் ஏனைய ஆண்டைவிட அதிக மகசூல் பெற முயலுவோமாக!





# கடலூர் கரும்பு ஆராய்வு நிலையத்தின் சாதனைகள்


ப. சு. சஞ்சீவி
பயிர் நுண்ணறிஞர் (கரும்பு)
கடலூர்.


தமிழ்நாட்டில் கரும்பு ஆராய்வுப் பணியில் தக்க கவனம் செலுத்தி, சாதனைகள் பலபுரிந்திட கரும்பு ஆராய்வு நிலையம் தென்ஞர்க்காடு மாவட்டம் கடலூர் நகரில் 1957 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

அதிகக் கரும்பு மற்றும் சர்க்கரை விளைச்சல் தரக்கூடிய புதிய கரும்பு ரகங்களைத் தேர்ந்தெடுத்தல், கரும்பு விளைச்சலைப் பெருக்கிட உகந்த உர அளவுகளைக் கண்டறிதல், கரும்புச் சாகுபடி முறையில் சிக்கன உழவியல் மற்றும் சீரிய செய்நேர்த்தி முறைகளைக் கையாண்டு சாகுபடிச் செலவைக் குறைத்தல். கரும்புப் பயிரைத் தாக்கும் பூச்சி பூசாண சேதங்களைக் கட்டுப்படுத்தும் முறைகளைக் கண்டறிதல் ஆகிய சிறப்பான நோக்கங்களுடன் இந்நிலயம் செயல்பட்டு வருகிறது.

கடலூர் கரும்பு ஆராய்வு நிலையத்தின் சீரிய பணியின் காரணமாகக் குறிப்பிடத்தக்க சாதனைகள் செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் சிறப்பான சில சாதனைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**உயர் விளைச்சல் ரகங்கள் :**

பல்லாயிரக்கணக்கான கரும்பு வகைகள் இதுவரை சோதனை செய்யப்பட்டு அதிகக் கரும்பு மற்றும் சர்க்கரை விளைச்சல் தரும் ரகங்களான கீழ்க்கண்டவை பல்வேறு பட்டங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சாகுபடிக்கு வெளியிடப்பட்டுள்ளன.

**உரிய இடைவெளி :**

கரும்பு சாகுபடியில் 80 செ.மீ. இடைவெளி விட்டு பார் அமைத்தல் அதிகப் பயனைத் தருகிறது என்று கண்டறியப்பட்டுள்ளது. உரிய விளைச்சலும் ஏக்கருக்கு 20,000 முப்பரு அல்லது 30,000 இருபரு கரணைகள் நடவுக்குத் தேவை எனவும் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

**சோகை பரப்புதல் :**

கரும்பு நடவு செய்யுமுன் பார்களுக்கிடையேயுள்ள சால் மேடுகளில் காய்ந்த கரும்புச் சோகையை 10 செ.மீ. கனத்துக்கு அடர்த்தியாகப் பரப்புவதன் மூலம் களைகளைக் கட்டுப்படுத்துதல் மண் ஈரம் பாதுகாக்கப்பட்டுப் பாசனச் செலவில் சிக்கனம் செய்தல், இளம் கரும்புப் பயிரைத் தாக்கும் குருத்துப் புழுவின் சேதத்தைக் கணிசமாகக் குறைத்தல் ஆகிய பயன்களைப் பெற முடியும் என்று அறியப்பட்டுள்ளது. இம்முறையில் சாகுபடிச் செலவில் ஏக்கருக்கு ரூ. 150 வரை சிக்கன மேற்படுவதுடன், 2-3 டன்கள் கூடுதல் கரும்பு விளைச்சல் கிடைப்பதால் அதிக வருவாய் பெற முடிகிறது. இந்தப் புதியமுறை கோடைக்கால கரும்பு நடவுக்கும், நீர்ப் பற்ருக்குறை பகுதிகளுக்கும் ஒரு வரப்பிரசாதமாகும்.

| | |
|---|---|
| முன் பட்டம் (டிசம்பர்-ஜனவரி) | கோ. க. 671, கோ. க. 771 கோ. க. 772. |
| மத்திய பட்டம் (பிப்ரவரி-மார்ச்) | கோ. க. 6304, கோ. க. 774, கோ. க. 775. |
| பின்பட்டம் (ஏப்ரல்-மே) | கோ. க. 777, கோ. க. 778 கோ. க. 779. |

இந்த ரகங்களைப் பற்றிய குறிப்புரை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அட்டவணை)—புதிய ரகங்கள் பற்றிய விவரங்கள்

| ரகம் | எக்டேருக்கு கரும்பு விளைச்சல் (டன்கள்) | சர்க்கரை சத்து வீதம் | எக்டேருக்கு சர்க்கரை விளைச்சல் | பிற குறிப்புகள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| கோ. க. 6304 | 116.2 | 13.3 | 16.7 | எல்லாவித நிலங்களிலும் பயிரிடலாம். |
| கோ. க. 671 | 123.5 | 14.2 | 17.5 | ,, |
| கோ. க. 771 | 140.0 | 13.1 | 18.3 | ,, |
| கோ. க. 772 | 143.2 | 14.0 | 20.0 | ,, |
| கோ. க. 774 | 159.8 | 11.9 | 17.9 | களிப்பு நிலங்கள், களிப்பு கலந்த மணற்பாங்கான நிலங்கள் ஏற்றது. |
| கோ. க. 775 | 122.5 | 13.4 | 16.4 | தோட்டங்காற் குறு மண் நிலங்களுக்கு ஏற்றது. |
| கோ. க. 777 | 171.3 | 11.8 | 20.0 | களிப்பு நிலங்களில் பயிரிட ஏற்றது. |
| கோ. க. 778 | 165.5 | 11.0 | 18.1 | ,, |
| கோ. க. 779 | 204.6 | 11.8 | 24.0 | ,, |

**கூடுதல் வருவாய்க்கு ஊடுபயிர் :**

தண்ணீர் வசதி நன்ருக உள்ள இடங்களில், முன் மத்திய பட்டங்களில் கரும்பு நடவு செய்த 3-ஆம் நாளில் கட்டைகளின்மேல் உளுந்து, பச்சைப் பயறு, சூரிய காந்தி ஆகிய பயிர்களில் ஏதேனும் ஒன்றை ஊடுபயிராகச் சாகுபடி செய்து ஏக்கருக்கு 200 முதல் ரூ. 250 வரை கூடுதல் வருவாய் பெறலாம் என்றும் தெரியவந்துள்ளது. இவ்வாறு சாகுபடி செய்வதால் கரும்புப் பயிரின் வளர்ச்சி மற்றும் விளைச்சல் எவ்வகையிலும் பாதிக்கப்படுவதில்லை என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

**பார் அமைக்க விக்டரி கலப்பை :**

விக்டரி கலப்பை பயன்படுத்தி சிக்கனமாகவும் சீராகவும் பார் அமைக்கலாம். ஒரு ஜதை எருதுகள் பூட்டிய கலப்பை கொண்டு எட்டு மணி நேரத்தில் ஒரு ஏக்கர் பரப்பில் ஆழமாக அதன் மூலம் பார் அமைக்கலாம். இதனுல் ஏக்கருக்குச் சாகுபடி செலவில் ரூ. 50.00 சிக்கனமாகிறது. விக்டரி கலப்பையைப் பயன்படுத்தி வளரும் கரும்புப் பயிருக்கு மூன்ருவது மாதத்தில் உயர மண் அணைக்கவும் முடிகிறது.



கரும்புக் கரணைகளை மருந்தில் மூக்கி விடுதல்

**உழவுக்கு ஜூனியர் கலப்பை :**

ஜூனியர் கலப்பையால் கரும்பின் பயிர் வரிசைகளுக்கிடையே 2-3வது மாதங்களில் 20 நாட்களுக்கொரு முறை இடையுழவு செய்வதால் களைகள் அகற்றப்படுவதுடன் சாகுபடிச் செலவில் சிக்கனமேற்படுகிறது. ஜூனியர் கலப்பையால் எட்டுமணி நேரத்தில் 2-3 ஏக்கர் பரப்பில் இடையுழவு செய்யலாம்.

**உரிய உர அளவுகள் :**

ஏக்கருக்கு 10 டன் கம்போஸ்ட் அடியுரமாக இடுவதால் கரும்பு விளைச்சல் 2 முதல் 3 டன் வரை உயருகிறது எனத் தெரியவந்துள்ளது.

மண்வளத்தைத் தொடர்ந்து பாதுகாக்க ஏக்கருக்கு 25 கிலோ மணிச்சத்தை அடியுரமாக இட வேண்டும் எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஏக்கருக்கு 110 கிலோ தழைச்சத்து இரண்டும் சம தவணைகளில் கரும்பு நடவு செய்த 45 மற்றும் 90-வது நாட்களில் இடுவதன் மூலம் உரிய கரும்பு மற்றும் சர்க்கரை விளைச்சல் அடைய முடியும் என்று கண்டறியப்பட்டுள்ளது.



மாண்புமிகு முதல்வர் திரு எம் ஜி. ஆர். அவர்கள் திருச்சியில் 31.7.78 அன்று நடைபெற்ற கால்நடைக் கண்காட்சியைத் திறந்து வைத்து, செயற்கை முறைக் கன்றுகளைப் பார்வையிட்டார். மாண்புமிகு சமுக நலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

அம்மோனியம் சல்பேட், யூரியா, அம்மோனியம் குளோரைடு, கால்சியம் அமோனியம் நைட்ரேட் போன்ற தழைச்சத்து உரங்களில் ஏதேனும் ஒன்றைத் தழைச்சத்து தரும் உரமாகப் பயன்படுத்தலாம்.

**இலைமூலம் தழைச்சத்து உரமிடல்:**

மண்ணில் தழைச்சத்து உரத்தை முழுவதுமாக இடுவதற்குப் பதில் முதல் தவணையாக 45 கிலோ தழைச்சத்தை 45-வது நாளில் மண்ணிலும், 23 கிலோ தழைச்சத்தை இரண்டு சம தவணைகளில் யூரியா கரைசலாக 90-வது மற்றும் 110-வது நாளில் இலை மூலம் தெளிப்பதால் ஏக்கருக்கு 42 கிலோ தழைச்சத்து சேமிக்கப்படுகிறது என்றும் கண்டறியப்பட்டுள்ளது. கைத்தெளிப்பான் கொண்டு 7.5 சத யூரியா கரைசலாகவும், விசைத் தெளிப்பான் எனில் 30 சத யூரியா கரைசலையும் பயன்படுத்தி உரச் செலவில் சிக்கனம் செய்யலாம்.

பொதுவாக ஏக்கருக்கு 45 கிலோ சாம்பல் சத்தை இரு சம தவணைகளில் கரும்பு நடவு செய்த 45 மற்றும் 90வது நாட்களில் இடுவதால் நல்ல பலன் கிடைக்கிறது. சாம்பல் சத்து குறைவாக உள்ள நிலங்களில் ஏக்கருக்கு 60 கிலோ சாம்பல் சத்து இடுவது கூடுதல் பலனைத் தருகிறது.

**கரும்புப் பூச்சிகளைத் தடுக்க:**

இளம் கரும்புப் பயிரைத் தாக்கி குருத்துப்புழு, அதிக சேதம் விளைவிக்கிறது. பொதுவாக கரும்பு நடவு செய்த 100 நாட்கள் வரை இப்புழுவின் சேதம் காணப்படுகிறது. கோடைக் காலத்தில் இதன் சேதம் அதிகமாக உள்ளது. கரும்பு நடவு செய்தவுடன் சால்மேடுகளில் காய்ந்த கரும்புச் சோகையைப் பரப்புவதன் மூலம் இப்புழுவின் சேதத்தைக் கணிசமாகக் குறைக்கலாம். லின்டேன் 10 சதம், அல்லது செவிடால் 3 அல்லது 4 சதம், குருணைகளை ஏக்கருக்கு 5 கிலோ வீதம் நடவு செய்த 30-35 நாட்களில் குருத்து சோகை இடுக்குகளில் இடுவதன் மூலம் இப்புழுவைக் கட்டுப்படுத்தலாம். பதினைந்து நாட்களுக்கொருமுறை ஏக்கருக்கு 1. சி. டி. சி. டிரைகோகிரம்மா ஒட்டுணிப் பூச்சிகளைக் கரும்பு வயலில் பரவவிடுவதன் மூலம் இப்புழுவின் சேதத்தைக்குறைக்கலாம்.

வளரும் கரும்பைத் தாக்கும் இடைக்கணுப்புழுவின் சேதத்தைத் தடுக்க 4 சத செவிடால் குருணைகளை ஏக்கருக்கு 12.5 கிலோ வீதம் 90-வது நாளிலும், 135-வது, நாளிலும் இட வேண்டும். பின்னர், 180-வது நாள் முதல் 300 வது நாள் வரை 15 நாட்களுக்கு ஒரு முறை ஏக்கருக்கு 1 சி. சி. டிரகோகிரம்மா ஒட்டுண்ணிப் பூச்சிகள் வீதம் பரவ விட வேண்டும். இம்முறையில் நல்ல பயன் உண்டாகிறது. 5 மற்றும் 7-வது மாதங்களில் இரண்டுமுறை சோகைகளை நீக்குவதாலும் இடைக்கணுப் புழுவின் சேதம் கணிசமாகக் குறைகிறது.

கரும்புப் பயிரின் வேர்ப்பகுதியைத் தாக்கி சேதம் விளைவிக்கிறது வெள்ளைப்புழு. இப்புழுவின் தாய் பூச்சிகள் தோன்றும் பருவத்தில் பி.எச். சி. 10 சதத் தூளை ஏக்கருக்கு 50 கிலோ வீதம் வேர்ப் பகுதியில் தூவுவதன் மூலம் இப்புழுவின் சேதத்தைக் கட்டுப்படுத்தலாம்.

**கரும்பு நோய்களைத் தடுக்க:**

விதைக்கரணைகளைத் தாக்கி சேதமேற்படுத்தும் கரணையழுகல் நோயைத் தடுக்க அரிடான் 250 கிராம் அல்லது அகலால் 500 கிராம் அல்லது பெவிஸ்டின் 50 கிராம் மருந்து கரைத்த கரைசலில் கரணைகளை 5 நிமிடங்கள் ஊறவைத்து நடவு செய்தல் சிறந்ததாயுள்ளது. இதனால் பருமுளைப்புத் திறனும் அதிகரித்து பயிர் வீரியமாக வளருகிறது.

கரும்பில் தோன்றும் கரிப்பூட்டை நோயை மருந்து வகைகளால் கட்டுப்படுத்துவது அரிது. இந்நோய் தாக்காத கோ. க. 771, கோ. க. 772 போன்ற புதிய ரகங்களை நடவு செய்து பயனடையலாம்.

அண்மையில் தமிழ்நாட்டில் செவ்வழுகல் நோய் தோன்றி கரும்புக்குப் பெரும் சேதம் விளைவித்துள்ளது. இந்நோயைக் கட்டுப்படுத்த மருந்து எதுவும் இல்லை. இந்நோய் தாக்காத கோ. க. 671, கோ. க 771, கோ. க. 772, கோ. க. 774, கோ. க. 775, கோ. க. 777, கோ. க. 778 மற்றும் கோ. க. 779 ஆகிய ரகங்கள் கண்டு பிடிக்கப்பட்டு சாகுபடிக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**1977**-78ஆம் ஆண்டு காலத்தில் 20 இலட்சம் டன் நைட்ரஜனும், 6 இலட்சத்து 71 ஆயிரம் டன் பாஸ்பேட்டும் உற்பத்தியாகியுள்ளன. இது முந்தைய ஆண்டு உற்பத்தியைவிட முறையே 7.4 சதவிகிதம் 40.4 சதவிகிதம் அதிகமாகும். *1978-79* ஆம் ஆண்டுக் காலத்தில் 25 இலட்சம் டன் நைட்ரஜனும், 8 இலட்சம் டன் பாஸ்பேட்டும் உற்பத்தி செய்யக் குறியளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது நைட்ரஜன் உற்பத்தியைப் பொறுத்தவரையில் 25 சதவிகிதம் கூடுதலாகும்.

*1968-69* ஆம் ஆண்டுக் காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட நைட்ரஜனின் அளவு இந்த ஆண்டு கூடுதலாக உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது என்று கூறுவது சாலப் பொருத்தமாகும்.

கச்சாப் பொருட்களின் அளவுகளும், விலை முறைகளும் மாறி வரும் இன்றைய உலகில் இந்திய உரத் தொழில் அரிய சாதனைகள் சிலவற்றைச் செய்துள்ளது. முற்போக்கான தொழில்நுட்பங்களில் அதனுடைய முதலீடுகள் கணிசமாக அதிகரித்துள்ளன.

*1974*-ல் பெட்ரோல் நெருக்கடி ஏற்படுவதற்கு முன்னரே, முக்கியமான முதலீடுகள் பற்றி முடிவுகள் எடுக்கப்பட்டு, ராமகுண்டம், தால்ச்சர் ஆகிய இரு நிலக்கரி அடிப்படையாகக் கொண்ட ஆலைகளுக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இவை இந்தியாவிலேயே முதல் முயற்சிகளாகும். உள்நாட்டுக் கச்சாப் பொருள்கள் பற்றிய திட்டத்தின் புதிய பரிணாம வளர்ச்சியை எடுத்து இயம்பும் சின்னங்களாக இத்திட்டங்கள் காட்சி தருகின்றன. இவை *1978-79*-ல் இயங்கத் தொடங்கும். இந்தியாவின் உரத் தொழிலில் புதிய மைல் கல்லாக இவை காட்சி தரும். பெருமளவு நிச்சயமற்ற தன்மையும் பட்டறிவும் இதில் இருந்தபோதிலும் நீண்ட கால அடிப்படையில் இவை அவசியமானவைகளாகத் திகழும் என்பது திண்ணம்.

*1978-79*-ஆம் ஆண்டுக் காலத்தில் உற்பத்திப் பெருக்கம் பெட்ரோலியம் பொருள்களின் அடிப்படையில்தான் இன்னும் அமைந்துள்ளது. மங்களூர், தூத்துக்குடி பரோளி, நாம்ரூப் முதலிய இடங்களில் உர ஆலைகள் ஏற்கெனவே பணிகள் முடிந்து செயல்பட ஆரம்பித்துள்ள போதிலும் அவை மேலும் நிலையான உற்பத்தியை உயர் அளவு எட்ட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் உர சேமிப்பு அதிகரிக்கும். முற்றிலும் புதிய ஆலைகளும் உற்பத்தி செய்ய ஆரம்பிக்கின்றன. நங்கல் என்ற இடத்திலுள்ள உரத் தொழிற்சாலை கன ஏரி எண்ணெய் நிலைத் தன்மையை அடிப்படையாகக் கொண்டது. இது ஏற்கெனவே செயல்படத் தொடங்கி நிலைநிறுத்தம் அடையும் கட்டத்தில் உள்ளது. இதே போன்ற ஆலைகள் பதீந்தா, பானிபட்டு, ஸிந்திரி ஆகிய இடங்களில் ஆரம்ப நிலையில் உள்ளன.

இந்த ஆலைகள் ஒவ்வொன்றிலும் நைட்ரஜன் உற்பத்தி 2 இலட்சம் டன்னுக்கு மேலும் எட்டி, ஆரம்ப ஆண்டிலேயே ஒட்டு மொத்த உற்பத்தியளவு கணிசமாக ஏற்பட வாய்ப்புள்ளது. உரத் தொழில் வரலாற்றில் எந்த ஓர் ஆண்டிலும் இவ்வளவு பெரிய ஆலைகள் செயல்படுவதற்குத் தயாராக இருந்ததில்லை. எனவே, இந்த ஆண்டு அதிக உற்பத்தி ஏற்படும் என எதிர்பார்ப்பது, புதிதாக இயங்கவிருக்கும் பெரிய ஆலைகளை அடிப்படையாகக் கொண்டேயாகும்.

அண்மையில் யூரியா விலை குறைக்கப்பட்டதும் பொதுவாக விலைகள் ஒரு நிலையான தன்மையை அடைந்ததும் கடந்த இரண்டு ஆண்டுகளில் சப்ளை, நிலையான தன்மை ஆகியவற்றின் வெளிப்பாடுகள் ஆகும். உரத்தைப் பயன்படுத்துவதை அதிகரிக்க இது வாய்ப்பளிக்கும்.

கடந்த இரு ஆண்டுகளின் புள்ளி விவரங்கள் இதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. *1970*-ஆம் ஆண்டிலும் அதற்குப் பிந்தைய சில ஆண்டுகளிலும் ஒரு தேக்கநிலை காணப்பட்டது. ஆனால், *1975*-க்குப் பின்னர் இத்துறையில் வளர்ச்சி கணிசமாக ஏற்பட்டுள்ளது. பல மாநிலங்களில் பயன்படுத்தப்படும் உரத்தின் அளவு உச்சக் கட்டத்தை எட்டியுள்ளது. உர விற்பனை சீராக இருந்ததால் விநியோகஸ்தர்கள் பரந்த அளவில் ஏற்பாடுகளைச் செய்து தொலைதூர இடங்களுக்கும் உரம் கிடைக்க வழிவகை காணும் திட்டங்களில் ஈடுபட்டனர். இதனால் வளர்ச்சி வேகம் அதிகரித்தது. தேசிய, சராசரி, தேவையான அளவுக்குக் குறைவாக உள்ளது என்பது உண்மைதான்.

*1978-79* முதல் *1983-84* வரை நைட்ரஜன் நுகர்வு 50 சதவிகிதம் அதிகரிக்குமென்று கணிக்கப்பட்டுள்ளது. திட்டமிட்டபடி உற்பத்தியும் நடந்தால் விநியோக மேம்பாட்டுத் திட்டங்கள் கணிசமான அளவு முடுக்கிவிடப்பட வேண்டும். உரங்கள் கிடைத்தால் மட்டும் போதாது. விலை நிலைமைகள் நிலையாக இருப்பதோடு சிறப்பு முயற்சிகள் மூலம் தொலைதூர





# உரத்தொழில் வளர்ச்சியும் வாய்ப்புகளும்

கிராமங்களுக்கும் உரம் செல்லும் வகையில் உற்பத்தியாளர்கள் ஊக்கம் பெறுவதாகவும் அது அமைய வேண்டும். விவசாய விலைபொருள், செலவு, உர விலை களும் உரத்தைப் பயன்படுத்து தலை முக்கியமாகப் பாதிக்கின் றன. கடந்த 10 ஆண்டுகளில் விலை விகிதம் பற்றி நடத்தப் பட்ட ஆய்வு, தற்போதைய நிலைமையைப்போல் வேறு எப் போதும் விலை விகிதங்கள் சாதக மாக இருந்ததில்லை என்று கூறு கிறது. நுகர்வுப் பெருக்கத்திற்கு விலைதான் முக்கியக் காரணம் என்றால் தற்போதைய விலைகள் மிகவும் சாதகமாக இருக்கின்றன என்பது உண்மை. இதைப் பொது வாக எளிதில் ஏற்க இயலாமல் இருக்கலாம். ஆனால், நிலைமைகள் அப்படி இருக்கின்றன என்பதைப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

1974-75 ஆம் ஆண்டில் பாஸ் பேட் நுகர்வு குறைந்த அளவில் இருந்தது. தற்போது, குறிப்பாக வட மாநிலங்களில் கணிசமான உயர்வு கண்டுள்ளது. அரசின் சலுகைக் கொள்கையும் உற்பத்தி யாளர்களின் தீவிர நடவடிக்கை களும் இத்தகைய சாதகமான நிலைமை உருவாவதற்குக் கார ணங்களாகும். ஒட்டுமொத்த விகிதம் இன்னும் குறைவாகவே காணப்பட்டாலும் விவசாயிகள், விலை ஊக்கம் மற்றும் மேம்பால நடவடிக்கைகளுக்கு ஆதரவாக உள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இதுபோன்ற நிலைமை பொட் டாஷ் உரத்தைப் பொறுத்த வரையிலும் காணப்படுகிறது. பல பகுதிகளில் தீவிரச் சாகு படிகள் மேற்கொள்ளப்படுவது பொட்டாஷ் விவசாய உற்பத்தி யின் முக்கியக் கூறு என்பதை எடுத்துக் காட்டுகிறது. பொட் டாஷ் உரத்தைப் பயன்படுத்து தல் கணிசமான அளவு உயர்ந் துள்ளது. எனினும் குறிப்பாக வட மாநிலங்களில் அதிக முன் னேற்றம் காண வேண்டியுள்ளது.

விவசாய உற்பத்தி மற்றும் தன் காலிலேயே நிற்கின்ற அணு கும் முறை ஆகியவை ஏற்படுத்தி யுள்ள சூழ்நிலையின் காரணமாக, கூடுதல் உற்பத்தித் திறனை ஏற் படுத்தத் திட்டங்கள் தீட்டப் பட்டு வருகின்றன. 1978-79ஆம் ஆண்டுக் காலத்தில் நைட்ரஜன் நுகர்வு 34 இலட்சம் டன்னாக இருக்கும். இது 1982-83ஆம் ஆண்டில் 52 இலட்சம் டன்னாக உயரும். பாஸ்பேட்டு நுகர்வு 9.3 இலட்சம் டன்னிலிருந்து 17 இலட்சம் டன்னாக உயரும். இந்த சப்ளைகளில் பெரும்பகுதி உள் நாட்டு உற்பத்தியிலிருந்து கிடைத் தால் உள்நாட்டுத் தொழில் வளர்ச்சி எதிர்பார்த்தபடி அமை யும்.

மகாராஷ்டிரம், குஜராத் வட் டாரத்தில் கடலுக்கடியில் எண் ணெய் எடுக்கும் முயற்சி வெற்றி கரமாக அமைந்ததையடுத்து, உர ஆலைகள் பற்றிய திட்டங்கள் பெரும் வளர்ச்சி அடைந்துள்ளன. பம்பாய் ஹைபகுதியிலிருந்து ஏற் கெனவே எண்ணெய்யும், எரி வாயும் கிடைத்துள்ளன. இவை விரயத்தைத் தவிர்க்க விரைவில் பயன்படுத்தப்படும். ட்ராம்பே யில் எரிவாயுவைப் பயன்படுத் தும் தற்காலிக ஏற்பாடுகள் ஏற் கெனவே திட்டமிடப்பட்டுள் ளன. புதிய உரத் தொழில்களில் இவற்றை அதிக அளவு பயன் படுத்த கொள்கை அடிப்படை யில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பம்பாய் அருகே இரண்டு ஆலை களை ஏற்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது. இவை ஒவ்வொன் றும் 1,350 டன் அமோனியா உற்பத்தி செய்யும் திறன் கொண் டவை. அமோனியாவின் பெரும் பகுதியை யூரியாவாகப் பின்னர் மாற்றுவதற்கான வசதிகள் உள்ளன. இந்த ஆலைகளை, புதி தாக அமைக்கப்பட்டுள்ள பாரத கெமிகல்ஸ் அண்டு பெர்ட்டிலை சர்ஸ் நிறுவனம் நிர்மாணிக்கும். எரிவாயுவைத் தரைப் பகுதிக்குக் கொண்டு வருவதற்கான் குழாய் இணைப்புகள் அமைக்கப்பட்டு அவை செயற்படுத்தப்பட்டு வரு கின்றன.

பசைன் பகுதியிலிருந்து குழாய் இணைப்பு மூலம் செயல்படும் இதே போன்ற இரு ஆலைகளை குஜராத் மாநிலத்தில் அமைக்கத் திட்டமிடப்பட்டு வருகின்றது. மேலும் 3 அல்லது 4 ஆலைகளுக்கு இதே அளவு எரிவாயு வினியோகம் கிடைப்பதற்கான ஆலோசனைகள் நடந்து வருகின்றன. பாஸ்பேட் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் திட்டங்கள் தீட்டப்பட்டு வரு கின்றன.

# மறுவாழ்வு பெறும் கைம்பெண்கள்



**கன்னியாகுமரி மாவட்டத்திற்கு, 1977-78-ஆம் ஆண்டிற்கு கைம் பெண்கள் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் ரூ. 60,000 அனுமதிக்கப்பட் டுள்ளது.**

இத் திட்டத்தின்கீழ் மறுமணம் செய்து கொண்ட 12 தம்பதி களுக்குத் தலா ரூ. 5000 வீதம் ரூ. 60 ஆயிரத்துக்குத் தேசிய சேமிப்புப் பத்திரம் வடிவில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரால் பரிசுத் தொகை வழங்கப்பட்டது

# பல்லைப் பாதுகாப்போம்



மூத்துப்பல் முறுவல்

முல்லைப்பூ பல்வரிசை.

மோகனப் புன்னகைத் தோற்றம்.

—இப்படிப் பற்களால் முகம் பெறும் பொலிவைப் புகழ்ந்துரைக்கின்ருேம்.

ஆரோக்கியமான அழகிய பற்களால் முகம் பெறும் அழகு போல் உடல் நலமும் பெறுகிருேம்.

பற்களில் நோய்க்கு இடம் கொடுத்தால் பல நோய்கள் உருவாக வழிவகுத்தவர்களாவோம்.

பல்லில் நோய் வந்தபின் மருத்துவம் செய்வதைவிட, பல்லை ஒழுங்காய்ப் பாதுகாத்துப் பேணி வருவதே சிறந்த செயலாகும்.

பல்லைப் பாதுகாப்பதைச் சின்ன வயது முதற்கொண்டே கடமையாகக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்யத் தவறினுல் பல்வேறுபட்ட நோய்களுக்கு இடம் கொடுத்தவர்களாகின்ருேம்.

(பல்லில் வரும் நோய்களைப் பற்றியும், சிகிச்சை முறைகளைப் பற்றியும் சுருக்கமான முறையில் தனித்தனியாக வெளியிடப்பட்டிருக்கிறது).

சென்னை மருத்துவக் கல்லூரியின் பல் மருத்துவப் பிரிவில் பல் நோய்க்கான பல்வேறு சிகிச்சை முறைகளும் உள்ளன.

இப்பல் மருத்துவப் பிரிவுபற்றிய விவரங்களை டாக்டர் ஆர். விசுவநாதன் அவர்களும், டாக்டர் பி.பி ராஜன் அவர்களும் சுருக்கமாக எடுத்துரைத்தார்கள்.



சென்னை மருத்துவக் கல்லூரியின் பல் மருத்துவப் பிரிவு 1953-ல் தொடங்கப்பட்டது. இன்று இந்தியாவிலுள்ள பல் மருத்துவப் பிரிவுகளில் குறிப்பிடத்தக்க ஒன்ருக விளங்குகிறது. எதிர்காலத்தில், பல்மருத்துவக் கல்லூரியாகவோ, நிறுவனமாகவோ அமையும் நல்வாய்ப்பைப் பெற்றுள்ளது. இத்தகைய மதிப்புடைய பல்மருத்துவப் பிரிவின் வெள்ளி விழா 1978 ஜூலை-ஆகஸ்ட் திங்களில் கொண்டாடப்பட்டது.

'பல்லினைக் காட்டி வெண்முத்தினைப் பழித்திடும்' என்று பாடுகிருர் பாரதியார். பல்லினைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை இக்கட்டுரை வலியுறுத்துகிறது.

பல் மருத்துவப் பிரிவு கீழ்க் கண்டாறு,

வாய்நோய் அறிதல்

குழந்தைகள் பல் மருத்துவம்

ஊடுகதிர் பகுதி

பல் எடுக்கும் இடம்

பல் கட்டும் பகுதி (செயற்கைப் பற்கள் அமைக்கும் பிரிவு).

பல் பாதுகாக்கும் பிரிவு

ஈறுநோய்ச் சிகிச்சைப் பிரிவு.

பல் சீரமைப்புப் பகுதி

என்று பலப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பல் மருத்துவத்துக்கான சிறிய அறுவைச் சிகிச்சைக்கான அரங்கம் ஒன்றும் உள்ளது. நாள்தோறும் 700 பேர் இங்கு சிகிச்சைப் பெறுகின்றனர்.

ஒவ்வொரு சிகிச்சைப் பகுதியும் மிகப் பெரியதாகவும் துப்புரவாகவும் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

பல் மருத்துவத்தில் மிக நவீனமான சிகிச்சைகள் என்று கருதப்படுபவைகள் மேலை நாட்டின் முன்னேற்றமடைந்த சிகிச்சை முறைகள் என்று சொல்லப்படுபவைகள் எல்லாம் இங்கு அளிக்கப்படுகின்றன.

# வாய் நலம்



பல் நோய்களை வெறும் மருத்துவ ஆலோசனைகளின் மூலம் மட்டும் குணப்படுத்திவிட முடியாது. பல் மருத்துவர்களுக்கும், பொதுமக்களுக்கும் இடையில்போதிய கருத்துப் பரிமாற்றங்கள் இருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு இன்மையால் பொதுமக்கள், பல் நோய்த் தடுப்பு முறைகளை பற்றி அறியவும், பல் நோய்களைக் கட்டுப் படுத்தும் முறைகளை உணரவும் முடியாமல் உள்ளனர்.

நோய் உருவானபின், அதைக் குணப்படுத்தவது என்னும் பழைய கொள்கையைத் தகர்த்தெறிந்து, நோய் வருமுன் காத்தலும், பல் நலம் பேணுதல் பற்றி மக்களுக்கு உணர்த்துதலும்தான் இன்றைய சூழ்நிலையில் பல் மருத்துவத்தில் மிக நல்ல பயன்களை விளைவிக்கும்.

பரவிவரும், வாய், பல் நோய்களில் முக்கியமானதும், முதன்மையானதும், பெரும்பான்மை மக்களைப் பாதிக்கக்கூடியதும் ஈறு நோய்கள் ஆகும். ஈறு நோய் தோன்றுவதற்கு, "பிளாக்" என்னும் மென்மையான படிமானங்கள் முக்கியக் காரணமாக அமைகின்றன. எனவே ஈறு நோய்களின் தோற்றத்தைக் கட்டுப்படுத்த, "பிளாக" பற்களின் மேல் படிவதைத் தடுக்க வேண்டும். பல் மருத்துவர்களும், மக்களும் "பிளாக்" படிவதைக் கட்டுப்படுத்தும் முறைகளை விழிப்புணர்வுடன் செயல்படுத்துவதன் மூலம் ஈறுகளின் நலம் நன்கு பராமரிக்கப் படுகின்றன.

"பிளாக்" மூலம் ஈறு நோய்கள் உண்டாவதைத் தடுக்கும் முறை மூன்று நிலைகளில் செயல் படுத்தப்படுகிறது.

முதல்நிலை:- நோய் தோன்றாமல் தடுத்தல்.

இரண்டாம் நிலை:—நோய் தோன்றிய பின் அதைக் கட்டுப் படுத்துதல்.

மூன்றாம் நிலை:—அவ்வாறு தோன்றிய நோயின் விளைவுகளைச் சீர்படுத்தி, அந்நோய் மீண்டும் தாக்காத வண்ணம் செய்தல்.

பற்சொத்தை, இளம் வயதினரை அதிகம் தாக்குகிறது இந்நோய் துவக்கத்தில் வலியில்லாமல் இருப்பதால் மக்கள் தகுந்த சிகிச்சையை உடனே பெற்றுக் கொள்ளத் தவறிவிடுகிறார்கள். எனவே இந்நோய் தீவிரமடைகிறது. நோய் தாக்கிய பற்களும், ஈறுகளும், உடலில் மற்ற பகுதிகளும் நோயினால் பாதிக்கப்படக் காரணமாக அமைகின்றன. இது "ஃபோகல் செப்ஸிஸ்" என்று கூறப்படுகிறது. எனவே பல்பராமரிப்பு, உடல் பொதுநலத்தில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

தகுந்த பல் சிகிச்சை மூலம் "வாய்நலம்" நன்கு பேணப்பட வேண்டும். இதனால் ஈறுநோய்கள் தோன்றாமல் தடுக்கலாம்.

குழந்தைப் பருவம் முதற்கொண்டே வாய்நலம் நன்கு பராமரிக்கப்பட வேண்டும். காலையில் முதல் கடமையாகவும் இரவில் கடைசிக் கடமையாகவும், ஒழுங்காகவும் பல்லைச் சுத்தம் செய்வது, பல்துலக்கி (புருசு) கொண்டு பல் துலக்குவது, ஈறுகளை நன்கு தடவி விடுதல், நாக்கைச் சுத்தப்படுத்துதல் முதலான காரியங்களைத் தவறாமல் செய்யவேண்டும். இந்தப் பணிகளைத் தவறாமல் செய்ய வேண்டும். இதன் மூலம் ஈறுகள் நல்ல வலிவுடனும் பொலிவுடனும் திகழ்ந்து, பல் நலம் பேணப்பட்டு, உடல்நலம் காக்கப் படுகிறது.

வாயை நன்கு சுத்தப்படுத்துவதை நாம் புறக்கணித்தால் அதனால் உருவாகும் "பிளாக்" போன்ற மென்மையான படிமானங்களும், பற்காறைகளும், "ஹாலிடோஸிஸ்" என்னும் வாய் நாற்றத்திற்குக் காரணமாக அமைகின்றன. மேலும் இதன் விளைவாக ஏற்படும் பற் சொத்தையையும், ஈறு நோய்களும், மனிதனின் பொது நலத்தைப் பாதிக்கின்றன. உணவு உண்பதற்கு முன்பும், பின்பும் வாயைத் தண்ணீர் கொண்டு நன்கு கொப்பளித்தும், ஈறுநோய் மருத்துவர்களின் உதவி கொண்டும் மிக நல்ல முறையில் வாய் நலம் பேணவேண்டும்.



அறியாமை, வறுமை, அலட்சியம், தீயப்பழக்கங்கள் முதலியவைகளால் உருவாகும் பல் நோய்கள் உலகம் முழுவதும் பரவியுள்ளது என்றாலும் பல் நோய்களுக்கு இடங் கொடுக்கக் கூடாது, தொடக்கத்திலேயே தடுத்துவிட வேண்டும் என்ற எண்ணம் மக்களிடம் பரவ வேண்டும். பல் மருத்துவத்தின் அவசியத்தை அனைவரும் உணர வேண்டும்.

அதே சமயத்தில் பல் மருத்துவத்தில் மருத்துவர்கள் சிறந்து விளங்க வேண்டும். பல் மருத்துவத்தில் மேல்நிலை பட்ட படிப்பு வரை உள்ள பல் மருத்துவப் பகுதியாகச் சென்னை மருத்துவக் கல்லூரியின் பல் மருத்துவப்பிரிவு விளங்குகின்றது.



### வெள்ளி விழா

இந்தப் பல் மருத்துவப் பிரிவு 1953-ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது. சென்னைப் பொது மருத்துவமனையில் புறநோயாளர் பகுதியில் இயங்கி வந்தது. அப்பொழுது பிரிக்கப்படாத சென்னை மாநிலமாக இருந்தமையால் எல்லாப் பகுதியினருமாக 15 மாணவர்கள் சேர்க்கப்பட்டு இருந்தனர். ஒரே ஒரு பேராசிரியரும், ஓர் உதவிப் பேராசிரியரும் தான் இருந்தனர். ஆனால், இன்று மருத்துவக் கல்லூரி பல் மருத்துவப் பிரிவில் 10 பேராசிரியர்களும், 22 உதவிப் பேராசிரியர்களும் பணியாற்றுகின்றனர்!

முதன் முதலில் மருத்துவப் பிரிவு தொடங்கப்பட்டபொழுது மாணவர்களாக இருந்தவர்கள் இன்று தென்னகத்தின் பல்வேறு மருத்துவக் கல்லூரிகளின் பல் மருத்துவத்துறையின் தலைவர்களாக இருக்கின்றனர்.

1953-க்குப் பின் படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்த சென்னை மருத்துவக் கல்லூரி பல் மருத்துவப் பிரிவுக்கு 1962-ஆம் ஆண்டில் தனியான கட்டடம் அமைக்கப்பட்டது. பிறகு மாணவர்களின் எண்ணிக்கை 45 ஆக உயர்த்தப்பட்டது.

1966-67-ல் பல் மருத்துவத் துறையில் மேல்நிலை பட்டப் படிப்பு இங்கு தொடங்கப் பட்டது. பல் மருத்துவத்தின் பல் வேறு பிரிவுகளுக்கான மேல்நிலை பட்டப் படிப்புகள் இங்கு உள்ளன. இந்தியாவில் உள்ள பெரிய பல் மருத்துவப் பிரிவுகளில் ஒன்றாக இது திகழ்கிறது.

இங்குப் பணியாற்றும் பேராசிரியர்கள் வெளிநாடுகளிலுள்ள பல் மருத்துவத்திலும் பயிற்சிகள் பெற்றுள்ளனர்.

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், தென்கிழக்கு ஆசியாவிலேயே உள்ள பல் மருத்துவத் துறையில் பல்வேறு வசதிகளுடன் கூடிய பல் மருத்துவப் பிரிவுகளில் இது ஒன்றாகத் திகழ்கிறது.

### இலவச பல் பரிசோதனை முகாம்

பல் மருத்துவப் பிரிவின் வெள்ளிவிழாவை முன்னிட்டு ஊரகப்பகுதிகளில் வாழும் மக்களும் பல் மருத்துவ வசதிகளைப் பெற்றிட 'இலவசபல் பரிசோதனை முகாம்கள்' நடத்தப் பட்டன.

மதுரை மாவட்டத்தில் அனுப்பானடி, சிந்தாமணி, டி. கல்லுப்பட்டி. இராமநாதபுரம் மாவட்







டத்தில் ஆத்திப்பட்டி, திருநெல்வேலி மாவட்டத்தில் வீரபாண்டியன் பட்டினம், தென்னார்க்காடு மாவட்டத்தில் வடலூர், வட ஆர்க்காடு மாவட்டத்தில் காவனூர், தர்மபுரி மாவட்டத்தில் காவேரிப்பட்டிணம், திருச்சி மாவட்டத்தில் அமூர், நீலகிரி மாவட்டத்தில் சோலூர், கோயம்புத்தூர் மாவட்டத்தில் செல்லப்பாளையம், சேலத்தில் குமாரப்பாளையம், தஞ்சாவூர் மாவட்டத்தில் சீர்காழி, பாபநாசம், திருக்காட்டுப் பள்ளி, செங்கற்பட்டு மாவட்டத்தில் முடிச்சூர், போரூர் ஆகிய ஊர்களில் இம்





## இளமையிலேயே பல்லைத் திருத்துவது ஏற்ற செயலாகும்.

பற்களைத் திருத்தி ஒழுங்குபடுத்தும் மருத்துவ முறைக்கு ஆங்கிலத்தில் ஆர்த்தோடான்டிக்ஸ் என்று பெயர். கிரேக்க மொழியில் -'ஆர்த்தோஸ்'' என்றால் சரியான, திருத்தமான என்று பொருள். 'டான்ஸ்'' என்றால் பல் என்று பொருள். இந்த இரண்டு சொற்களிலிருந்து உருவானது ''ஆர்த்தோடான்டிக்ஸ்'. கோணல் மாணலாயுள்ள பற்களையும், சரியாய்ப் பொருந்தாத தாடைகளையும் ஒழுங்குபடுத்தி, பல் வரிசையையும் முகத் தோற்றத்தையும் சரிப்படுத்தி விடும், இந்தச் சிகிச்சை பல் மருத்துவத்திலே ஒரு தனிப் பகுதியாகும்.

ஒரு குழந்தையின் பல் அமைப்புகள் மிகவும் ஒமெங்கீனமாயிருந்தது. அதனால் அதன் தோற்றமும மன நிலையும் பாதிக்கும் படியிருந்தால, பல் மருத்துவர் சாதாரணமாய் அதன் முக அழகை மேம்படுத்துவதில்தான் அதிக அக்கறை காட்டுவார். ஆனால், இப்போதெல்லாம், பற்களின் ஆரோக்கியம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில்தான் முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது. ஏனெனில், பற்கள் ஒழுங்காய் அமைந்திருந்தால், வரிசை ஒழுங்காயிருந்தால், ஈறு நோய் ஏற்படுவதற்கான நிலைகளும் குறைந்து போகும். பெரியவர்கள் பல்லை இழப்பதற்கு இந்த ஈறு நோய் தான் முக்கிய காரணம்.

குழந்தையின் பற்கள் ஏன் கோணலாய் இருக்கின்றன? அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். பெற்றோர்களில் ஒருவர் பெருத்த எலும்புகளும் பெரிய பற்களும் உடையவராயிருக்கலாம். மற்றொருவர் சிறுத்த எலும்பு உடையவராய் இருக்கலாம். அவர்களுடைய பரம்பரைத் தன்மைகள் ஒன்று சேருவதன் மூலம் குழந்தைக்கு, அதன் தாடைகளுக்குப் பொருத்தமில்லாத பெரிய பற்கள் அமைந்து விடுகின்றன. அதனால் பெரிய கடைவாய்ப் பற்கள் முளைக்கும் பொழுது, முன் பற்கள் கடிப்பதற்கு ஏற்பச் சரியாய்ப் பொருந்தாதபடி முன்னோக்கித் தள்ளப்படுகின்றன. அத்துடன், குழந்தைப் பருவத்துப் பழக்கங்களும் இதற்குப் பெரிதும் காரணமாயிருக்கின்றன. நாக்கை வெளியே நீட்டிக் கொண்டிருப்பது, கட்டை விரலைச் சப்புவது, பென்சிலைக் கடித்து மெல்லுவது, பாடங்களை எழுதும்போது முகத்தில் கையை ஊன்றிக் கொண்டு வெகு நேரம் ஒரு பக்கமாய்ச் சாய்ந்து கிடப்பது இவை போன்ற கெட்ட பழக்கங்களும் இதற்குக் காரணமாயிருக்கலாம்.

குழந்தைப் பருவத்தில் முளைக்கும் பால் பற்களில் ஏதாவது ஒன்று விழவேண்டிய காலத்திற்கு முன்னமே விழுந்து விடுவதனாலும் அதையடுத்துள்ள பல் நகர்ந்து விடக்கூடும். குழந்தை பிறக்கும்போதோ, இளங் குழந்தைப் பருவத்திலோ ஏற்படக்கூடிய காயத்தாலோ, நீண்ட நாட்களாய் இருந்து வரும் ஜீரணக் கோளாறாலோ, தொண்டையில் சதை வளர்வதாலோ, உள் நாக்கு வீங்குவதாலோ, ஏதேனும் உடம்புக்குப் பொருந்தாமையால் ஏற்படும் 'அலர்ஜி'யாலோ, வாய் வழியாய் மூச்சு



முகாம்கள் 23-7-78 முதல் 29-7-78 முடிய நடைபெற்றன.

இதனால் 25,000 மக்கள் பயனடைந்தனர்.

நகர்ப்புற மக்கள் மட்டுமல்லாது ஊரகப்பகுதி மக்களும் பல் மருத்துவத்தின் அவசியத்தை உணர இந்த இலவச பல் பரிசோதனை முகாம் வழிவகுத்துள்ளது. கிராமப்புற மக்களுக்கு நல்வாழ்வுப் பணிகள் எளிதில் கிடைக்க வாய்ப்பளித்த இப்பணியினை எல்லாரும் பாராட்டுவார்கள் என்பது உறுதி!

—மாமூலன்.

விடுவதாலோ சில பிரச்சினைகள் ஏற்படலாம்.

பல் வரிசைத் திருத்தத்தில், பற்களை நேராக நிமிர்த்துவதற்கு அவைகளைப் பிடித்துக் கொண்டிருக்கும் எலும்பைத் திருத்த வேண்டும். திருத்தத்துக்கான சாதனங்களைச் சரியாகப் பொருத்தினால் அவைகள் பற்களை அழுத்தும். அந்தப் பற்கள் சம்பந்தப்பட்ட எலும்பை அழுத்தும். அப்போது, நகர்ந்து வரும் ஒவ்வொரு பல்லுக்கும் இடம் கிடைப்பதற்காகச், சில செல்லுகள் சேர்ந்து அந்த எலும்பைப் பின்னே தள்ளும். திருத்த வேண்டிய பல், இவ்வாறு மெது மெதுவாக இடம் மாறுகிறது. பல பேருக்கு பற்கள் ஒழுங்காக அமைந்து சீராக வேலை செய்வதற்காகவும், தோற்றம் சரியாய் அமைவதற்காகவும் ஒருபல்லையோ பல பற்களையோ கூடப் பிடுங்க வேண்டியிருக்கும்.

பற்களை நகர்த்தி விடுவதற்காக உபயோகிக்கும் சாதனங்கள் அகற்றி விடக் கூடியவையாக இருக்கலாம். அல்லது அங்கேயே பொருத்தி விட்டுவிடக் கூடியவையாகவும் இருக்கலாம். அவை உலோகத்தால் செய்தவையாகவோ, பிளாஸ்டிக்கால் செய்தவையாகவோ, இரண்டாலும் ஆனவையாகவோ இருக்கலாம்.

பல் திருத்தச் சிகிச்சையைச் சரியாகச் செய்து முடிப்பதற்கு ஒன்றரை ஆண்டு முதல் மூன்று ஆண்டுக் காலம் வரை ஆகக் கூடும். ஆகவே, சிகிச்சை செய்து கொள்ப வரும் அவருடைய பெற்றோர்களும் மருத்துவரோடு ஒத்துழைப்பது மிகவும் அவசியமாகும். இம்மூன்று தரத்தாரும் இசைந்து வேலை செய்தால்தான் பல் திருத்தம் சரியாக நடைபெறும். வீட்டிலே தாங்களாக என்னென்ன செய்து கொள்ள வேண்டும், சிகிச்சைக்குரியவரை எப்படிக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்பது பற்றி மருத்துவர் கூறும் ஆலோசனைகளைச் சரியாய்க் கடைப்பிடித்தாக வேண்டும். இல்லையேல் சிகிச்சை மிகவும் கடினமானதாகிவிடும். காலமும் அதிகமாகிவிடும்.

மருத்துவச் சிகிச்சை முடிந்த பிறகு, பற்கள் பிடுங்கப்பட்ட இடங்களில் புதிய எலும்பு வளரும் வரை, நகர்ந்துள்ள பற்களை அந்த இடங்களிலேயே நிறுத்தி



வைப்பதற்காகப் பிடிப்புக் கம்பியொன்று போடப்படுகிறது.

பல் திருத்தச் சிகிச்சைக்கு வயது வரையறை ஒன்றும் கிடையாதென்று சொல்லலாம். ஆயினும், பற்கள் மிகவும் வேகமாய் வளரக் கூடிய பருவம் (அதாவது பதினொரு வயது முதல் பதினைந்து வயது வரை) மிகவும் ஏற்றதென்று கருதப்படுகிறது. அனுபவத்திலே, சிலருக்கு ஐம்பதுக்கு மேற்பட்ட வயதில்கூட பிரமாதமான பயன் கிடைத்திருக்கிறது.

நிலையான பற்கள் சீர்கேடாக முளைத்து உறுதிப்பட்டு விடுவதற்கு முன்னமே, அவற்றைத் தடுத்துத் திருத்தி விடுவதன் அவசியத்தைப் பெற்றோர்களுக்கு எடுத்துக் கூறி வற்புறுத்துவதன் மூலம் பல் மருத்துவர்கள் மக்களுக்கு மிகவும் முக்கியமான பணியாற்ற முடியும். உதாரணமாக, விழுந்து விட வேண்டிய காலத்தில் விழாமலே இருக்கும் பால் பற்களைப் பிடுங்குவதன் மூலமும், விழ வேண்டியதற்கு முன்னதாகவே பால் பற்கள் விழுந்து விடும் போது அந்த இடத்தில் தவறாகப் பல் முளைத்து விடாதபடித் தடைச் சாதனங்களைப் பொருத்தி வைப்பதன் மூலமும், சீர்கேடான பல் வளர்ச்சியைத் தடுப்பதற்குப் பெரிதும் உதவிடலாம்.

—(பல் மருத்துவப் பிரிவு வெள்ளி விழா மலரிருந்து தொகுக்கப் பட்டது.)



# பல் சொத்தை நோய்

பல் சொத்தை நோய் எல்லா நாடுகளிலும் பரவலாக காணப்படும் ஒரு நோய் ஆகும். பல்லில் ஏற்படும் சொத்தைகளை உரிய நேரத்தில் சரியான முறையில் கவனித்து சிகிச்சை அளிக்காவிடில் பற்சிப்பி, பல்தந்தினி, நரம்புத் திசுக்கள், இரத்தக் குழாய்கள் முதலியவற்றைச் சிதைத்துவிடும்.

வயதானவர்களைவிட இளம் வயதினரே பல் சொத்தை நோயால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இதற்குக் காரணமாக அமைவது அவர்கள் விரும்பி அதிகமாக உண்ணும் இனிப்புப் பண்டங்களும் ஒட்டும் தன்மையுடைய பொருட்களுமே ஆகும்.

இந்நோயின் முதல் அறிகுறியாக, பல்லின் மேல் புறத்தில் சுண்ணாம்பு போன்ற வெண்மை நிறத் தோற்றம் காணப்படும். இந்த வெண்மை நிறம் நோயின் பிற்பகுதியில் கருமையாக மாறி விடும். நோயின் உச்சக் கட்டத்தில் அதனால் உருவாகும் குழிகளில் உணவுத் துகள்கள் தங்கி, மிகுந்த வலியினையும், துன்பத்தையும் அளிக்கும்.

உணவு உட்கொண்ட பின்னர், வாயைச் சரியாகக் கொப்புளித்துச் சுத்தம் செய்யாவிடில் பற்களின் இடுக்குகளில் தங்கும் உணவுத் துகள்கள் மீது வாயிலுள்ள பாக்டீரியாக்கள் இரசாயன மாற்றத்தை ஏற்படுத்தி பற்சிப்பியினைக் கரைத்துக் குழிகளை உருவாக்குகின்றன. இக்குழிகளில் வசதியாகத் தங்கும் நோய்க் கிருமிகள் பற்களைத் துளைத்து, பற்கூழ்க் குழியை அடைவதால், பற்கள் அழியத் துவங்குகின்றன. பல் ஈறும் அழிக்கப்பட்டு, புண்ணும் சீழும் உண்டாகின்றன. இவ்வாறு ஒரு பல்லில் உருவாகும் சொத்தை மற்ற பற்களுக்கும் பரவுகிறது. உண்ணும் உணவுடன் சீழ் கலந்து குருதியோட்டத்தில் கலப்பதால் உடலின் மற்றப் பகுதிகளிலும் பல நோய்கள் உருவாகின்றன.

நோயாளிகள் பல் மருத்துவரை அணுகி, தங்கள் பற்களை அடிக்கடி சுத்தப்படுத்திக் கொள்ளவேண்டும். காலையிலும், இரவிலும், சாப்பிடுவதற்கு முன்பும், சாப்பிட்ட பின்பும், வாயை நன்றாகக் கொப்புளித்து, புருசு கொண்டு பற்களை நன்றாகச் சுத்தப்படுத்துவதன் மூலம் பல் இடுக்குகளில் உணவுத்துகள்கள் தங்குவதைத் தவிர்க்கலாம்.





குறைந்த பட்சம் ஆறு மாதங்களுக்கு ஒரு முறையேனும் மருத்துவரைக் கலந்தாலோசித்து உரிய சிகிச்சை பெற வேண்டும்.

இனிப்புப் பண்டங்களையும், அதிக மாவுச் சத்துள்ள பொருட்களையும் முடிந்தவரை உண்ணாமல் இருக்க வேண்டும். கருத்தரித்த பெண்களும், வளரும் குழந்தைகளும் புரோட்டீன்களை அதிகம் உட்கொள்ள வேண்டும். சர்க்கரைக்குப் பதில் தேன் சேர்த்துக் கொள்வது நல்லது. சுண்ணாம்பு, சாம்பல் சத்து நிறைந்த உணவுகள் பல் சொத்தையைத் தவிர்க்க உதவும். ஆப்பிள், பச்சைக் காய்கறிகள், பட்டாணிக் கடலை முதலானவைகளும் பல் சொத்தை வராமல் தடுக்க உதவும் உணவுப் பொருட்கள் ஆகும்.

புளோரைடு, பற்சிப்பியினைப் பலப்படுத்தி, பற்களின் மேற்பரப்பு அமிலங்களில் கரையாத வண்ணம் செய்கிறது. பாக்டீரியங்கள் இனப்பெருக்கத்தைத் தடுக்கிறது. தேய்ந்த பற்சிப்பிகளை மீண்டும் புதுப்பித்து வலிவுள்ளதாகச் செய்கிறது. புளோரைடினின் இத்தகு செயல்களால் பல்சொத்தை தவிர்க்கப்படுகிறது. துல்லியமான அளவுள்ள புளோரைடைக் குடிக்கும் நீரில் கலந்தால், பல் சொத்தை ஏற்படுவதைத் தவிர்க்கலாம். பால், ரொட்டி, உப்பு, பருப்பு வகைகளிலும் புளோரைடு உள்ளது.

# வளர்ச்சிப் பாதையில் தமிழகம்

## பி.சி. கணேசன் 2



**தந்தை பெரியார் நூற்றாண்டு விழா —மலர்—**

தந்தை பெரியார் நூற்ருண்டு விழா, இவ்வாண்டு செப்டம்பர் 17-ஆம் நாள் தொடங்குகிறது. 16-9-78 'தமிழரசு' இதழ், அதிகப் பக்கங்களுடனும் கண்கவர் வனப்புடனும் அரிய செய்திகளுடனும் தந்தை பெரியார் நூற்ருண்டு விழா மலராக வெளி வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிருேம்.

---

திறமையாகச் செயல்பட—மக்களுக்கு பலன் கிடைக்கும் வகையில் பணியாற்ற-லஞ்ச ஊழலற்ற ஆட்சி எந்த அளவுக்கு இன்றியமையாததோ அது போலவே வளர்ச்சித் திட்டங்கள் துரிதமாக நடைபெற வேண்டுமானுல் சமூகத்தில் அமைதியும், மக்களிடையே ஒழுங்கு உணர்ச்சி, கட்டுப்பாட்டு உணர்ச்சி ஆகியவை இருப்பது அவசியம்.

சமூக அமைதி இல்லாதபோது என்ன விளைவுகள் ஏற்படுகிறது என்பதை ஒரு கணம் சிந்தித்து பார்ப்பது பயனுடையதாக இருக்கும். சட்ட ஒழுங்கு சீர் குலையும் போது ஆட்சி இயந்திரத்தின் முக்கிய பகுதிகள் அனைத்தும் அந்த சட்ட ஒழுங்கினை பராமரிப்பதிலேயே ஈடுபட வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடுகிறது. மக்களின் ஆக்கப்பணிகளுக்கு முழு கவனம் செலுத்தி துரித கதியில் செயல்பட வேண்டிய அரசு இயந்திரம், அதை விட்டு விட்டு கலவரங்களை சமாளிப்பதிலும், அத்து மீறல்களை அடக்குவதிலும், பொதுச் சொத்துக்களுக்கு நாசம் விளைவிப்பதை தடுப்பதிலும், சமூக அமைதியைப் பாதுகாப்பதிலும் முழு நேரத்தையும் செலவிடும் அவசியம் ஏற்படுமானுல், வளர்ச்சிப் பணிகளை எவ்வாறு மேற்கொள்ள முடியும் என்பதை பொது நலனில் அக்கறை உடைய அனைவரும் சிந்தித்துப் பார்ப்பது அவசியம்.

அகில இந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகம் 1977-ல் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த போது தமிழகத்தில் அமைதிச் சூழ்நிலை நிலவியது என்ருலும் அதற்கு பின் வெகு விரைவில் இந்த அமைதிச் சூழ்நிலையைக் குலைப்பதற்கான முயற்சிகள், சமூக விரோத சக்திகளால் மேற்கொள்ளப்பட்டதை யாரும் சுலபத்தில் மறந்து இருக்க முடியாது. தொடர்ந்து பல நிலைகளிலும் போராட்ட சூழ்நிலையை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

மாணவர்கள் போராட்டம்;

விவசாயிகள் போராட்டம்;

ஆலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்;

பயிற்சி டாக்டர்கள் கிளர்ச்சி;

போக்குவரத்து ஊழியர்கள் வேலை நிறுத்தம்;

மீனவர்கள் மோதல்,

கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம்;

கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம்;

பொறியாளர்கள் உண்ணு விரதம்

என்று போராட்டங்களும், கிளர்ச்சிகளும் தூண்டிவிடப்பட்டு தொடர் கதை ஆயின. ஆனுல் அரசு எந்த சந்தர்ப்பத்திலும் நிதானம் இழக்கவில்லை. காரணம், அண்ணுவின் அணுகு முறையில் அசையாத நம்பிக்கை கொண்டுள்ள ஒருவரை முதல்வராகப் பெற்று இருக்கும் அரசு தன்னுடைய அணுகு முறையிலும் அண்ணுவின் பாணியையே கடைப்பிடிப்பதில் வியப்பு ஒன்றும் இல்லை.

உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு கொடுப்பதற்கு மட்டுமே காவல் துறையினர் பயன்படுத்தப்பட்டனர். போராட்டங்கள் நடைபெற்ற போதெல்லாம் சம்பந்தப்பட்ட பிரதிநிதிகளை அழைத்து அவர்களோடு மனம் விட்டுப் பேசி, அரசுக்கு உள்ள பொருளாதாரச் சிக்கல்களை எடுத்துச் சொல்லி, நியாயமான கோரிக்கைகளை எந்த அளவுக்கு

ஏற்க முடியுமோ அந்த அளவுக்கு ஏற்று செயல்படுத்த அரசு தவறியது இல்லை. இதை நடுநிலை உள்ளம் கொண்ட அனைவரும் நன்கு அறிவார்கள்.

தமிழக முதல்வரைப்பொறுத்த மட்டில் கோரிக்கைகளுக்காகப் போராடுகின்றவர்களைச் சந்திக்க எந்தச் சமயத்திலும் அவர் தயக்கம் காட்டியது இல்லை. குறிப்பாக, விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளைப் பலமுறை சந்தித்து, பல மணி நேரம் பேச்சு வார்த்தை நடத்தினார். அந்தக் கூட்டங்களில் பங்கு கொண்ட விவசாயப் பிரதிநிதிகள் அனைவருக்கும் அவர்களது கருத்துக்களை எடுத்துச் சொல்ல முழுமையான உரிமை வழங்கப்பட்டது. அனைவரும் தங்கள் கருத்துக்களை மனம்விட்டுச் சொன்னார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. வேறு எத்தனையோ அலுவல்களை கவனிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தும்கூட, விவசாயிகள் பிரச்சினைகளுக்கு விசேஷமான முக்கியத்துவம் கொடுத்து, அவர்கள் சொன்ன ஒவ்வொரு விஷயத்தையும் முதல்வர் கவனமாகக் கேட்டு, தேவையான சந்தர்ப்பங்களில் தானே குறிப்பு எடுத்துக் கொண்டு முடிவில் அவர்கள் எழுப்பிய பிரச்சினைகள் அனைத்துக்கும்-அவை சிறியவை ஆனாலும், பெரியவை ஆனாலும்-விளக்கமாகப் பதில் அளித்தார் என்பதை பங்கேற்ற விவசாயப் பிரதிநிதிகள் அனைவரும் நன்கு அறிவார்கள்.

அந்தப் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்ட விவசாய சங்கப் பிரதிநிதி ஒருவர் மனம் திறந்து கூறிய ஒரு விஷயத்தை இந்த நேரத்தில் நான் எண்ணிப் பார்க்கிறேன்.

''எவ்வளவோ அலுவல்கள் இருந்தும் மற்றவர்களைப்போல ஃபைல்களை பார்த்துக்கொண்டே எங்கள் கோரிக்கைகளையும் கேட்டுக் கொண்டு இல்லாமல் முதல்வர் நாங்கள் சொல்லுகின்ற அனைத்தையும் கவனமாகக் கேட்டு, தானே குறிப்பெடுத்துக் கொண்டதை உள்ளபடியே நாங்கள் பெருமையாகக் கருதுகிறோம். எங்கள் பிரச்சினைகள் மீது அவருக்கு உள்ள அக்கறையினைப் புரிந்து கொள்ள இதுவே போதும்.''

ஆக, தமிழக முதல்வர் பிறருடைய குறைகளில் உள்ள நியாயத்தை புரிந்து செயல்பட முழு முயற்சிகளையும் மேற்கொண்டு வந்து இருக்கிறார் என்பதனை கோரிக்கைகளுடன் அவரை சந்தித்தவர்கள் தெளிவாக உணர்ந்து இருக்க முடியும். ஆனால் வளர்கின்ற சமுதாயத்தில் பல தரப்பு மக்களின் தேவைகளும், அபிலாஷைகளும் வளர்ந்தபடியேதான் இருக்கும். மக்களின் தேவைகள் அனைத்தையும் ஓர் அரசு ஒரே மூச்சில் பூர்த்தி செய்து விட்டது என்பதற்கான ஆதாரத்தினையும் உலக வரலாற்றில் எந்தப் பகுதியிலிருந்தும் யாரும் எடுத்துக் காட்டிவிட முடியாது.

ஆனால் கோரிக்கைகளுக்காக கிளர்ச்சிகளில் ஈடுபடுவது கடைசியாகக் கையாள வேண்டிய ஆயுதமாக இருக்கவேண்டுமே தவிர, கோரிக்கைகளை அரசின் கவனத்திற்கு கொண்டு வருவதற்காக கிளர்ச்சிகளில் ஈடுபடுவது இந்த அரசைப் பொறுத்தவரையில் அவசியமில்லை என்பதைப் பல சந்தர்ப்பங்கள் தெளிவாக நிரூபித்து உள்ளன.

சமூக அமைதி என்பது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மிகவும் இன்றியமையாதது. பாரதப் பிரதமராக இருந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் சுதந்திரம் கொடுப்பதற்கு முன்னேயிருந்து இந்தக் கருத்தினை வலியுறுத்திச் சொல்லி வந்து இருக்கிறார் என்பது கவனிக்கத் தக்கது. இந்தியா சுதந்திரம் பெற்றவுடன் கூட்டு சேரா வெளிநாட்டுக் கொள்கையை (Policy of Non-alignment) நேரு தொடாந்து வலியுறுத்தி வந்தார். அதற்கு அவர் சொன்ன காரணங்களில் குறிப்பிடத்தக்கது ஒன்று உண்டு. ''இந்தியா ஒரு ஏழை நாடு. தொழில் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் வளர்ச்சி அடைய வேண்டிய ஒரு நாடு. உலக அமைதி நீடித்தால் மட்டுமே தான் இந்திய நாடு வளர்ச்சிப் பாதையில் செல்வது சாத்தியமாகும். உலகம் எங்கும் போர் சூழ்நிலை உருவாகி விடுமானால், இந்தியப் பொருளாதாரம் செழித்துச் சிறப்பது முடியாமல் போய்விடும். ஆகவே பாரத தேசத்தின் நலன் கருதி, உலக அமைதி இருக்க வேண்டும் என்பதில் நாம் அனைவரும் முழுக் கவனம் செலுத்துவது அவசியம் ஆகிறது. அது போலவே இந்திய அரசியல் ஸ்திரத் தன்மையோடு ( Stability ) விளங்கினால்தான் நாம் அமைதியாக இருந்து மக்கள் வளர்ச்சிக்குத் தேவையான பணிகளில் முழு மூச்சுடன் ஈடுபட முடியும். அமைதி இழந்த சமூகத்தில் வளர்ச்சி காண்பது என்பது முடியாத காரியம். ஆகவே உலக அமைதி நிலவ கூட்டு சேரா வெளிநாட்டுக் கொள்கையும், நாட்டில் அமைதி நிலவ அரசியல் ஸ்திரத்தையும் பிரதானமானவைகளாக நான் கருதுகிறேன்.''

இப்படித் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தியவர் பண்டித ஜவஹர்லால் நேரு. தேசத்துக்கு அவர் சொன்ன இந்த உண்மை ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் பொருந்தும். அனைத்து இந்திய அரசு, மக்களை சுபிட்சப் பாதையில் அழைத்துச் செல்ல என்னென்ன தேவைகளை நேருஜி வலியுறுத்தினாரோ, அதைப் போலவே மாநில மக்களின் நல்வாழ்வுக்கும் அமைதிச் சூழ்நிலை இருப்பது அவசியம் என்று தமிழக அரசும், முதல்வரும் கருதுவது மிகப் பொருத்தமானது.

எனவேதான் தமிழகத்தில் அமைதிச் சூழ்நிலை உருவாக அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்பினையும் தமிழக அரசு தொடர்ந்து கோரி வருகிறது. செயற்கையான தொல்லைகள் ஒரு புறம் இருக்க, இயற்கையின் சீற்றங்களும் சில சமயங்களில் அரசுக்கு எதிர்பாராத பல சோதனைகளை ஏற்படுத்தி விடுவது உண்டு. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்று நான்கு மாதங்களிலேயே தமிழகம் இது வரை கண்டிராத புயலுக்கும், வெள்ளத்துக்கும் இலக்காயிற்று. புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம், தஞ்சை, தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாயின. எதிர்பாராத விதமாக இயற்கை சீற்றம் கொள்வதை யாரும் முன் கூட்டியே கணித்து, பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது சாத்தியம் இல்லை. இயற்கை எப்போது, எங்கே, எந்த ரூபத்தில், ஊழித் தாண்டவம் புரியும் என்று கணித்துச் சொன்னவர்கள் இதுவரை இல்லை. ஆனால் இயற்கையின் உற்பாதங்கள் நிகழும்போது ஓர் அரசு செய்யக் கூடியதெல்லாம் கால தாமதமின்றி உடனடியாக நிவாரண வேலைகளை மேற்கொள்வதுதான். இயற்கையின் சீற்றம் பற்றிய செய்தி கிடைத்தவுடன் போர்க்கால வேகத்துடன் தமிழக அரசு நிவாரணப் பணிகளில் ஈடுபட்டது. தமிழக அரசின் துரித நடவடிக்கைகளை அப்போது அனைவரும் பாராட்டியதை பத்திரிகை செய்திகள் வாயிலாக நாம் அறிந்தோம்.

—தொடரும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.



# மதுவை ஒழித்து மகிழ்ச்சி நிலவச் செய்வோம்!



"சாராயம் நம் உடலையும், நடத்தையையும், அறிவையும் பாழாக்குகிறது!"

"மலேரியா முதலிய நோய்கள் உடலை மட்டுமே பாதிக்கும்; மது பானங்களும், கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும் பாதிக்கும்."

— அண்ணல் காந்தியடிகள்

"மதுவிலக்கு இல்லையேல் அரிசனங்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் விமோசனம் இல்லை!"

— பேரறிஞர் அண்ணா



வெளியீடு :—
இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

பதிவு எண். M. 8676

